# பாலைக்கலி

DURA TAMIL SANG

வித்துவான்

நா. இராமய்யா பிள்ளை

எழுதியது.

முன்னுரை

டாக்டர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

அவர்கள்.

சென்னை-20.

கிடைக்குமிடம்

33, மோதிலால் ரோடு 1-வது தெரு,

மதுரை.

உரிமை ஆசிரியர்க்கு

மதுரை
சி. எம். வி. பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

# பதிப்புரை.

இந்நூலை வெளியீட்டகங்கள் வெளியிட்டால், குறைந்த விலையில் வெளியிடுவதுடன் பல நிலையங்களையும் விற்பனையாளர்களையும் பிடித்துத் தமிழ்நாடு முழுவதும் பரப்பும் என்று யான் கருதினேன். எனவே இந்நூலை வெளியிட வெளியீட்டகங்களைத் தேடினேன். அவைகள் இவ்வேலையில் முனையாததால் இந்நூல் அச்சாகி வெளிவர இரண்டு ஆண்டுகள் ஆயின.

'இலக்கியப் பதிப்பகம்' என்று பெயர் வைத்துக் கொண்டு சிறுகதைகளையும் நாவல்களையும் வெளியிடுகிறார்களே தவிர உண்மை இலக்கியமாகிய சங்க இலக்கியங்களை வெளியிடத் தயங்குகிறார்கள். சங்க இலக்கியம் கடுநடை யுடையவை என்பது அவர்கள் எண்ணம். மக்கள் வாங்கிப் படிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறார்கள். தங்கள் பயன் மிகவும் குறையும் என்று கருதுகிறார்கள். எனவேதான் வெளியிடத் தயக்கம் ஏற்படுகிறது.

தமிழ்நாட்டிலே புத்தக வெளியீட்டால் பெரும்பணம் குவித்துப் பேருடன் வாழும் பெரியார் ஒருவரை அடுத்து, "இதனை வெளியிட்டுத் தமிழ் மக்களுக்கு இலக்கியச் சுவை ஊட்டுங்கள்" என்று வேண்டினேன். அவர், "உங்கள் மொழிநடை மிகவும் நன்றாக இருக்கிறது; கொச்சையற்ற விறுவிறுப்பான நடை; தொடர்ந்து படிக்க ஆர்வமூட்டுகிறது; இருந்தாலும் இலக்கியத்தைப் பதிப்பித்துப் பணத்தை முடக்க விரும்பவில்லை" என்றார்.

இவ்வாறாக இம்முயற்சியில் காலம் கடந்துகொண்டே வந்தது. ‘நாமே வெளியிடுவோம்’ என்று துணிந்தேன்; வெளியிட்டிருக்கிறேன்; தமிழ்நாடு ஆதரிக்க வேண்டுகிறேன்.

வெளியீட்டகங்கள் வெளியிடத் தயங்கிய இந்நூலைச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் B. A. வகுப்பிற்குப் பாடமாக ஏற்படுத்தி உதவிசெய்தால், இலக்கிய ஊற்றம் தமிழ் நாட்டில் ஏற்படுத்தியதுடன் சங்க இலக்கியத்தை வெளியிட மறுத்த வெளியீட்டகங்களுக்கு ஒரு படிப்பினை யளிப்பது போல இருக்கும். அகப்பாட்டுக்களும் B. A. வகுப்பிற்குப் பாடமாக வருவதால், அரிய கருத்துக்களை அழகொழுகக் கொடுக்கும் ‘பாலைக்கலி’க்கும் ஆக்கமளித்து இந்நூலைப் பாடமாக ஏற்படுத்தி எனக்கு ஊக்கம் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

இந்நூல் அச்சாகும்போது உடனிருந்து புரூப்புக்களைக் கருத்துடன் படித்து உதவிய என் இனிய நண்பரும் மதுரை அர்ச்–மரியன்னை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியருமான உயர்திருவாளர் பண்டித—மீ. கந்தசாமிப் புலவரவர்களுக்கு என் நன்றி என்றும் உரித்தாகும்.

என்னை ஊக்குவித்து இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்தவரும், C. M. V. பிரஸ் மேலாளர் (Manager) ஆகியவரும் என் அன்பு கெழுமிய நண்பருமாகிய உயர்திருவாளர் A. வேணுகோபால் அவர்களுக்கும், யான் விரும்பிய முறையில் பொறுமையுடன் வேலை செய்தளித்த அவ்வச்சகத்தாருக்கும் என் நன்றி என்றும் உரித்தாகும்.

நூலாசிரியர்.

# நன்றியுரை.

பொருள் என்பது மக்கள் மதித்துப் பொருட் படுத்துவதுதான். அதனையே ஒழுக்கம் எனினும் அமையும். அகப்பொருள் புறப்பொருள் என்பதும் இப்பொருளே. பொருளின் பொருட்டே தலைவர்கள் தலைவியரைப் பிரிந்தனர். வெளிநாடு சென்றும் பொருளைத் திரட்டினர்.

இந் நூல் இத்தகைய பொருட் பிரிவையே குறிக்கோளாகக் கொண்டது. ஆதலின் அதற்கு வெளிநாடுகளுக்கும் சென்று வேண்டிய பொருள் (புகழ் கெழுமிய ஒழுக்கம்) திரட்டி இந்நாட்டின் சிறப்பை உலகறிய எடுத்துக்காட்டிய பொருள் நூல் வல்லுநர் ஒருவரின் முன்னுரை இந் நூலுக்குப் பொருத்தமாயிருக்குமெனக் கருதினேன். அதனுடன், அரசியல் பணியில் மேலோங்கி நின்ற ஒருவர் அணிந்துரையே இதற்கு அழகு செய்யுமென்று எண்ணினேன். காரணம், இப்பொருள் நூலை உலகம் ஏற்றுக்கொள்ள மிக உயர்ந்த நெறியில் செய்யுள் வடிவில் தந்த ஆசிரியனும் முடியுடை வேந்தனே. எனவே இந்த இரு காரணங்களாலும் உந்தப்பட்டு அரசியல் பொருள் நூலறிஞர் **ஆர். கே. சண்முகம் செட்டியார்** அவர்களுக்கு எனது கைப்பிரதியை அனுப்பினேன். அவர்களும் சங்க இலக்கியத்தின் இனிய சுவையை உணர்ந்தவர்களாதலின் தமக்குள்ள பல அலுவல்களிடையே இதை அன்புடனும் ஆர்வத்துடனும் கண்ணுற்று ஒரு அழகிய முன்னுரை எழுதியனுப்பியுதவி என்னை ஊக்கினார்கள். அவர்களுக்கு என்றும் எனது உளங்கலந்த நன்றி உரியதாகும்.

**நா. இராமய்யா**

# முன்னுரை.

## டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார்.

கொஞ்ச காலமாகத் தமிழ் மறுமலர்ச்சி அடைந்து வளர்ந்துகொண்டு வருகின்றதென்று தமிழ் மக்களாகிய நாம் பெருமையாய்ப் பேசிக்கொள்கின்றோம். தமிழ் நெடுங்காலம் வாடி உலர்ந்து போயிருந்ததா? வாடிய மலர் மறுமலர்ச்சி அடைந்ததா? இல்லை. தமிழ் மலர் என்றும் வாடாத இயல்பையுடையது. அப்படியானால் "மறுமலர்ச்சி" என்ற பேச்சில் என்ன பொருள் இருக்கின்றது. தமிழ் மக்களுடைய உள்ளம் நெடுநாளாய்க் காய்ந்து, தமிழ்மொழிப் பற்று என்னும் ஈரம் இல்லாமல் போய்விட்டது. "தமிழ் மறுமலர்ச்சி". என்பது தமிழனின் உள்ளத்தில் தோன்றியிருக்கும் மாறுபாட்டைத் தான் குறிக்கின்றது. "தமிழ் மணம்" என்றும் மாறவில்லை. ஆனால், கொஞ்ச காலமாய்த்தான் நாம் அம்மணத்தை அனுபவிக்கும் நுகர்ச்சியை மீண்டும் பெற்றிருக்கின்றோம்.

இந்தப் புதிய உணர்ச்சியைத் தமிழ் நாட்டில் எங்கும் காணலாம். எத்தனை திருவள்ளுவர் கழகங்கள்! எத்தனை கம்பர் விழாக்கள்! எத்தனை கதைகள், கட்டுரைகள், பத்திரிகைகள்! இவையெல்லாம் சரிதான். ஆனால் வறண்ட நிலமாகிய உள்ளத்தில் மலர்ச்செடிகள் வேரூன்றி வளர வேண்டுமென்றால், உயிரளிக்கும் பரிசுத்த நீர் வேண்டுமல்லவா? அத்தகைய நீர்ப்பெருக்கம் எங்கே? தண் தமிழிலுள்ள குன்றாச்சிறப்புடைய இலக்கியங்களே அந்த நீர்த்துறைகளாகும். நமது பண்டைய இலக்கிய நூல்களைச் சிறிதேனும் நாம் படித்தால்தான் தமிழ் மறுமலர்ச்சியின் பயனை நாம் அடைய முடியும். இல்லாவிடில் தமிழ் மலர்ச்செடிகள் வேரூன்றமாட்டா.

பழைய தமிழ் இலக்கியங்களைப் படிக்க வேண்டுமென்று அனேகருக்கு உண்மையான ஆசையுண்டு. ஆனால் அதற்கு வேண்டிய இலக்கணப் பயிற்சி பெரும்பாலான தமிழ் மக்களுக்கு இல்லை. பழைய உரையாசிரியர்களுடைய உரைகளும் எளிதில் புரிவதில்லை. சாதாரணத் தமிழ், மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் தமிழிலுள்ள எல்லா இலக்கிய நூல்களுக்கும் உரைகள் வெளியாகவேண்டியது மிகவும் அவசியம். இவ்வுரையாசிரியர் வித்துவான் இராமய்யா பிள்ளை முதலுரையில் சொல்லியபடி, "இலக்கணம் கற்றுத் தான் இலக்கியங்களை அனுபவிக்க வேண்டு'மென்றால், இலக்கணம் கற்கப்போவதுமில்லை, இந்த இலக்கியங்களை அறியப் போவதுமில்லை".

இராமய்யா பிள்ளை அவர்கள் கலித்தொகை — பாலைக் கலிக்கு எழுதியிருக்கும் உரையை நான் மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன். எல்லோருக்கும் எளிதில் புரியும் வண்ணம் ஒவ்வொரு பாட்டிற்கும் முகவுரை, பதப்பிரிவு அரும்பத உரை, இவைகளை நல்லமுறையில் இவர் கையாண்டிருக்கிறார்.

இவர் எடுத்துக்கொண்ட நூல் தமிழ் இலக்கியங்களில் மிகச்சிறந்த தொன்றாகும். எட்டுத்தொகை என்னும் நூல்களில் கலித்தொகை ஒன்று. கலிப்பாவில் எழுதப்பட்டதால் இந்நூலுக்குக் கலித்தொகை என்று பெயர். 'கலி' என்பதற்குச் செருக்கு, எழுச்சி, மகிழ்ச்சி என்பது பொருள்; களிப்பின் பெருக்கம் அல்லது ஆரவாரத்தைக் குறிக்கும் சொல். கலிச் செய்யுளில் உணர்ச்சிக்கு உரிய ஓசையும் இருக்கின்றது. இன்ப உணர்ச்சிக்குப் பொருந்தியது கலிச்செய்யுள் என்பது அறிஞர்களின் அபிப்பிராயம்.

நமது பழைய இலக்கியங்களின் அமைப்பும் மரபும் ஒரு தனிப்பட்ட பெருமையைக் கொண்டவைகள். அவைகளை நாம் நுட்பமாய் அறியவேண்டியது அவசியம். இந்த இலக்கியங்கள் 'அகம்' 'புறம்' என்று இரண்டு பொருள்களைப்பற்றியவை. 'அகம்' என்றால் உள்ளத்தில் நிகழும் காதல் நிகழ்ச்சியைப் பற்றியது. 'புறம்' என்றால் வெளிப்படையாகத் தோன்றும் வீரம், போர் இவைகளைப்பற்றியது. காதலைப்பற்றிய அகத்துறைப் பாட்டுகள் ஐந்திணைகளாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஒவ்வொன்றிற்கும் பொருந்திய ஒழுக்கங்களை விளக்கிக்கூறும். இந்த இலக்கிய மரபிலிருந்து தெரிவது என்னவென்றால் பண்டைத் தமிழ்மக்கள் இயற்கையோடு பொருந்தி வாழ்ந்தார்கள் என்பது.

மக்கள் உள்ளத்தில் தோன்றும் காதல் உணர்ச்சி, இவர்கள் பேசும் சொற்கள் இவர்கள் கையாளும் உவமானங்கள், இவர்களைச் சுற்றிய மரம், செடி, கொடி, பூக்கள், விலங்குகள், பறவைகள் இவர்கள் வணங்கும் தெய்வம்—இவையெல்லாம் தாங்கள் வாழும் இயற்கை உலகத்திற்குப் பொருந்தியவையாயிருக்கும். அகப்பொருள் நூல்களில் வரும் பாத்திரங்கள் நம்மைப்போன்ற சாமான்ய மக்களே. இவர்கள் வாழ்க்கையில் தெய்வங்களும், அரக்கர்களும், தெய்வலோகப்பெண்களும், வேள்வியும், மந்திர தந்திரங்களும் கிடையவே கிடையா. இந்த நூல்கள் நமக்குத் தனிப்பட்ட மகிழ்ச்சியை ஊட்டுவதற்கு இது ஒரு முக்கிய காரணம். நம் ஒவ்வொருவருடைய உள்ளக் கிளர்ச்சியையும் கவிஞன் தன் பாட்டு என்னும் கண்ணாடியால் நமக்கு எடுத்துக் காட்டுகின்றான்.

அகத்திணைப் பாட்டுகளில் அடங்கியிருக்கும் காதல் சுவையைப் படிப்பவர்கள் முற்றிலும் அனுபவிக்க வேண்டும் என்ற கருத்துடன் நம் முன்னோர் இப்பாட்டுகளுக்கு ஒரு முக்கியமான இலக்கண விதியை ஏற்படுத்தியிருக்கின்றனர். அதாவது ஐந்திணைபற்றிய காதல் பாட்டுகளில் வரும் தலைவன், தலைவி, பாங்கியர், தோழர் முதலிய எவரையும் அவர்கள் பெயரால் குறிப்பிடக் கூடாது என்பது.

" மக்கள் நுதலிய அகனைந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறஅர்.

(தொல்காப்பியம்)

பெயரைச் சுட்டிச் சொல்லுவதால், வேறு உணர்ச்சிகள் தோன்றி, காதல் உணர்ச்சியின் தூய்மையைக் குறைத்துவிடும் என்று கருதியே இந்த விதியை நியமித்திருக்க வேண்டும். கவிதையின் தூய்மையைப் பண்டைத்தமிழ் அறிஞர்கள் எவ்வளவு நுட்பமாய்க் காப்பாற்றி இருக்கின்றனர்!

கலித்தொகைக்கு நச்சினார்க்கினியருடைய அருமையான பழைய உரை இருக்கின்றது. ஆனால் அந்த உரை சாமான்ய மக்களுக்கு எளிதில் புரிவதில்லை. கலித்தொகையிலுள்ள ஐந்துகலிகளில் ஒன்றாகிய பாலைக்கலிக்கு இராமையா பிள்ளை அவர்கள் எளிய இனிய உரையை நமக்குக் கொடுத்திருக்கிறார். இது போலவே மற்றைக் கலிகளுக்கும் இன்னும் மற்றைச் சங்க நூல்களுக்கும் இவர் உரை எழுத வேண்டுமென்பது என் விருப்பம்.

கோயமுத்தூர்
20—6—'49.

**ரா. க. சண்முகம் செட்டியார்.**

# பொருளடக்கம்.

| | | பக்கம் |
|---|---|---|
| | முதலுரை | 1 |
| 1 | உண்மைப் பொருள் | 10 |
| 2 | காதலனைக் காடு தடுக்கும் காட்சி | 15 |
| 3 | பறவையும் பறவாப் பாதை | 19 |
| 4 | பொருளினும் சிறந்தோர் | 22 |
| 5 | கண்ணீர் குடிநீராதல் | 25 |
| 6 | பொருள் உயிர் தருமா? | 27 |
| 7 | நிலையில்லாப் பொருளும் நிலைபெறும் பொருளும் | 30 |
| 8 | சிறந்தானை வழிபட்டுச் சென்றாள் | 33 |
| 9 | நெஞ்சுடைந்து உயிர் விடுவாள் | 96 |
| 10 | மாக்களின் கருணை | 39 |
| 11 | இளமையும் காமமும் | 42 |
| 12 | பேச்சு விளையாட்டு | 44 |
| 13 | உறுப்பின் சிறப்புகள் | 48 |
| 14 | இளமையை மீட்கலாமா? | 51 |
| 15 | தெய்வம் தொழுதலும் குற்றம் | 55 |
| 16 | மருத்துவன் ஊட்டிய மருந்து | 58 |
| 17 | இல்வாழ்க்கைச் சிறப்பு | 61 |
| 18 | பேதைப் பெண்ணானேன் | 63 |

| | | |
|---|---|---|
| 19 | பலவளம் கூறும் நிலம் | 65 |
| 20 | அவற்றுள் எது உண்மை? | 68 |
| 21 | கடன் வாங்குதலும் கொடுத்தலும் | 70 |
| 22 | 'இனி உண்ணேன்; வாறேன்' | 73 |
| 23 | கனவில் புலம்பல் | 76 |
| 24 | வீமசேனனும் யானையும் | 79 |
| 25 | நாடு காத்தல் | 82 |
| 26 | மதுரையையும் மறந்தாரோ | 86 |
| 27 | தூது விடவேண்டாம் | 90 |
| 28 | பிரிந்தவர் பரிந்து வந்தார் | 93 |
| 29 | பகைவரினும் நடுங்கினாள் | 97 |
| 30 | அவர் அழகைக் காண அவை விடுமா? | 101 |
| 31 | இளவேனிலுக்கு விருந்து செய்வோம் | 103 |
| 32 | "துணை தந்தார்" | 105 |
| 33 | நன்றியுள்ள மரம் | 109 |
| 34 | "எடுத்த காரியம் வெற்றி யடைக" | 113 |
| 35 | கவியின் இசையரங்கு | 117 |

# பாலைக்கலி

## முதலுரை.

என் நண்பர் ஏதாவது ஒரு தமிழ் இலக்கியநூல் பற்றி எழுத என்னை நெடுநாளாகத் தூண்டிக்கொண்டே வந்தார். எந்த நூலைப்பற்றி எழுதுவதென்று முடிவாகாமலே இருந்தது. நாட்கள் மாதமாகி, மாதங்கள் வருடமாகி நகர்ந்தன. ஆனால், அப்போதைக்கப்போது ஒரு சில கட்டுரைகள் எழுதி அவரிடம் காட்டியதுண்டு. படித்த சான்றோர் முதல் தமிழ்த்தெரிந்த சாதாரண மக்கள்வரை யாவரும் அறிந்து மகிழும் வண்ணம் ஏதாவதொரு சங்க நூலை இனிய தமிழில் எழுதவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். வசதியும் சமயமும் நூலைப்பற்றி எழுதத் தூண்டவில்லை.

என் நண்பர் கோவலன் கதையை (சிலப்பதிகாரத்தை) ஆவலாய்ப் படித்தவர். கண்ணகி கதையை நன்றாய்ப் படித்தவர். சிலப்பதிகாரத்தைப் பற்றிய அத்தனை நூல்களையும், எல்லாப் பதிப்புகளையும் அலசிப் பார்த்தவர். மதுரையில் தமிழ்த்திருநாள் ஒன்று நடந்தது. மத்திய இந்திய மத்திய அரசாங்க நிதி மந்திரி திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கி, அதை நடத்திவைத்தார்கள். அன்னார், சேரன் செம்மல் இளங் கோவடிகள் இயற்றிய இனிய சிலப்பதிகாரத்திற்கு இனிய உரை ஒன்று எழுதியிருந்தார். அந்த உரையையும் அலசி விடவேண்டுமென்ற அவா என் நண்பருக்கு இருந்தது. தமிழ்த் திருவிழாவில் ஆர். கே. எஸ். உரைப் புத்தகம்

விற்கப்பட்டது. அதை வாங்கி அலசிப்பார்த்து விட்டார். அதேபோல ஒரு உரை கலித்தொகைக்கும் எழுதி வெளியிட வேண்டுமென்று என்னிடம் வற்புறுத்தினர். காலமும் வசதியும் எழுத ஒத்துவந்தன. ஒருவாறு எழுதி முடித்தேன்.

இந்நூலில் பழைய இலக்கண வரம்புமீறிச் சில இடங்கள் இருக்கலாம். அந்த இலக்கணத்தையே கவனித்து இருந்தோமானால், நம் நாட்டு மக்கள் நமது இனிய இலக்கியங்களை என்றுதான் அனுபவிக்க முடியும். இலக்கணம் கற்றுத்தான் இந்த இலக்கியங்களை அனுபவிக்க வேண்டுமென்றால், இலக்கணம் கற்கப்போவதுமில்லை, இந்த இலக்கியங்களை அறியப் போவதுமில்லை. நம் நிலைக்கு அவர்களை இழுத்து நயங்களை அனுபவிக்கச் செய்வதிலும், நாம் அவர்கள் நிலைக்குச்சென்று நயங்களை ஊட்டி, ஆசைகாட்டி, நம் நிலைக்குக் கொண்டுவந்து, தமிழ்த்தாயின் பெருமையை அறியும்படி செய்து, தமிழுக்கு ஆக்கம்தேடி, அணிபூட்டி மகிழலாம் என்பதே எனது ஆசை. இலக்கிய உணர்வு வளர வளர இலக்கண உணர்வு வளருமன்றோ!

சங்க நூல்களைப் பத்துப்பாட்டு எட்டுத்தொகை எனப் பகுத்து, அவற்றிலே அகம் புறம் என வகுத்திருக்கின்றனர், நமது முன்னோர். மனதிலே நிகழும் இன்ப நினைவுகளைப் பிறருக்கு வெளிப்படையாக எடுத்துக் கூறுமலிருப்பதெல்லாம் அகம் என்று ஆன்றோர் கொள்கின்றனர். இங்கு எடுத்துக்கொண்ட நூல் "கற்றறிந்தார் போற்றும் கலித்தொகை." இந்நூல் அகநூல்; பாலை, குறிஞ்சி, முல்லை,

மருதம், நெய்தல் என்ற ஐந்து பிரிவுகளைக்கொண்டது. அவற்றில் முதலிலே உள்ள பாலைக்கலிக்கே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப்பாலைக் கலியை இயற்றியவன் ஒரு அரசன். பெருங்கடுங்கோ என்பது பெயர். பாலைக் கலியை அழகுபடப் பாடியதால் பாலைபாடிய பெருங் கடுங்கோ என்பது இவன் பெயராயிற்று. சேர நாட்டு அரச பரம்பரையில் திரமிக்க தமிழ்க்கவிகள் அந்தந்தக் காலங்களில் நந்தமிழ் நாட்டிற்குத் தொண்டு செய்யத் தோன்றியிருக்கிறார்கள்! இவன் இனிய வாக்கும், நுணுகிய ஆராய்ச்சியும், கெம்பீரப்போக்கும், அரசமேதையும் இங்குக் கவனிக்கத்தக்கன. பாலைக்கலியில் அரசன்-அமைச்சன் குணங்களையும், செங்கோல்—கொடுங்கோல் தன்மைகளையும் தெளிவுபட விளக்கிச்செல்கிறான். காட்டு மிருகங்களின் இயற்கைக் குணங்களைக் கண்ணாடியில் காட்டுவது போல் காட்டிவிடுகிறான். காதலர்களின் காதல் நுணுக்கங்களைக் கண்ணால் காண இருப்பதுபோலப் பாக்களில் பொதிந்து வைத்திருக்கிறான். அரசனுடைய உயர்ந்த கெம்பீரமுடைய தமிழ் நடையழகும் உலகச்செய்தி நடவடிக்கைகளும் இவன் கவிகளில் கண்டுகளிக்கலாம். உலகத்தை நீர்வளம் நிலவளம் செய்து, மக்கள் பசிப்பிணி போக்கி, நோய் நீக்கி, இன்பம் ஆக்கி, அரசன் ஆளவேண்டுமென்ற உயர்ந்த கொள்கைகளும் இவன் கவிகளில் மிளிர்கின்றன. இவன்உயர்ந்த கருத்துக்களையும், தமிழ் இலக்கியச் சுவைகளையும், தமிழ்த்தெரிந்த—இலக்கணம் கல்லாத மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவுடனேயே இந்நூல் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது.

தமிழ் இலக்கிய அகநூல்களைக் கற்கும்போது களவியல், கற்பியல்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். குணத்தாலும், உருவாலும், திருவாலும், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவனும் தலைவியும் இயற்கை கூட்டிவைக்கச் சந்திக்கிறார்கள். இதுவரை தலைவன் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறான். எவ்வித உணர்வும் அவன் நெஞ்சில் தோன்றவில்லை. இதுவரை தலைவி எத்தனையோ ஆடவர்களைப் பார்த்திருக்கிறாள். எவ்வித உணர்வும் அவளுக்குத் தோன்றவில்லை. இவர்கள் இருவரும் தற்செயலாகப் பார்த்துவிட்டார்கள். பார்த்தவுடன் இருவர் மனதிலும் ஒருவித உணர்ச்சி பிறக்கிறது. அந்த உணர்ச்சி மறுபடியும் பார்க்கத்தூண்டுகிறது. கண்கள் கருத்தைத் தொட்டுப் பார்க்கின்றன. காதல் ஊறுகிறது. ஒருவரும் அறியாமல் இருவர் மனதிலும் மாறிப்புகுந்துவிட்டனர். கருத்தழிந்து, உணர்ச்சியில் மிதந்து, காதல் குளத்தில் குதித்துவிட்டனர்! சந்தர்ப்பம் மற்றவர்களைப் பிரித்து இவர்களைத் தனியாக ஒதுக்குகிறது. பைய நெருங்குகிறார்கள். நாணத்தால் நங்கை பேசவில்லை. தலைவன் வாலறிவுடன் வார்த்தையாடுகிறான். உணர்ச்சிபோய் உற்சாகம்கொண்டு ஒருவரை ஒருவர் தெரிந்துகொண்டு உரையாடுகிறார்கள். இனிமேல் ஒருவரை ஒருவர் பிரிவதில்லை என்று உறுதி கொள்கிறார்கள். "நின்னில் பிரியேன் அஞ்சல் ஓம்பு" என்று தலைவன் கூறுகிறான்.

இப்படி இங்கே இருவர் மனமும் ஒத்த உள்ளப் புணர்ச்சி நடக்கிறது. பின்பு இருவரும் பிரிந்து போகிறார்கள். மறுநாளும் சந்திக்கிறார்கள். அளவளாவுகிறார்கள்;

பிரிகிறார்கள். இதைச்சில நாட்கழித்துத் தோழியும் பாங்கனும் அறிகிறார்கள். பின்பு ஊரார் அறிகிறார்கள். அவை அம்பல் என்றும் அலர் என்றும் கூறப்படும். அலருக்கு முந்தியது அம்பல். அம்பல் என்பது சிலர் அறிந்து தங்களுக்குள்ளே பிறரறியாமல் குறிப்பாலும் முகத்தாலும் பேசிக்கொள்ளுதல். அலர் என்பது பலர் அறிந்து ஊரறிய நாடறியப்பேசுதல். உற்றார் உறவினர் மற்றுமுள்ள யாவரும் தலைவனைத்தெரியாது, அறக்காதலை அறியாது, அவனுக்குப் பெண்கொடுக்க மறுக்கும்போது, தன் மனதால் காதலித்த காதலனைத்தவிர மற்றவரை மணப்பது அறக்காதல் அன்று என்று அறிந்த தலைவி, தன் காதலனுடன் காடுகடந்து சென்று மணந்துகொள்ள மனம் ஒருப்படுகிறாள். காதலனுடன் காட்டுவழி நடந்த மங்கையை மீட்டிவரச் செவிலித் தாய் செல்கிறாள். அறிவு நிறைந்த அந்தணர் சிலர் அவளைக் கண்டு, தக்கது செய்த தலைவியைப் புகழ்ந்து காதலறம் செவிலிக்குச் சில உதாரணங்களால் (8-ம் பாட்டில்) காட்டித் திருப்புகிறார்கள். இப்படி எல்லாம் திருமணம் நிறைவேறுவதற்கு முன்பு நடப்பனவெல்லாம் **களவு** என்று கூறுகிறார்கள் ஆசிரியர்கள்.

அவனும் அவளும் பார்த்து ஒருவரை ஒருவர் அவர் தம் மனதாலே—பிறர் எவருக்கும் தெரியாமல்—உரிமைப் படுத்தி விட்டதால் களவு என்று பெயர் கொடுத்தார்கள். அவள் மனதை அவளுக்கே தெரியாமல் கொள்ளை கொண்டான் இவன். இவன் மனதை அப்படியே கொள்ளை கொண்டாள் அவள்

**கற்பு** என்பது முறைமையாகும். அவளும் இவனும் சேர்ந்து இல்லற வாழ்க்கை நடத்துவது முறைமையாகும்.

ஏன்? இவனுக்கு அவள் உரிமையாகி விட்டாள். அம்பலும் அலரும் அவர்களைச் சுற்றித்திரிந்தன அல்லவா? ஆதலினால் தான் அது முறைமையாகும்.

விளக்கேற்றிவைக்கிறோம். வீடுமுழுதும் வெளிச்சமா யிருக்கிறது. விளக்கின் சுடரைத் தொடுவதில்லை. தொட்டால் சுட்டுவிடும். சுடர் இல்லாவிட்டால் வெளிச்சமும் இருப்பதில்லை. அதுபோல, இல்லற விளக்கை ஏற்றிவைத்தால் நாடுமுழுதும் வெளிச்சமாயிருக்கும். சுடர் விளங்கித் தன்னுடைய ஒளியால் எல்லோருக்கும் வெளிச்சம் தருவது போல இல்லறத்தால் தானும் விளங்கி உலகத்தையும் விளக்கலாம்; உலகிற்கு வழி காட்டலாம். சுடரைத்தொட்டுக் கையைச் சுட்டுக்கொள்ளும் பேதை மக்களைப்போல, இல்லறத்திலே காமத்தை மாத்திரம் விரும்பி, தங்களை மற்றவர்கள் 'காமி' என்று கூறவும், உலகத்திற்கு எவ்வித வழி காட்டியாயும் இல்லாமலும், தங்களைச் செய்துகொள்ளும் பேதை மக்களும் உண்டு. சுடரை அவித்து விட்டால் வெளிச்சம் இராது. இல்லறம் இல்லாவிட்டால் உலகமே இருண்டுவிடும். துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் ஆற்றுபவர் யார்? ஒரு விளக்கின் சுடரிலிருந்து மற்றொரு விளக்கை ஏற்றுவார்கள். அதுபோல, இன்பத்திற்காக மாத்திரமில்லாமல் நாட்டிற்குச் சேவை செய்யும் நன்மக்களையும் தோற்றுவிக்க இன்பத்தில் மூழ்குவது இயற்கை. தம்மரபை இருவரும் பேணிக்காப்பதே மேன்மை. இங்ஙனம்தான் தமிழ் நாட்டு முறைமை இலங்கி வந்தது. இந்தச் செய்திகளைத்தான் தமிழ் இலக்கியக் கருவூலங்கள் எடுத்து இயம்புகின்றன.

இல்லற வாழ்க்கை நடத்திவரும்போது சில கடமைகள் செய்யவேண்டியிருக்கின்றன. அவற்றிற்குப் பொருள் தேடவேண்டியிருக்கிறது. தலைவியைப் பிரிந்துபோகவேண்டும். தலைவி காதலின் காரணமாகத் தன்னைவிட்டுப் பிரியக் கூடாதென்று கூறுகிறாள். தோழியும் அதை வற்புறுத்துகிறாள். தலைவன் கடமையை உணர்ந்து பிரிந்து செல்கிறான்.

கல்விக்காகப் பிரிவது உண்டு, நம் நாட்டிலிருந்து மேல்நாட்டிற்குச் சில இளைஞர்கள் ஆராய்ச்சிக் கல்விக்காகப் போவதுபோல.

தன் நாட்டின்மேல் பிற அரசன் படையெடுத்து வரும்போது தன் நாட்டைக்காத்துச் சேவைசெய்யத் தலைவியை விட்டுப்பிரிவது உண்டு.

இருபெரும் அரசர்களுக்குச் சண்டைமூள, சண்டையில் மண்டையுடைந்து மக்கள் மாள, மன்னர் விரோதத்தால் மக்கள் பலியாவதுகண்டு வருந்தி, அந்த இரு அரசர்களையும் சமாதானம் செய்து, அன்பை (அஹிம்சா முறையை) அவர்களுக்கு அறிவுறுத்தி, உண்மையை (சத்தியத்தை)க் கடைப்பிடிக்கத் தக்க வழிகாட்டித் திரும்பத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிவதுண்டு.

இங்ஙனம் பிரிவுகள் பலவுண்டு. இப்படி இல்லறவாழ்க்கையில், பிரிந்து கூடினால் தான் இன்பம் அதிகமாகும். “பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ”.

அறத்திலே பொருள் திரட்டி இன்பத்துடன் இல்வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தால் வீடுதானே தேடி

வரும் என்பது தமிழன் கொள்கை. வீடு என்பதற்குத் தனியாக முயற்சிக்கவேண்டும் என்று கொள்ளவில்லை. அறம், பொருள், இன்பம், வீடு என்று கொண்டானில்லை. வீடு என்ற ஒன்று தானே வரும் என்பது தமிழன் துணிபு. இல்லறம், பிரமச்சரியம், வானப்பிரஸ்தம், சன்யாசம் என்ற பகுப்புகளை வேறுவிதமாகத் தமிழன் கொண்டிருக்கிறான். இல்லறத்திலே பிரமச்சரியம் காக்கமுடியும். தலைவியைத் தலைவன் பிரிந்திருக்கும்போதும், வேறு நாடுகளில் அவன் இருக்கும்போதும், பல மங்கையர்கள் அவனைக்கண்டு காமுறும் போதும், அவன் பிரமச்சரியத்தைக் காக்கவேண்டும். சன்யாசம் என்பதைத் துறவு என்று கூறலாம். அத்துறவிலே வானப்பிரஸ்தத்தையும் அடக்கிவிட முடியும். துறவு என்பது பற்று விடுதல்; பொருள்களின்மேலுள்ள ஆசையைத் தொலைத்தல். வேண்டா ஆசையும் பாசமும் ஒருவனைவிட்டுத் தொலைந்தால், அவனுக்கு "ஈண்டியற்பால பல". "யாதனின் யாதனின் நீங்கினன் (பற்றுவிட்டான்), அதனின் அதனின் துன்பம் இலன்." ஆகவே, இந்த உலகத்தில் இருந்து கொண்டே, இல்லறம் நடத்திக்கொண்டே, நாட்டுக் குழைத்து நல்லபல செய்து, பற்றுகள்விட்டுப் பரம் பொருளை நினைத்து வாழ்ந்தானானால், இந்த உலகத்திலேயே "தெய்வத்துள் வைக்கப்படும்". இதைத்தான் வள்ளுவர் வீடு என்று கருதுகிறார். வீடு அடைவதற்கு "மழித்தலும் நீட்டலும் வேண்டாம்" என்று எச்சரிக்கிறார். பின்பு என்ன செய்யவேண்டும் என்று கேட்டால், "உலகம் பழித்தது ஒழித்துவிடு" என்று பதில் கூறுகிறார். உலகம் என்பது உயர்ந்தோரைக் குறிக்கும். இப்படி உலகத்தோடு ஒட்ட ஒழுகி, தன்னையும் விளக்கி, நாட்டையும் விளக்கி,

அறம்பல புரிந்து, ஆக்கம்பல திரட்டி, இல்லறம் நடத்தி, இன்பத்துடன் வாழ்வதுதான் வீடு என்று வள்ளுவர் வற்புறுத்திப் போய்விட்டார். இதையே சங்கச்சான்றோர்கள் தங்கள் பாக்களில், இல்லறத்தின் உயர்வை எடுத்துக் காட்டி, காதலின் நுணுக்கங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறார்கள். அன்புடன் இருந்தால்தான் ஒரு மனிதன் உலகத்தில் வாழமுடியும். ஆகவே, அதை மிக உயர்வாகச் சங்கச் செய்யுட்கள் நமக்கு ஊட்டிவருகின்றன.

நேர்பு, நிரைபு என்ற வாய்பாட்டுப்படி சோர்பு, பிணிபு, பணிபு, துணிபு என்ற சொற்கள் வருகின்றன. தொல்காப்பியம் செய்யுளியல் 4வது சூத்திரப்படி இவை அமைந்தன. பிற்காலத்தில் இந்த வாய்பாடு வழக்கிறந்தன.

அத்து, ஐ, அரோ, ஆங்கு, மன், ஏ, ஓ முதலியன அசைகள். வழாஅமை என்பது வழாமை என்ற அர்த்தந்தான்; ஆனால் அளபெடையாகவரும். ஓசை குன்றினாலும் நீண்டாலும் பரவாயில்லை, பாட்டின் பொருள் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கம்கொண்டு பதம்பதமாகப் பிரித்து எழுதியிருக்கிறது. தமிழ்த் தெரிந்த மக்கள் சங்கநூல்களைத்தெரிந்து, அதன் பொருள்களை அறிந்து, தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்ற எனது அவா கைகூட வேண்டும். எல்லோரும் அறிவின் கருவூலங்களாய்த் திகழ வேண்டும் என்பதே எனது ஆசை. இதை எழுதத்தூண்டிய என் இன்னுயிர் நண்பர் என். எஸ். இராமசாமி அய்யர் அவர்களுக்கு எனது நன்றி. எங்கள் முயற்சி வெற்றி கொள்ள எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

**நூலாசிரியர்.**

# 1. உண்மைப் பொருள்

[ உலகம் பல மக்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு மகனுக்கும் வாழ்நாள் மிகக்கொஞ்சம். ஆகவே இளமையிற் செய்யவேண்டியவற்றைச் செய்யவேண்டும். அதற்கு மனிதனுக்குத் தகுதிவேண்டும். தகுதி மட்டும் போதாது; பணமும் வேண்டும். பணமட்டும் போதாது; பணமும் நல்ல குணமும் வேண்டும்— என்ற பல எண்ண அலைகள் தலைவனின் மனமாகிய கரையில் மோதிக்கொண்டு இருந்தன.

காதலித்த காதலியுடன் துறந்தார் முதலியவர்க்கு உதவிசெய்ய, அறவழியிலே இல்வாழ்க்கை நடத்த, தலைவன் ஆசைப்பட்டான். பொருள் இல்லாவிட்டால் உலகம் இருள் போல இருக்கும் என்பது அவனது எண்ணம். (பொருள்) இன்மையால் இளிவுவரும் என்பது அவன் கருத்து. இவை அவன் மனதில் சுழன்று கொண்டிருக்கும் சமயம், தோழி அந்த இடத்திற்கு வந்தாள்.

“பணமில்லாது இல்வாழ்க்கை இனிமைப்படாது. உறுதியாகப் பணந்தேடத் தூர தேசம் நான்போக வேண்டும்” என்றான் தலைவன்.

“நீ பிரிந்தால் உயிர் வாழாள் தலைவி. அதனால் பொருளுக்காகப் பிரியக் கருதும் பொருளை நினையாது இவளுடன் இல்லறம் நடத்தும் பொருளையே பெரிய

பொருளாகக் கருதவேண்டும்" என்று பொருளின் தன்மையை எடுத்துக்காட்டி வற்புறுத்தினுள் தோழி.

தோழியின் அன்பு வற்புறுத்தலைக் கேட்ட தலைவன் பிரியாமல் இருந்துவிடுகிருன். தலைவன் பிரியாத செய்தியைத் தலைவியிடம் தோழி கூறிமகிழும் தன்மையைப் பாருங்கள். ]

கடவுள் உலகுகளைப் படைக்க நினைத்தார். அப்போது படைத்தல் தொழிலுக்கு ஒரு ஆள் தேவையாய் இருந்தது. உண்டாக்கினுர் பிரமனை. இப்படித் தோன்றினவன் பிரமன். பிரமனும் தேவர்களும் அவுணர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். துன்பம் பொறுக்க முடியாமல் ஓடிவந்து பரமசிவனிடம் முறையிட்டார்கள். அது கேட்ட மூன்று கண்களையுடைய பரமசிவன் கூற்றுவன் போலக் கோபித்தான். வஞ்சனை செய்கின்ற அவுணரை வஞ்சியாது எதிர்நின்று, அவர் வலிமையைத் தொலைக்க நினைத்தான். அந்தக் கோபத்துடனே அவர்களின் மூன்று புரத்தையும் பார்த்தான். முகத்தில் கோபாக்கினி வீசியது. அந்த முகம் போல, ஒள்ளிய கிரணங்களையுடைய சூரியன் பாலை நிலத்தைத் தகிக்கிருன்.

---

## பாலைக்கலி 1-ம் பாட்டு.

1. தொடங்கல் கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந்து இரத்தலின்
மடங்கல்போல் சினைஇ மாயம்செய் அவுணரைக்
கடந்து அடும் முன்பொடு முக்கண்ணுன் மூவெயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்

வெற்றி கொள்ளமுடியாத மழுப்படையையுடைய பரமசிவன் கோபித்தான். அந்தக்கோபம் தாங்காது, மூன்று புரமும் அழிதலைப் பெற்று உதிர்ந்தன. அந்த உதிர்வு போல, சூரியனின் வெம்மை அழல், மலைவழியில் உதிர்ந்து கிடக்கும். அதனால் மலைவழிப் போவாருக்கு வழி இல்லை என்னும்படி இருக்கும். அப்படிப்பட்ட தொலையாத வழியிடையே உன்னை மறக்கமுடியாத—காதலையுடைய—இத்தலைவி இங்கே இறந்து ஒழிய, பொருள்தேடப் புறப்படத் துணிந்தாய். இதைக்கேள், (என்று கூறித் தோழி மேலும் சொல்லுகிறாள்)

கையிலிருந்த பொருள் தருமத்தில் செலவாயிற்று. தன்னிடம்வந்து யாசித்தவர்களுக்குக் கொடுக்கப் பொருளில்லை. யாசித்தவர்களுக்குக் கொடுக்காமலிருப்பது இளிவு என்று கருதி, மலையைக் கடந்து திரட்டவேண்டும் என்று நீ யோசித்த பொருள் பொருளாகுமோ? நிலைத்த கற்பையும் நீ பிரிந்தால் இறத்தலையும் உடையவள் தலைவி. அவள் மார்பை நீ பிரியாமல் இருப்பதே பொருளாகும்.

---

6. சீறரும் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறுபெற்று உதிர்வனபோல் வரைபிளந்து இயங்குநர்
ஆறு கெட விலங்கிய அழல் அவிர் ஆரிடை
மறப்ப அரும் காதல் இவள் ஈண்டு ஒழிய
இறப்பத் துணிந்தனிர் கேண்மின் மற்று ஐய;

11. தொலைவுஆகி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவுஎன
மலையிறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
நிலைஇய கற்பினாள் நீ நீப்பின் வாழாதாள்
முலையாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;

"எங்களிடம் ஒன்றும் இல்லை. நாங்கள் என்ன செய்வோம்" என்று சொல்லிக்கொண்டு வந்து யாசித்தவர்களுக்குக் கொடுக்கப் பொருள் இல்லை. அப்படி யாசித்தவர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் இருப்பது இளிவு என்று கருதி, மலையைக் கடந்து திரட்டவேண்டும் என்று நீ யோசித்த பொருள் பொருளாகுமோ? பழைய அன்பு வழுவாது என்று நினைத்த தலைவி, நீ பிரியமாட்டாய் என்று கருதி உன்னுடன் கூடினாள். ஆகையால் அவளது தழுவிக் கொள்ளும் இளமை மார்பைப் பிரியாமல் இருப்பதே பொருளாகும்.

'இல்வாழ்க்கை நடத்தப் பொருளில்லை' என்று சொல்லிக்கொண்டு வந்து யாசித்தவர்களுக்குக் கொடுக்கப் பொருளில்லை. அப்படி யாசித்தவர்களுக்குக் கொஞ்சமும் கொடுக்க முடியாதவராய் இருப்பது இளிவு என்று கருதி, மலையைக் கடந்து திரட்டவேண்டு மென்று நீ யோசித்த பொருள் பொருளாகுமோ? அருந்ததியைத் தொழுவது போல் எல்லோரும் தொழுது வாழ்த்தும்படி விளங்கிய கற்புடையவள் தலைவி. அவளது விசாலமான மெல்லிய தோள்களைப் பிரியாமல் இருப்பதே பொருளாகும்.

---

15. "இல்" என இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவுஎன
கல் இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
தொல்லியல் வழாஅமைத் துணையெனப் புணர்ந்தவள்
புல்ஆகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;

19. இடன்இன்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவுஎன
கடன் இறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
வடமீன்போல் தொழுது எத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை;

அழகின் அழிவைத் தன்னிடத்திலே கொண்டு தலைவி துன்பப்படுகிறாள். நீ பொருள் தேடப்பிரிகிறாய். இது அன்பு அன்று—என்று நான் தலைவனிடம் எடுத்துக் கூறினேன் என்று தோழி தலைவியிடம் சொன்னாள். குத்துக் கோலால் குத்தியும் நிலைநில்லாத ஆண்யானை மெல்லிய யாழோசையில் அடங்கியது. அது போல, எனது சொல்லிலே கனிந்து, அன்புற்றுத் தாழ்ந்து, நினது இயற்கையழகு தொலைதலிலும் பயந்து, போகாது நின்றுவிட்டார் காதலர் என்றாள் தோழி.

---

என இவள்,

24. புன்கண் கொண்டு இனையவும் பொருள்வயின் அகறல்
"அன்பு அன்று" என்று யான்கூற அன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
தொல்கவின் தொலைதல் அஞ்சி என்
சொல்வரைத் தங்கினர் காதலோரே.

[முதியவன் = பிரமன், அடங்காதார் = அவுணர், மிடல் = மிடுக்கு, வலிமை, மடங்கல் = கூற்றுவன் (யமன்), சினைஇ = சினந்து, முன்பு = வலிமை, மூவெயில் = மூன்றுபுரம், இறந்து = கடந்து, இரந்தோர் = யாசித்தோர், கல் = மலை, கடன் = மலை, இனையவும் = துன்பப்படவும், காழ் = குத்துக்கோல், ஒருத்தல் = ஆண்யானை, கணிச்சி = துண்டிக்கும் கருவி, மழு, இடன் = செல்வம்]

## 2. காதலனைக் காடு தடுக்கும் காட்சி.

[ பொருள் தேடப்போகக் கருதினான் தலைவன், தலைவியைப்பிரிந்து. தோழியைப் பார்த்தான். கருத்தை வெளியிட்டான், அவளிடம். தோழி ஓடி உண்மையை உரைத்துவிட்டாள், தலைவியிடம். திரும்பி ஓடோடி வந்தாள். தலைவனைக்கண்டாள். தலைவன் பிரிந்து போவதற்கு வழிகளைக் கண்டுபிடிப்பதில் கருத்தைச் செலுத்திக்கொண்டிருந்தான். அவனைப்பார்த்துக் கூறுகிறாள் தோழி. ]

அயலார் அறமில்லாமல் வெளிப்படையாக அம்பல் கூறுகின்றனர். அதனால் தலைவி நாணம் அடைகிறாள். நீ அரிதாகக் கடந்துசெல்லும் நீண்ட வழியையும் தலைவி நினைக்கிறாள். இந்த இருவினைகளும் தலைவியைத் துன்புறுத்துகின்றன. அதனால் அவள் முன்கையிலிருந்து வளையல்கள் கழலுகின்றன. கண்ணிலிருந்து கண்ணீர்த்துளி ஆறாக ஓடுகின்றன. பின்னர், கண்பட்டையில் அவை தங்கி நிற்கின்றன. பொருத்துக்கொள்ள முடியாத காமநோயோடு அழகு இழந்த நெற்றியை யுடையவளாய்த் தலைவி காணப்படுகிறாள். தனது வெற்றியையுடைய நலத்தை இழந்து

---

### பாலைக்கலி 2-ம் பாட்டு.

1. அறன் இன்றி அயல் தூற்றும் அம்பலை நாணியும்,
வறன் நீந்தி நீ செல்லும் நீளிடை நினைப்பவும்,
இறைநில்லா வளைஓட இதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயோடு புல்லென்ற நுதல் இவள்
விறல் நலன் இழப்பவும், வினைவேட்டாய் கேளினி;

கொண்டிருக்கிறாள். ஏன்? உனது பிரிவு என்ற சொல்லால். இச்சமயத்திலும் பொருள்தேடும் காரியத்தை ஆசைப்பட்டவரே! யான் கூறுவதைக்கேளும்.

நீ பிரிந்தால், உன்னையே உயிராகக் கொண்ட இவள் உயிர் வாழமாட்டாள் என்ற வார்த்தைகளைச் செவ்வி தெரிந்து கூறிப் பிரியவேண்டாம் என்று உன்னைக் கெஞ்சினோம். நீ எமது வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அது மாத்திரமில்லை, உனது நெஞ்சைச் செல்லும் பாதையில் செலுத்தினாய். ஆம். செலுத்து, செலுத்து. நீ செல்லும் அந்தப்பாதையில், நீரற்ற சுனையிருக்கும். அதில் இலைகள் இருக்கும்; அழகான மலர்கள் இருக்கும். அவையெல்லாம் வாடிக்கிடக்கும். அந்தக்காட்சி உன்னைப்போக விடாமல் தடுக்கும்.

அவை வாடிக்கிடப்பன கண்டு தலைவியும் அவள் சுற்றமும் வாடிக்கிடப்பார் என்று நீ உணர்வாய்.

நீ விரைவில் இவளைத் தனியேவிட்டுப் போவாயானல், இவள் உறுப்புகள் கெடும் என்ற பல வார்த்தைகளைப் பொருந்தும் வகையில் சொல்லிப் பிரியவேண்டாம் என்று உன்னைக் கெஞ்சினோம். நீ அவற்றை அறிந்து கொள்ளவில்லை. நீ செல்லும் வழியில் கொடிகள் சுற்றிய மரம்

6. உடையிவள் உயிர்வாழாள் நீ நீப்பின் எனப்பல
இடைகொண்டு யாம் இரப்பவும் எமகொள்ளா யாயினை
கடைஇய ஆற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன;

10. வல்லை நீ துறப்பாயேல் வகைவாடும் இவள் என
ஒல்லாங்கு யாம் இரப்பவும் உணர்ந்து ஈயா யாயினை

இருக்கும்; கொடிய வெயிலால் அம்மரம் வாடும். அதனைப் பற்றுக்கோடு எனச்சுற்றிய பூங்கொடிகள் கீழே விழுந்து கிடக்கும். அந்தக்காட்சி உன்னைப்போகவிடாமல் தடுக்கும்.

மரத்தைக் கொடி சுற்றிக்கிடப்பதுபோலத் தலைவியைச் சுற்றத்தார் சுற்றிக்கிடப்பர் என்றும், வெயிலால் மரம் வாடுதல்போல உன் அளியின்மையால் தலைவி வாடுவாள் என்றும், மரத்திலிருந்து கொடி வாடி விழுவதுபோலத் தலைவியின் சுற்றத்தார் வாடித் துன்புறுவர் என்றும் நீ உணர்வாய்.

இருவரும் ஒன்றுயிருக்கும் நிலையை விட்டு நீ பிரியக் கருதினால், இவள் வேறுபடுவாள் என்று பணிவுடன் உனக்கு எடுத்துச் சொல்லிப் பிரியவேண்டாம் என்று உன்னைக் கெஞ்சினோம். அதைக் கவனியாது பலவாறு நினைப்பாய் ஆயினை. நீ செல்லத்துணிந்த வழியில், மேலே கூறிய மரம் அழகு கெட்டுப்போயிருக்கும். அதன் அழகிய தளிர்கள் வாடிக்கிடக்கும். அந்தக்காட்சி உன்னைப்போக விடாமல் தடுக்கும்.

---

செல்லும்நீள் ஆற்றிடைச் சேர்ந்து எழுந்த மரம்வாடப்
புல்லுவிட்டு இறைஞ்சிய பூங்கொடி தகைப்பன;

14. பிணிபுநீ விடல் சூழில் பிறழ்தரும் இவள் எனப்
பணிபுவந்து இரப்பவும் பலசூழ்வாய் ஆயினை
துணிபுநீ செலக்கண்ட ஆற்றிடை அம்மரத்து
அணிசெல வாடிய அந்தளிர் தகைப்பன;

என ஆங்கு,

மரத்தின் அழகு கெட்டுப் போவதுபோல, தலைவியின் அழகு கெடும் என்றும் மரத்தின் தளிர்கள் வாடுவதுபோல, தலைவியின் உறுப்புகள் பிரகாசம் கெடும் என்றும் நீ உணர் வாய்.

யாம் உனக்கு வேண்டியவற்றைக் கூறினோம். எமது வார்த்தைகளை ஏற்றுக்கொண்டாயில்லை. இவள் உனது பிரிவைக்கேட்டுத் தாங்கமுடியாதிருக்கிறாள். இவளைக் கண்டார் அருள் காட்டவேண்டியவராய் இருக்கின்றனர். இவளைப்போல, கண்டார்க்கு அருள் உண்டாவதற்குக் காரணமாயினவற்றைக் காடு காட்டி, நீ செல்லுவதைத் தடுக்கும். மேல்நின்று உண்மைகூறி மெய்வழி செலுத்தும் நண்பர் போல நீ செல்லும் காடானது தடுக்கும்.

காட்டில் மலர், மரம், தளிர் முதலியன இருக்கும். அவை அருள் உண்டாகும்படி இருக்கும். அவை தலைவி யின் உறுப்புகள் போலத் தோன்றும். அவை வாடி வதங்கு வதைக்கண்ட உனக்கு அருள் உண்டாகும். ஆகவே அவற்றையுடைய காடு உன்னைத் தடுக்கும். இதை நீ உணர்வாய்.

---

19. யாநிற் கூறவும் எமகொள்ளாய் ஆயினை
ஆனாது இவள்போல் அருள் வந்தவைகாட்டி
மேல் நின்று மெய்கூறும் கேளிர்போல் நீ செல்லும்
கானம் தகைப்ப செலவு.

[அம்பல் = சிலரறிந்து தம்முள் புறம் கூறுதல்; இறை = முன்கை; அடை = இலை; வல்லை = விரைவாக; ஒல்லாங்கு = முடிந்தவரை; பிறழ்தரும் = வேறுபடுவாள்; கேளிர் = நண்பர்; இடைகொண்டு = இனிமையான சமயம் தெரிந்து.]

# 3. பறவையும் பறவாப்பாதை

---

[ "பொருள் தேடப்பிரிவேன்" என்றான் தலைவன். கேட்ட தோழி, அதைத் தலைவி அறிந்தாள் என்றும், அதனால் அவள் ஆற்றாத்தன்மை அடைந்தாள் என்றும் எடுத்துக்கூறி, 'பிரியாதீர்' என்றாள். ]

உடலில் நல்லபலம்; ஆனால் பார்வைக்கு இளைத்த உடம்பு; பார்வை புலிப்பார்வை; கையில் சுற்றுதல் அமைந்த வில்; தலைமயிரின் நுனி வளைந்தது; சுருட்டை மயிர்; மற்றவர் சோர்வாயிருக்கும் நேரத்தை அறிந்து தூரத்தில் மறைவாகத் தங்கியிருந்து தாக்குதல்; இரக்க மற்ற கொடியசெயல்; இப்படிக் காட்சியளிக்கின்றார், பாலை வனத்திலுள்ள மறவர் (வேடர்).

பாலைநிலத்தின் வழியாகப் புதிதாகச் செல்வாரிட மிருந்து தாம் பெற்றுக்கொள்ளும் பொருள் ஒன்றுமில்லா விட்டாலும், தங்கள் அம்பு பட்டு அவர் பதைபதைப்பதைப் பார்த்து மகிழ்வது வேடரின் விளையாட்டு. அம்பு பட்டு அவர் ஓடினாலும் தொடர்ந்து உயிரை வாங்கிவிடுவார். இக் காரணத்தாலே பறவைகளும் அங்குப் பறவா.

---

## பாலைக்கலி 3-ம் பாட்டு.

1. வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கில்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம் பார்த்து அல்கும் கடுங்கண் மறவர் தாம்—
கொள்ளும் பொருளிலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து உயிர்வௌவலின்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை

அது, மனவருத்தம் கொள்ளத்தக்க தொலையாத வழி. அதில், வெள்ளை நிறத்தையுடைய வேலாயுதத்தைக் கையில் கொண்டு — பொருளைத் தேடிக்கொண்டு வருவதற்காகப் போக நினைத்தீர். அந்நினைப்பை என் தோழியாகிய தலைவி அறிந்து விட்டாள். அவள் கூறுகிறாள்:

“முத்துமாலை இளமைக் கொங்கையில் தவழ்ந்து வருகிறது. அந்த மார்பைக் கொஞ்சநேரம்கூட விடாமல் தழுவுகிறார் காதலர். அப்படித் தழுவியும் அவர் வேட்கை தணியவில்லை. தழுவுதலால் அவிழ்ந்த எனது கூந்தலைச் சரிசெய்து அழகு பண்ணுவார். ஆனால் அவர் கருதும் காரியம் என்ன? அறியேன்” என்று தலைவி கூறுகிறாள்.

“முள்ளையொத்த நாணல் முளைபோன்ற எனது பல்லின் இருந்து ஊறிக்கொண்டேயிருக்கும் அமிழ்தம் போன்ற இனிய நீரை, கள்ளைக்காட்டிலும் கிளர்ச்சி செய்யும் என்று தலைவர் கூறியும் வேட்கை அவருக்குத் தணியவில்லை. தழுவு தலால் நிலைகுலைந்த பிரகாசமான எனது ஆபரணங்களைத் திருத்துவார். ஆனால் அவர் கருதும் காரியம் என்ன? அறியேன்” என்று தலைவி கூறுகிறாள்.

---

வெள்வேல் வலத்திர் பொருள்தரல் வேட்கையின்
உள்ளினிர் என்பது அறிந்தனள் என்தோழி;

9. காழ்விரி கவையாரம் மீவரும் இளமுலை
போழ்திடைப் படாமல் முயங்கியும் அமையார் என்
தாழ்கதுப்பு அணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை எவன்கொல் அறியேன் என்னும்;

13. முள்உறழ் முளைஎயிற்று அமிழ்துஊறும் தீநீரைக்
கள்ளினும் மகிழ்செயும் எனஉரைத்தும் அமையார் என்
ஒள்இழை திருத்துவர் காதலர் மற்றவர்
உள்ளுவது எவன்கொல் அறியேன் என்னும்;

"கண்கொண்டு காணக் காணக் கருத்துக்கு இன்பம் பயக்கும் அழகினையும், மாமை நிறத்தினையுமுடைய தேமல் படர்ந்த எனது மார்பைக் கண்ணெதிரே வைத்து இமையாமல் பார்த்தும் காதலருக்கு வேட்கை தணியவில்லை. தழுவுதலால் ஏற்பட்ட வியர்வையைப்போக்க எனது ஒளி பொருந்திய நெற்றியைத் துடைப்பார். ஆனால் அவர் கருதும் காரியம் என்ன? அறியேன்" என்று தலைவி கூறுகிறாள்.

மிக்க பெரிய அன்பு செய்தல் (பிரிதலுக்கு அடிகோலும்) ஒரு செய்கையுடையது என்று என் தோழியாகிய தலைவி அறிந்து நெஞ்சம் அழிந்து கலங்கி வருத்தத்தை யுடையவளாய் இருக்கிறாள். "ஒரு நாட்பொழுது நடுவிலே படும்படி பிரிந்துவருவோம்" என்று நினைத்து நீர் பிரியின் உயிர் வாழமாட்டாளே! ஆதலால், பெரும! பொருள் நோயிடத்துச்செல்லும் உமதுசெல்லுகை இப்போது ஒழிக.

---

நுண்எழில் மாமைச் சுணங்கு அணி ஆகம் தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார் என்
ஒள் நுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவது எவன்கொல் அறியேன் என்னும்;
என ஆங்கு,
கழிபெரு நல்கல் ஒன்று உடைத்து என என்தோழி
அழிவொடு கலங்கிய எவ்வத்தள் ஒருநாள் நீர்
பொழுது இடைப்பட நீப்பின் வாழ்வாளோ
ஒழிக இனிப்பெரும நின் பொருட்பிணிச் செலவே.

[சுரிவளர் பித்தையர் = நுனியில் சுருண்டு வளர்ந்த தலை மயிரினை யுடையார்; பித்தை = ஆண்மயிர்; அற்றம் = சோர்வு; அல்கும் = தங்கும்; வம்பலர் = புதியவர்; புலம்பு = வருத்தம்; காழ்விரி கவையாரம் = ஒரு விலையுயர்ந்த முத்தாரம்; காழ் = உறுதிமுத்து.]

# 4. பொருளினும் சிறந்தோர்!

[ தலைவன் பொருளுக்காகப் போகப் போகிறான் என்று கேள்விப் பட்டாள் தோழி. தலைவனிடம் ஓடினாள். "தேடும் பொருளைக் காட்டிலும் நாங்கள் உமக்குச் சிறந்தவர்கள்.' இது உமது உள்ளத்தில் இருக்குமானால் சகுனங்கள் உமது பிரிதலைத் தடுக்கும். தலைவி, மற்றவர்போல, நீர் பிரிந்தபின் உயிர் வாழ மாட்டாள்; பிரிந்த அன்றே இறந்துவிடுவாள். ஆகையால் நீர் பிரியக்கூடாது" என்று சொல்லிப் போதலை நிறுத்தினாள். ]

அழகிய காதுகள், பெரிய கால்கள், மற்ற அழகிய அவயவங்கள், மதத்தால் மயக்கம், இவற்றைக்கொண்டிருக்கின்றன யானைகள். மற்ற விலங்குகளும் திரளாயிருக்கின்றன. அவற்றை மறவர் துரத்துகின்றனர். அவை ஓடுகின்றன. மரங்களின் தூறுகள்மீது மிருகங்களும் மறவரும் ஓடுதலால் புதியவழி உண்டாகிறது. இருக்கும் பழையவழி நடப்பாரற்றதாய் இருக்கிறது. இந்தப் புதிய, பழைய வழிகளில், எவற்றில் போவது என்ற மயக்கம் உண்டாகும். அவ்வித வழிகளைக்கொண்ட அரிய காட்டைக் கடந்து முயன்று தேடும் பொருளுக்குப்போக நினைத்தீர்.

---

### பாலைக்கலி 4-ம் பாட்டு.

1. பால் அம்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறு அதர் பட்ட ஆறுமயங்கு அருஞ்சுரம்
இறந்து நீர் செய்யும் பொருளினும் யாம் உமக்குச்

பொருளைக் காட்டிலும் நாங்கள் உமக்குச் சிறந்தவர்கள் என்பதை நீர் அறிந்தீரானால், அதுவே போதும்.

பரந்த—பெரிய—கடலிலே கப்பல் கம்பீரமாகப் போகிறது. கப்பலில் உள்ளார் ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் மனதில் மகிழ்ச்சி அலைகள் ஒன்றின் பின் ஒன்றாய் ஓடி வருகின்றன. திடீரென்று புயற்காற்று ஒன்று தோன்றுகிறது. கப்பலைச்சிதற அடிக்கிறது. கலங்குகிறார்கள் கப்பலில் உள்ளார். தாம் எடுத்துக்கொண்ட முயற்சி நிறைவேறாமல் போகுமோ என்று நெஞ்சழிகிறார்கள். அவர்கள்போல நாங்கள் இப்பொழுது இருக்கிறோம். நாங்கள் எதைக்கூறுவோம். வான்மீன்களும் வான்கோள்களும் நீர் போவதைத் தடுத்தாலும் தடுக்கும். (எனவே, தமிழ்ப் பெருமக்கள் அயல்நாடுகளுக்கு வாணிபங்கருதி அடிக்கடி கலத்தில் செல்வர் என்பது உறுதியாகிறது.)

கல் என்னும் ஒலியுண்டாக அழகு பெற்ற திருவிழா ஒழுங்காக நடந்தபின்பு அந்த இடம் அழகிழந்து தனிமை கொண்டு இருக்கும். அந்த இடம்போலத் தலைவி இருப்பாளோ?

---

சிறந்தனம் ஆதல் அறிந்தனிர் ஆயின்
நீள்இரு முந்நீர் வளி கலன் வௌவலின்
ஆள்வினைக்கு அழிந்தோர் போறல் அல்லதைக்
கேள்பெருந் தகையோடு எவன்பல மொழிகுவம்
நாளும் கோண்மீன் தகைத்தலும் தகைமே;
கல் எனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்என்ற களம்போலப் புலம்புகொண்டு அமைவாளோ;

ஆளும் அரசனே நாட்டை அலைக்கழித்தால், அந்நாடு வளம் குன்றி வறுமைப்படும். அந்நாடுபோல அழகுகெட்ட முகத்தோடு துன்பம்கொண்டு தலைவி ஆற்றி இருப்பாளோ?

தடாகத்திலிருந்த தாமரை தண்ணீரிலிருந்து நீக்கப் பட்டாலும் ஒரு இரவுமுழுதும் வாடாமல் கிடக்கும். ஆனால் நீர் பிரிந்தால் அந்த ஒரு இரவும்கூட உயிர்கொண்டு தலைவி வாழ்ந்து இருப்பாளோ?

(இப் பொருள்களால் தமிழ்மகளிர் அன்பின் உச்ச நிலையை அறியலாம்.)

எங்களைப் பாதுகாத்தலை விட்டுவிட்டுப் பொய் பேசுதலில் புகுந்தீர். நெடுந்தகாய்! நீர் பொருள்தேடப் போவது எந்நாளோ, அந்நாள் இவளது அருமையான உயிரையும் உடன் கொண்டுபோம். இல்லையானல் இறந்துபடுவாள்.

---

12. ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண்டு அமைவாளோ;
14. ஓர்இரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ;
என ஆங்கு,
17. பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு
எந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வது
அந்நாள்கொண்டு இறக்கும் இவள் அரும்பெறல் உயிரே.

[ பால் = இங்கே பகுதிகள்; அதர் = பாதை; இறந்து = கடந்து; இரு = பெரிய; முந்நீர் = கடல்; வளி = காற்று; கலன் = கப்பல்; வெளவலின் = சிதற அடித்து விடுகையினலே; புறந்தரல் = பாது காத்தல். ]

# 5. கண்ணீர் குடிநீராதல்

[ தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் தேடப்போக நினைக்கிறான். இதைத் தோழி தெரிந்துகொண்டாள். அவனிடம் சென்றாள். 'காடு கடந்து பொருள்தேடப் போகின்றீரா, எம்மையும் பிரிந்து'? என்று கேட்கிறாள். காட்டின் வழிக் கடுமையைத் தலைவன் கூறுகின்றான். காட்டின் கடுமையைக் கேட்டுவிட்டுத் தோழி கூறுகிறாள். ]

"மரையா என்னும் மிருகம் தண்ணீர் கிடைக்கப் பெறாது மராலைக் கவர்ந்து கொள்ளும்படியாக வறண்டிருக்கும் காடு. அக்காட்டில் உயரமான மலையிருந்தும் மேகங்கள் கூடி மழைபெய்யா. அம் மலைகளில்தான் பாதைபோகிறது. போவாரில்லாத பாதை. வழுக்கலான பாதை. அப்படிப் பட்ட பாதையில் திரிவார் மறவர் (வேடர்). மற்றவர் துன் பத்தைக் கண்டு மகிழும் குணமுடையார் மறவர். கட்ட மைந்த வில்லும் அம்பும் உடையார் மறவர். வழியில் போவாரைக் குறிவைத்து அம்பு எய்வார் மறவர். அம்பின் தலை உடலில் அழுந்தியவுடன் துடிதுடிப்பார் வழிச்செல் வார்; உடலை நெளிப்பார் அவர். திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால் அவர் உடம்பிலிருந்த நீர் சுண்டி நாவுலர்ந்து வறட்சியுண்டாகும். தண்ணீர் கிடைக்காமல் அவர் தவித்து நிற்பார். தடுமாற்றத்தையுடைய இக்கொடிய துன்பத்தில்

---

### பாலைக்கலி 5-ம் பாட்டு.

1. மரையா மரல் கவர மாரி வறப்ப
வரைஓங்கு அரும்சுரத்து ஆரிடைச் செல்வோர்
சுரைஅம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்

அவர் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகும். அந்தக் கண்ணீர் ஆறு அவர் தம் நாவை நனைக்கும்."

இப்படிப்பட்ட கடுமையானது காடு என்று கூறுகின்றீர் தலைவரே! நீர் பிரிந்தால் தலைவி இறந்துவிடுவாள் என்பதை அறியாதவர்போல இவற்றைக் கூறுகின்றீர். இக்கூற்று உமது தகுதிக்குப் பொருந்துமா? உமது நல்ல தன்மைகளுக்குப் பொருந்தாதவை யாயிற்றே!

நெடுந்தகாய்! இனி எம்மை விட்டுப்பிரியக் கருதாதீர். அன்பு நீங்கும்படியான பிரிதலைக் கருதாதீர். அவ்வாறல்லாது, போவதையே கருத்தாகக் கொண்டீராயின், அக் கடிய வழியில் உம்முடைய துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள உம்முடனே யாமும் துணையாக வரலாம் என்ற யோசனை உமக்கு உதிக்குமானால், அது எமது பேறு. (பாக்கியம்.) அந்தப் பேற்றைத்தவிர எமக்கு இந்த உலகத்தில் வேறு ஒரு இன்பமும் உண்டோ?"

---

6. கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு என்றால்
என்னீர் அறியாதீர் போல இவைகூறின்
நின்னீர அல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்புஅறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு.

[மரையா = பாலைவனத்தில் திரியும் ஒரு மிருகம்; மால் = ஒரு வகை உணவு; ஆரிடை = வழுக்கு நிலத்தில்; சுரை அம்பு = அம்பின் தலை; மூழ்க = அழுந்த; புரையோர் = துளைபட்டோர்.]

# 6. பொருள் உயிர்தருமா?

[ தலைவன் பொருள்தேடச் செல்ல நினைக்கிறான். தோழி அங்கு வருகிறாள். தன் கருத்தைத் தலைவன் அவளிடம் கூறுகிறான். அதுகேட்ட தோழி கூறுகின்றாள். ]

வேனில் காலத்தாலே வருந்தின உடல் சிறுத்துவிட, அதனால் வருத்தம் கொண்டு மனக்கிளர்ச்சி யற்று ஓய்ந்திருக்கும் ஆண்யானைகள் மழை பெய்யாத இடத்திலுள்ள கானல்நீரைத் தண்ணீர் என்று கருதிக் குடிக்க ஆசைப்படும். அவ்வளவு கடுமையான கானகத்தை நீர் கடந்து செல்லப் போகின்றீர் என்று நான் தலைவியிடம் கூறினால், அப்போது நிகழும் நிகழ்ச்சியை உம்முடன் கொஞ்சம் ஆலோசிக்க ஆசைப்படுகிறேன்.

நீர், நினைத்த காரியத்திற்காகச் செல்லக்கருதி, உம்முடைய கைத்திறமையாலே செய்யப்பட்ட பலம்பொருந்திய வில்லின் நாணைத் தடவுகின்றீர். ஆனால், அது சமயம் இவளுக்கு ஏற்படும் நிகழ்ச்சியிது :- மறுவற வளர்ந்து வருகின்ற சந்திரனை மேகங்கள் படர்வதுபோல, குற்றமற்ற பிரகாசமான இவள் முகத்தைப் பசப்பானது படருமே!

---

## பாலைக்கலி 6-ம் பாட்டு.

வேனில் உழந்த வறிது உயங்கு ஓய்களிறு
வான்நீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கு அவாஅம்
கானம் கடத்திர் எனக்கேட்பின், யான்ஒன்று
உசாவுகோ ஐய சிறிது;

நீயே, செய்வினை மருங்கில் செலவு அயர்ந்து யாழநின்
கைபுனை வல்வில் ஞாண் உளர்தீயே

நீர், வேலைப்பாடுகள் நிறைந்த போர்க்கோலக் கையாடையை இறுகக்கட்டி, வில் மூலம் விடத் தகுந்ததும் பல முறை பழகியதுமான அம்புகளைத் தெரிந்தெடுக்கின்றீர். ஆனால், அது சமயம் இவளுக்கு ஏற்படும் நிகழ்ச்சியிது:— நிறைந்த மாட்சிமைப்பட்ட சுனையிலுள்ள நீலமலர் மழைத் துளியை ஏற்று விடுபவைபோல, துன்பமான பார்வையைக் கொண்ட, மையுண்ட இவள் கண்களிலிருந்து கண்ணீர் நில்லாது விழுந்துகொண்டே யிருக்குமே!

நீர், 'பிரிந்து போகின்றோம்' என்கிற துன்பமில்லாத மனத்தோடு, பொருள்தேடப் போகக்கருதி, வெற்றியைக் கொடுக்கும் சக்கரத்தினது வாயைத் தூசிகள்போகத் துடைக்கின்றீர். ஆனால், அது சமயம் இவளுக்கு ஏற்படும் நிகழ்ச்சியிது:- அசைகின்ற இதழ்களையுடைய கோடல் என்னும் பூக்கள் ஊழ்த்து உதிர்பவைபோல, விளங்கும் அழகுடைய—ஒளியுள்ள—வளையல்கள் இவள் முன்கையை விட்டுக் கழலுமே!

---

இவட்கே, செய்வுறு மண்டிலம் மையாப்பதுபோல்
மையில் வாண்முகம் பசப்பூருமே;

9. நீயே, வினைமாண் காழகம் வீங்கக்கட்டிப்
புனை மாண் மரீஇய அம்பு தெரிதியே
இவட்கே, சுனை மாண் நீலம் கார் எதிர்பவைபோல்
இனை நோக்கு உண்கண் நீர் நில்லாவே;

13. நீயே, புலம்பின் உள்ளமொடு பொருள்வயின் செலீஇய
வலம்படு திகிரி வாய் நீவுதியே
இவட்கே, அலங்கு இதழ்க் கோடல்வீ உகுபவைபோல்
இலங்குஏர் எல்வளை இறை ஊருமே;

இப்படி உமது செல்லுகையே எமக்குக் குற்றம் செய்கிறது. உமது செல்லும் ஆரவாரத்திலேயே இத்தன்மையாகின்றவள், நீர் இவளைப் பிரிந்தால் இறந்து விடுவாள். அப்போது உமது நன்மையை நீர் இழந்தவராவீர். இல்வாழ்க்கைத் துணையற்றவராவீர். மங்கலம் என்பது மனை மாட்சியல்லவா! அந்த மாட்சியை இழக்கத் துணிகின்றீரா? நீர் கருதிய தேயத்தில் சென்று வருந்திச் சேர்க்கும் பொருள் இவளது இனிய உயிரைத்தருமா? பிரிந்த உயிரைத் திரும்பத் தராதல்லவா? ஆகவே, நீர் இவளை விட்டுப் பிரியக்கூடாது என்று வற்புறுத்துகிறாள் தோழி.

---

என நின்,

18. செல்நவை அரவத்தும் இனையவள் நீ நீப்பின்
தன்னலம் கடைகொளப் படுதலின் மற்றிவள்
இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்று செய் பொருளே.

[ உழந்த = வருந்தின; உயங்கு = துன்பமடைந்த; ஓய் = ஓய்ந்திருக்கும்; வூழங்காத்தேர் = கானல்நீர்; அவாஅம் = ஆசைப்படும்; செலவு = செல்லுதல்; உளர்தீயே = தடவுகிறீர்; காழகம் = போர்க்கோலக் கையாடை; வலம் = வெற்றி; திகிரி = சக்கரம்; நீவுதியே = துடைக்கிறீர்; அலங்கு = அசைகின்ற; வீ = பூக்கள்; இறை = முன்கை; செல்நவை = செல்லும் குற்றம். ]

# 7. நிலையில்லாப் பொருளும் நிலைபெறும் பொருளும்

[ தான் பிரிந்தால் காதலி வருந்தும் வருத்தங்கள் காதலனுக்கு அகக்கண் முன்னே தோன்றுகின்றன. ஆதலினால் சொல்லாமலே பிரிந்துபோகத் துணிகிறான். இதைக் குறிப்பால் அறிகிறாள் தோழி. "பொருள் நிலையாதது; இல்லாளுடன் இல்வாழ்க்கை நடத்துவதே நிலையான பொருளாகும்" என்பதைப் பல காரணங்களுடன் விளக்கிக்கூறித் தலைவனைப் பிரியாதபடி செய்கிறாள். ]

நடுநிலைமையிலிருந்து விலகியவன்; அருளில்லாதவன்; மனதில் சூழ்ச்சியுடையவன் ஒரு மந்திரி; அந்த மந்திரி சொற்கேட்டு அரசன் கொடுமையான தொழிலைச் செய்ய எண்ணினான், ஆலோசியாமல்; அதனால் அவன் கொடுங்கோல் அரசனாகிவிட்டான்; அந்த அரசனின் கொடுங்கோல் சுடுவதுபோல, சூரியனின் துன்பந்தரும்-காய்கின்ற-கிரணங்கள் சுடவும்,

வண்டுகள் சேர்தலினால் ஊறுகின்ற—கமழும்-மதத்தையுடைய அழகிய யானைகள், சூரியன் கோபத்தால் கிரணங்களைச் செலுத்திச் சுடுகையினாலே நீரற்று வறண்ட நிலத்தில் வீணாக உழுகின்ற கலப்பைகள் போலத் தம் கொம்புகளை ஊன்றிக் கையை நிமிர்த்து நிலத்திலே கிடக்கவும்,

---

**பாலைக்கலி 7-ம் பாட்டு.**

1. நடுவிகந்து ஒரீஇ நயன்இல்லான் வினைவாங்கக்
கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்
உறலூறு கமழ்கடாத்து ஒல்கிய எழில்வேழம்
வறன்உழு நாஞ்சில்போல் மருப்பூன்றி நிலஞ்சேர

நீரும், நிழலும், பசுமையும், நீங்காது குளிர்ந்திருந்த மலைகள் கரிந்தும் புகைந்தும் வெடித்தும் போக, போவதற்கு அருமையான வெம்மை மிக்க காட்டுவழி எமக்கு எதுவும் சொல்லாமல் போகத்துணிந்தவராகிய உமக்கு ஒன்று சொல்லுந்தன்மையுடையேன். அதனைக்கேட்பீராக.

விரலாலே வாசிக்கப்படுவது யாழ். அதற்கு ஏழு நரம்புகள் உண்டு. விரலால் தடவினால் ஒலி எழும். விரும்புவார்க்கு விருப்பமாய் இருக்கும் வண்ணம் ஒலி எழுப்பமுடியும். அந்த ஏழுநரம்புகளில் நடுவிலிருக்கும் ஒரு நரம்பு அறுந்துபோனால் யாழ் ஒலி கெட்டுப்போகும். அவ்வொலி யாருக்கும் பயன்படாமல் வீணாகும். அதைக் காட்டிலும் நிலையில்லாத பொருளை அறிவுடையோர் ஆசைப்படுவார்களோ? ஆசைப்பட மாட்டார்கள்.

மருவிக்கொண்ட காலம்போல் ஆகாமல், பிரியும் காலத்தில் மற்றவர் கைகொட்டி நகைக்கும் வண்ணம் பிரிந்து போகும் திருமகளைக் காட்டிலும் நிலையில்லாத பொருளை அறிவுடையோர் ஆசைப்படுவார்களோ? ஆசைப்பட மாட்டார்கள்.

ஒரு கொடிய அரசன் அமைச்சனைக் கோபிக்க ஆரம்பித்தான். நல்ல பலகாரியங்கள் செய்தவன் ஆவானே என்றும்

---

விறன்மலை வெம்பிய போக்கரும் வெஞ்சுரம்
சொல்லாது இறப்பத் துணிந்தனிர்க்கு ஒருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின் மற்று ஐய;

9. வீழுநர்க்கு இறைச்சியாய் விரல்கவர்பு இசைக்குங்கோல்
ஏழும் தம்பயன்கெட இடைநின்ற நரம்பு அறூஉம்
யாழினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ;

12. மரீஇத்தாம் கொண்டாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்கால் பிறர்எள்ளப் பீடுஇன்றிப் புறமாறும்
திருவினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ;

பாராது பழைமையும் பாராது அவன் பொருள் முதலிய வற்றையும் கவர்ந்து கொண்டான். முறையற்ற இச் செய்கைகள் மாத்திரமல்ல, அவனது ஆருயிரையும் கடைசி யில் கவரும்படி செய்தான். அப்படிச்செய்த அரசனைக் காட்டிலும் நிலையில்லாத பொருளை அறிவுடையோர் ஆசைப் படுவார்களோ? ஆசைப்பட மாட்டார்கள்.

பெரும! பொருளை ஆசைப்படுதல் உமக்குப் பொருந் தாது. ஆராய்ந்தால் இந்தச் செல்லுகையை நீர் தவிர்தலை யான் விரும்புகிறேன். அரசன் பாதுகாக்க, வருகின்ற விருந்தினரை உபசரித்து, தன் மனைவி விரும்பும்படி அவ ளுடன் கூடி வாழ்ந்தால், இனிமையைத்தரும் அகன்ற மார்பையுடையவரே! அதுதான் நிலைபெறும் பொருள்.

---

15. புரைதவப் பயனோக்கார் தம்மாக்கம் முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதில் கண்ணோடாது உயிர்வௌவும்
அரைசினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ;

என வாங்கு,

19. நச்சல் கூடாது பெரும இச்செலவு
ஒழிதல் வேண்டுவல் சூழில் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பித்
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறல் வியன்மார்ப அது மனும் பொருளே.

[நடுவிகந்து ஒரீஇ = நடுநிலையிலிருந்து நீங்கி; நாஞ்சில் = கலப்பை; விறன்மலை = வெற்றியையுடைய மலை; வெற்றியாவது: நீரும் நிழலும் பசுமையும் நீங்காமை; வெம்பிய = வெம்பிப்போன; அதாவது, கரிந்து புகைந்து வெடிக்கும் நிலை; வீழுநர்க்கு = ஆசைப் படுவார்க்கு; இறைச்சியாய் = விரும்பப் படுவதாய்; மரீஇ = மருவி; எள்ள = இகழ; பீடுஇன்றி = பெருமையில்லாமல்; திரு = பொருட்கு ஏதுவாயுள்ள நற்பேறு; புரைதவ = குற்றம்நீங்க; நச்சுபவோ = ஆசைப் படுவார்களோ; புறந்தர = பாதுகாக்க; தன்னகர் = தன் மனைவி.]

# 8. சிறந்தானை வழிபட்டுச் சென்றாள்.

[அவனை அவளும், அவளை அவனும் தம் மனத்தே கொண்டனர். அவ்வளவு அறநெறிக்காதல். திருமணத்தை எதிர்நோக்கி நின்றனர். உற்றார் உறவினர் ஒத்துவரவில்லை, இவர்கள் நிலையறியாமல். காட்டுவழி காதலனுடன் அவள் நடந்து விட்டாள். வளர்த்த பாசம் செவிலிக்கு. காடு சென்று தேடினாள். அந்தணர் சிலர் அங்கு வந்தனர். தலைவியின் காதலறத்தைச் செவிலிக்குக் கூறினர்.]

உறைத்தலைச் செய்கின்ற சூரியன் கதிர்களைச் செலுத்திக் காய்கின்றான். அவ் வெயிலைக்காக்க வெண்குடையேந்தி நிழலில் செல்லுகின்றனர் அந்தணர். அவர்கள், உறியில் தாழ்ந்து தொங்கும் கமண்டலத்தையும் புகழ் நிறைந்த முக்கோலையும் முறைப்படத் தோளிலே வைத்திருக்கின்றார்கள்; தவறு நினையாத நெஞ்சத்தை யுடையவர்கள்; புலன்கள் தம் ஏவல் செய்யவைக்கும் இயல்புடையவர்கள். அவர்களைச் செவிலி சந்தித்தாள். விசாரிக்கிறாள், மகளைப்பற்றி.

"ஒழுக்கம் நிறைந்த அந்தணீர்! வெப்பமான காட்டில் செல்லும் வழக்கமுடைய ஒழுக்கத்தீர்! இந்தக் காட்டில் என்னுடைய மகள் ஒருத்தியும் வேறொருத்தி

---

**பாலைக்கலி 8-ம் பாட்டு.**

1. "எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல்அசைஇ வேறு ஓரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை அந்தணீர்!
வெவ்விடைச் செலன்மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்

மகன் ஒருவனும் தமக்குள்ளே கூடிய—தமக்கு மட்டும் தெரிந்த கூட்டமுடையர். அத்தன்மையார் இருவரைக் காணாமலிருந்தீரோ?" இது செவிலி கேள்வி. பதில் கீழே:

"இக்காட்டில் காணாமலிருக்கவில்லை, கண்டோம். அது அறம் என்று கருதி வந்தோம். ஆண்களுக்குக்கூறும் அழகெல்லாம் உடைய அத் தலைவனோடே இந்தக் கடக்க அரிய காட்டைக் கடந்துபோகக் கருதிய மாட்சிமைப்பட்ட அத்தலைவிக்கு நீர் தாயிர்போலும்!"

"பல வாசனைப் பொருள்களும் கலந்த, நறுமணமுள்ள சந்தனம், பூசிக்கொள்பவர்களுக்குப் பயன் கொடுக்குமே தவிர, அச்சந்தனம் மலையிலே பிறந்தாலும், அம்மலைக்கு என்ன பயன்? ஆராய்ச்சி செய்தால் உம் மகளும் உமக்கு அவ்விதமே."

"சிறப்புள்ள வெண்மையான முத்துக்கள், அணிந்து கொள்பவர்களுக்குப் பயன் கொடுக்குமே தவிர, அவை கடலிலே பிறந்தாலும், அக் கடலுக்கு என்ன பயன்? ஆராய்ச்சி செய்தால் உம் மகளும் உமக்கு அவ்விதமே."

---

7. தம்முளே புணர்ந்த தாம்அறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ பெரும!"
"காணேமல்லேம் கண்டனம் கடத்திடை
ஆண்எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய
மாண்இழை மடவரல் தாயிர்நீர் போறீர்;
12. பலவுறு நறும் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.
15. சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

"யாழின் ஏழு நரம்புகளினும் கூடி எழும் இனிய ஓசைகள் பாடுபவர்களுக்குப் பயன் கொடுக்குமே தவிர, யாழிலிருந்து அந்த ஓசைகள் பிறந்தாலும், அந்த யாழுக்கு என்ன பயன்? ஆராய்ச்சி செய்தால் உம் மகளும் உமக்கு அவ்விதமே."

ஆதலால், "மிக்க கற்புடைய அவளுக்காக வருத்தம் கொள்ள வேண்டாம். தாய், தந்தை என்ற உயர்ந்த இருமுதுகுரவரினும் சிறந்த கணவனை வழிபட்டு, அவன் பின்னே போயினாள். இங்ஙனம் கற்புப்பூண்டு செய்யும் இல்லறமே அறங்களில் தலையான அறம்; இருவரும் பிரியா வழியும் அதுவே" என்று அந்தணர் அறம் உரைத்துச் சென்றனர்.

---

18. ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே;

என ஆங்கு,

22. இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா ஆறு மற்று அதுவே.

[எறித்தரு = உறைத்தலைச்செய்கின்ற; கரகம் = கமண்டலம்; உரைசான்ற = புகழ் நிறைந்த; சுவல் = தோளின் மேலிடம்; கடத்திடை = காட்டில்; மாண் இழை = மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய; படுப்பவர்க்கு = பூசுபவர்க்கு; சீர்கெழு = சிறப்புப்பொருந்திய; தேருங்கால் = ஆலோசித்தால்; முரல்பவர்க்கு = வாசிப்பவர்க்கு; சூழுங்கால் = ஆலோசித்தால்; இறந்த = அதிகமான; எவ்வம் = துன்பம்; படர்தல் = ஒன்று செய்யப் பலவாறும் கருதுதல்.]

# 9. நெஞ்சுடைந்து உயிர்விடுவாள்.

[ "பொருள்தேடப் போகிறேன்" என்று தோழியிடம் தலைவன் சொன்னான். தலைவன் பிரிந்தால் தலைவி என்ன ஆவாள் என்று தோழி எடுத்துக் கூறினாள். தலைவன் பிரியவில்லை என்று கூறிவிட்டான். இந்த மகிழ்ச்சி தரும் செய்தியைத் தலைவிக்குத் தோழி கூறுகிறாள். ]

வறுமை உடையவன் இளமைபோல, வாடிய கொம்பு கிளையுடைய மரங்கள் இருக்கின்றன, சூரியன் சுடுவதால். குணத்தால் சிறியவன் செல்வம் சேர்ந்தாரைப் பாது காவாதது போல, அடியில் வந்து சேர்ந்தவர்களுக்கு மரங்கள் நிழல் கொடுக்க முடியாமல் இருக்கின்றன, சூரியன் சுடுவதால். எல்லோருக்கும் தீங்கு செய்து முன்னிருந்த புகழையும் கெடுத்து,ஒருவன் சுற்றத்தாருடன் கெடுதல்போல, தளிர், கொம்புகள் மட்டுமில்லாமல் வேரோடும் மரங்கள் வெம்பும்படி சூரியனின் பரந்த கதிர்கள் சுடுகின்றன.

நாட்டிலோ கொடுங்கோல் தாண்டவமாட, குடி மக்களோ கொடுமையைப் பொறுக்க முடியாமல் கடவுளைக் கூப்பிட, மந்திரிமார்களோ கொலைத் தொழிலுக்கும்

---

### பாலைக்கலி 9-ம் பாட்டு.

1. வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழல் இன்றி
யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம் வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள் வெஃகிக்
கொலையஞ்சா வினைவரால் கோல்கோடி யவன் நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்,

அஞ்சாத பாதகர்களாய் இருக்க, அரசனே முறையில்லாமல் பொருள் வசூல் செய்து அரசுபுரிய, இப்படி ஒரு நாட்டில் கொடுங்கோல் நடந்தால், அந்த அரசனுடைய குடை நிழலில் தங்கிய உலகம் எப்படி வருந்துமோ அப்படி வெயிலால் வருந்திய, உலறிப்போன உயர்ந்த மரங்களுடைய வெப்ப மிக்க காட்டு வழி;

சிறுபூளை, செம்பஞ்சு, வெண்பஞ்சு, சேணம், தூவி என்ற ஐந்தாலாகிய படுக்கையிடத்தில் தூங்கும்போது, நீ கொஞ்சம் விலகினாலும் தனிமைகொண்டு வருந்தும் இவள், போதலையே மனதில் கொண்டு, பொருள்தேடப் போகப் போகிறாய் என்று யான்கூறக் கேட்டால், நெஞ்சு உடைந்து போக மிகவும் ஒளி கெடுவாளோ? இறந்துபடுவாளே!

நீ ஒரு விளையாட்டை விரும்பி விளையாட்டாக ஒரு நீக்கத்தைச் செய்து, அதிலே சிறிது பொழுது நீட்டிப் பினும், அத்துணை நீக்கத்துக்கு அஞ்சிக் கலங்குகின்ற மிகுதியான மென்மை யுடையவள், வெறுப்பின்றி முயன்று தேடும் பொருளுக்கு நீ பிரிந்துபோகின்றாய் என்று யான் சொல்லக் கேட்டால், நீரையுடைய கண்கள் தூக்கத்தை அடையாவாய்த் துன்ப மிகுவாளோ? இறந்துபடுவாளே!

---

8. இடைகொண்டு பொருள்வயின் இறத்திநீ எனக்கேட்பின்
உடைபு நெஞ்சுக வாங்கே ஒளியோடற்பாண் மன்னே
படையமை சேக்கையுள் பாயலின் அறியாய் நீ
புடைபெயர்வாய் ஆயினும் புலம்பு கொண்டு இனைபவள்;

12. முனிவின்றி முயல்பொருட்கு இறத்தி நீஎனக் கேட்பின்
பனியகண்படல்ஒல்லா படர்கூர்கிற்பாள் மன்னே
நனிகொண்ட சாயலாள் நயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினும் துறப்பஞ்சிக் கலுழ்பவள்;

துன்பம் தரும் பார்வை நடுவில் தோன்றாது, இன்பம் கலந்த நினது அருட்பார்வை கொஞ்சநேரம் நீங்கினாலும் அதற்காகத் துன்பங்கொண்டு கலங்குபவள், பொருளை நன்றென்று கருதி நீ பிரிந்துபோகின்றாய் என்று யான் சொல்லக் கேட்டால், கண்டார் மருளும் அழகுகெட்டு மிகவும் மயக்கம் மிகுவாளோ? இறந்துபடுவாளே!

“பொருள் தேடும் செயலை ஆசைப்பட்டு நீ சென்றால் இவள் உயிரும் உடலைவிட்டுச் சென்றுவிடும் என்று உனது நிலைமையை யான் சொன்னேன்” என்று தலைவியிடம் தோழி சொன்னாள். “அணியும் ஆபரணங்களை யுடையாய்! அப்படிச் சொன்னேனோ இல்லையோ, புகழ் நிலைபெற்ற வேலாயுதத்தை யுடைய நெடுந்தகையான காதலர் தம் செல்லுகையைத் தவிர்த்தார். இனி உனது வளையல்கள் கழலா திருப்பனவாக” என்றாள்.

---

16. பொருள் நோக்கிப் பிரிந்து நீ போகுதி எனக்கேட்பின்
மருள்நோக்க மடிந்தாங்கே மயல்கூர் கிற்பாள் மன்னோ
இருள்நோக்கம் இடையின்றி ஈரத்தின் இயன்றநின்
அருள்நோக்கம் அழியினும் அவலங்கொண்டு அழிபவள்;

எனவாங்கு,

21. வினைவெஃகி நீசெலின் விடும் இவள் உயிர்எனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவேல் நெடுந்தகை நீளிடைச்
செலவு ஒழிந்தனனால் செறிக நின்வளையே.

[சினை = மரக்கிளை; இகந்துசெய்து = மீறிநடந்து; இசை = புகழ்; கதிர் = சூரியன்; வெஃகி = ஆசைப்பட்டு; இறத்தி = சென்றாய்; புலம்புகொண்டு = தனிமைகொண்டு; இனைபவள் = துன்பப்படுபவள்; முனிவின்றி = வெறுப்பின்றி; கலுழ்பவள் = அழுபவள்; அவலம் = துன்பம்; அழிபவள் = கலங்குபவள்.]

# 10. மாக்களின் கருணை.

[ "காடு கடுமையானதுதான். ஆனாலும், கருணையை யுடைய மிருகங்களும் பறவைகளும் அங்கு உண்டு. அவை, தம் பெட்டைகளுக்குச் செய்யும் காதற் செயலைத் தலைவர் காண்பார். தாமும் அவ்வாறு செய்யவேண்டும் என்று கருதித் திரும்பிவிடுவார். அதற்கு நிமித்தங்களும் சரியா யிருக்கின்றன." என்று தோழியிடம் கூறுகிறாள் தலைவி. ]

சாதாரண மக்களால் செய்ய முடியாத அறத்தைச் செய்து, அருளுடையார்க்கு வேண்டுவன கொடுத்தலைச் செய்ய உதவும் பொருள். பெரிதாகிய பகைகளை வென்று, தன்னை மதியாதாரை அழித்தலைச் செய்ய உதவும் பொருள். மனம் பொருந்துதல் அமைந்த காதல் செய்து, இன்ப நுகர்ச்சியை நுகர உதவும் பொருள். இப்படிப் பொருளானது அறம்-பொருள்-இன்பம் மூன்றையும் தரும் என்று நமக்குக் கூறி, அப்பொருளைக் கருதி, பிரிவை எண்ணிச் சென்ற காதலர் வருவார். பிரகாசமான ஆபரணங்களை யுடைய தோழியே! அவர் வரவைத் துணிவேன் யான். அதற்குக் காரணமும் கேள்.

---

## பாலைக்கலி 10-ம் பாட்டு.

1. அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவுஎண்ணிப் பொருள்வயிற் சென்ற நங்காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய்! வலிப்பல் யான் கேளினி;

பொன்னால் செய்த கன்த்த காதணியை உடையாய்! பாதங்கள் பொறுக்க முடியாத—அளவில்லாத அழல் போன்ற வெம்மையுடைய கடுமையானது காடு என்று அவர் சொன்னார். அந்தக் காட்டிலே, உடுக்கை போன்ற அடிகளையுடைய யானைக் கன்று தண்ணீர் இருக்கும் இடத்தில் இறங்கி, தன் தாயும் தந்தையும் உண்ண வேண்டும் என்று கருதாது, கலக்கிய கொஞ்ச நீரை, பிடிக்கு (பெண் யானைக்கு) முதலில் ஊட்டி ஆண்யானை பின்னர் உண்ணும் என்றும் சொன்னாரே!

பசுமை நிறத்தை இழந்து தீய்ந்துபோன இலைகளைக் கொண்ட கொம்புகளால், இன்பத்திலிருந்து நீங்கிப் போனவர்களைத் துன்புறுத்தும் தன்மையுடையது காடு என்று அவர் சொன்னார். அந்தக் காட்டிலே, அன்பு கொண்ட மடப் பெடை வெம்மையால் வாடிய வருத்தத்தைத் தனது மெல்லிய சிறகை விரித்து ஆண்புறா நிழல்தந்து தீர்க்கும் என்றும் சொன்னாரே!

---

6. அடிதாங்கும் அளவின்றி அழல் அன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு எனவும் உரைத்தனரே.

10. இன்பத்தின் இகந்து ஒரீஇ இலைதீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடு என்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறகரால் ஆற்றும் புறவு எனவும் உரைத்தனரே.

மலையிலுள்ள மூங்கில்கள் வாடிப் பொசுங்கும்படி சூரியனது கதிர்கள் சுடுதலாலே யாரும் போவதற்கு அருமையானது காடு என்று அவர் சொன்னார். அந்தக் காட்டில், இனிய நிழல் இல்லாமையால் வருந்திய பெண் மானுக்கு நின்று தனது நிழலைக் கொடுத்து ஆண்மான் பாதுகாக்கும் என்றும் சொன்னாரே!

இப்படி அவர் போக்கைத் தடுக்கும் காட்சிகளையுடையது காடு. அக்காட்சிகள் நமக்கு நன்மை செய்வன. அந்தக் காட்டில் சென்றவர் நமது நல்ல நலத்தையும் கெடுக்க இசையாதவர். அதற்குக் காரணங்களும் உண்டு. நமது வீட்டில் பல்லியும் நல்ல இடத்திலிருந்து அவர் வரவைக் கூறிற்று. நல்ல அழகையுடைய மையுண்ட இடது கண்ணும் துடிக்கின்றது.

---

14. கல்மிசை வேய்வாடக் கனை கதிர் தெறுதலால்
துன்னருஉம் தகையவே காடு என்றார் அக்காட்டுள்
இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை எனவும் உரைத்தனரே.

எனவாங்கு,

19. இணைநலம் உடைய கானம் சென்றோர்
புணைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்
பல்லியும் பாங்கொத்து இசைத்தன
நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே.

[ பேணுரை = மதியாதாரை; புரிவுஅமர் = மனம் பொருந்துதல் அமைந்த; புணர்ச்சி = இன்பநுகர்ச்சி; வலிப்பல் = துணிவேன்; துடி = உடுக்கை; பிடி = பெண்யானை; களிறு = ஆண்யானை; இகந்து = நீங்கி; அசைஇய = வாடிய; கல் = மலை; வேய் = மூங்கில்; துன்னரும் = நெருங்கமுடியாத; கலை = ஆண்மான்; மடப்பிணை = பெண்மான். ]

# 11. இளமையும் காமமும்.

[ பொருள்தேடப் பிரிவேன் என்ற தலைவன் பேச்சைக் கேட்டதும் தோழி சொல்லுகிறாள். ]

பாலைவனத்தின் வேடர்கள் வில்லாலே வழிச்செல்வாரைக் கொன்று அவரது உடலை இலைகளால் மூடிமறைத்து வைப்பது, இடும் பெரிய முள்வேலி போல இருக்கும். இப்படிக் குற்றம் மிகப் பொருந்திய மலைப்பாதையில் நீரில்லாத சுனைகள் பல இருக்கும்; தாகத்தால் தண்ணீர் விரும்பிய யானைகள்—வெயிலால் உடம்பு சிறுத்துப்போன யானைகள்—அந்தச் சுனைகளைச் சுற்றிநின்று துதிக்கைகளை விட்டுத் தண்ணீர் எடுக்க முயற்சிக்கும். வெயிலின் கொடுமையால் வெப்பமேறி யிருந்த நீரற்ற சுனைப்பாறைகள் துதிக்கைகளைச் சுட்டுவிடும். துதிக்கைகள் சுடப்பட்டனவோ இல்லையோ, யானைகள் வழியல்லா வழிகளில் மனம் போனவாறாக, பழைய வழிகளைப் பாழ்படுத்தி, புதியவழிகளை உண்டாக்கி 'உய்ந்தோம் பிழைத்தோம்' என்று ஓடும்; இதனால் சரியானபாதை இதுவெனத் தெரியமுடியாத அந்தப் பெரிய காட்டுவழியிலே பொருளுக்காகப் பிரியத் துணிந்தவரே!

மிகச்சிறிது பொழுது கடத்தி, நீர் படுக்கையை விட்டு எழுந்தாலும் இச் செய்கை ஏனோ என்று அஞ்சுபவளும்

---

## பாலைக்கலி 11-ம் பாட்டு.

1. இடுமுள் நெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரம் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடுநவைஆர் ஆற்று அறுசுனை முற்றி
உடங்கு நீர்வேட்ட உடம்புயங்கு யானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப்பட்டு

வெறிநிரை வேறாகச் சாரச் சாரல்ஓடி
நெறிமயக்குற்ற நிரம்பா நீடு அத்தம்
சிறுநனி நீதுஞ்சி யேற்பினும் அஞ்சும்

நல்ல நெற்றியழகை யுடையவளுமாகிய இவளைவிட்டுப் பொருளுக்காகப் பிரியப் போகின்றவரே! நீர் வலிமை யுடைய மனத்தையுடையவர். முயன்று தேடிய பொருளால் இன்பத்தையும் உண்டாக்கிக் கொள்ளலாம் என்று சொல்கின்றவரே! இளமையும் காமமும் உமது கையிடத்தில் நில்லா; தினந்தோறும் கழிந்துகொண்டே இருக்கும். அதுவுமில்லாமல் இறக்கும் நாள் இதுவென்று அறிந்தவர்கள் உலகத்திலே இல்லை.

மார்பிலுள்ள மாலைகள் கசங்கும் வண்ணம் தழுவும் முறையான நாட்கள் கழிந்து போகாமல் பார்த்துக் கொள்வீராக. காதலறம் குற்றப்படும்படி, அந்தக் காதலோடு மாறுபட்டுப் பொருளிடத்து ஆசைகொண்டு பிரியப் போகின்றவரே! இதை நன்றாக ஆலோசியும். கிழப்பருவத்து வரும் மூப்பையும் ஆயுட்காலம் முடிந்து வரும் எமனையும் மறந்திருக்கின்ற அறிவு இல்லாதவர்கள் போலக் கெட்டவழியைப் பின்பற்றுவீரா? அல்லது அதற்கு எதிரிடையான நல்ல மக்கள் நிற்கின்ற நல்ல வழியைப் பின்பற்றுவீரா? நல்ல வழியையே பின்பற்ற வேண்டும்" என்றாள் தோழி.

---

9. நறுநுதல் நீத்துப் பொருள்வயின் செல்வோய்
உரன்உடை உள்ளத்தை செய்பொருள் முற்றிய
வளமையான் ஆகும் பொருள் இது என்பாய்
இளமையும் காமமும் நின்பாணி நில்லா
இடைமுலைக் கோதை குழைய முயங்கும்
முறைநாள் கழிதல் உறாஅமைக்கு ஆண்டை
கடைநாள் இதுஎன்று அறிந்தாரும் இல்லை
போற்றாய் பெருமநீ காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு பொருள்வயின் போகுவாய்
கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓராஅங்கு
மாற்றுமைக் கொண்ட வழி.

# 12. பேச்சு விளையாட்டு.

[ தலைவன், தலைவி, தோழி மூவரும் ஒரு இடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். 'உங்களை விட்டுப் பிரியப்போகிறேன்' என்று மெல்லச்சொன்னான் தலைவன். 'பிரிவு' என்ற பேச்சுக் காதில் கேட்டதும் கண்ணீர் கலகல வென்று வந்தது தலைவிக்கு. அதைச் சகித்துக்கொண் டிருக்கத் திறமையற்றவளானாள். ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "நானும் உங்களோடு வருவேன்" என்று தலைவி கூறினாள். தலைவன் காட்டினது கடுமையைச் சித்திரித் தான். அதே சமயத்தில் தலைவியது மென்மைத் தன்மை யையும் எடுத்துக் காட்டினான். மென்மையானவள் கடுமை யான காட்டில் இடர்ப்படுவாள் என்று எடுத்துக்கூறினான். தன்னுடன் தலைவி வர அவன் உடம்படவில்லை. இதனால் தலைவி மிகவும் ஆற்றாதவள் ஆனாள். இவற்றை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த தோழி தலைவியைப் பார்த்து, "அவர் நம்மோடு விளையாடுகிறார்; அவர் பேச்சைக்கேட்டு அழுது வருந்தும் உனது தன்மையைக்கண்டு சிரித்து விளை யாடுவதற்காக இப்பேச்சைச் சொன்னார்; அவர் பிரிகிறவர் அல்லர்" என்று சமாதானப் படுத்தினாள்.]

---

பாலைக்கலி 11-ம் பாட்டின் பதவுரை.

[ நெடுவேலி = பெரியவேலி; கொலைவர் = வேடர்கள்; கொடு மரம் = வில்; பதுக்கை = புதர்கள்; கடுநவை = கடுங்குற்றம்; ஆர் = நிறைந்த; ஆற்று = வழியிலுள்ள; உடங்கு = கூடிநிற்றல்; அத்தம் = காடு; சிறுநனி = மிகச்சிறிது; நுதல் = நெற்றி; உரன் = வலிமை; காமம் = காதல்; நின்பாணி = நின்கையில்; கோதை = மாலை; முயங்குதல் = தழுவுதல்; கடைநாள் = இறக்குமநாள்; புகர் = குற்றம்; கூற்றம் = யமன்.]

"போர் என்றால் தோள்கள் பூரிக்கும்; போர்த் தொழிலிலே மிகத்திறமைசாலி; கடும் கோபம் உடையவன்; இப்படி ஒரு அரசன். இவன் ஒரு இடத்தைப் படையெடுத்துச் சேர்ந்தான். கோபம்கொண்டு இடத்தைத் தீ வைத்துத் திரும்பினான். இடம் கருகிச் சாம்பலாயிற்று. அந்த இடம்போலக் கருகிக் காய்ந்து கிடக்கிறது, கடும் பாலை நிலம். அந்த நிலத்திலே பொரி மலர்ந்ததுபோன்ற புள்ளிகளையுடைய பெண்மான்கள் இரை ஒன்றும் கிடைக்கப் பெறாமல் திரிந்த கொம்புடைய ஆண்மான்களுடன் "தண்ணீராவது குடிப்போம்" என்று கருதிக் கானல் நீரிடம் ஓடும். மரல் என்ற உணவு வாடும்படி மலைகள் கொதிக்கும். உணவின்றி மந்திகள் வருந்தும். உரல் போன்ற அடிகளையுடைய உடம்பு வருந்திய யானைகள் குடிக்கும் தண்ணீருக்கு நீர் நிலைகள் இல்லை. ஊற்றுகள் எல்லாம் வறண்டு விட்டன, ஊறாமல். ஆகையால் சேற்றைச் சுவைத்துத் தமது செல்லுகின்ற உயிரை யானைகள் பாதுகாத்துக் கொண்டிருக்கும். மேகங்கள் பெய்தலை அங்கு நிறுத்தும். இப்படி வெப்பம் மிகுந்த வழிநடக்கமுடியாத கானகம் அது.

---

## பாலைக்கலி 12-ம் பாட்டு.

1. செருமிகு சினவேந்தன் சிவந்து இறுத்த புலம்போல
எரிமேய்ந்த கரிவறல் வாய்புகுவ காணாவாய்ப்
பொரி மலர்ந்தன்ன பொறிய மடமான்
திரிமருப்பு ஏறொடு தேர்அல்தேர்க்கு ஓட
மரல்சாய மலைவெம்ப மந்தியுயங்க
உரல்போல் அடிய உடம்பு உயங்குயானை
ஊறுநீர் அடங்கலின் உண்கயம் காணாது
சேறு சுவைத்துத்தம் செல்லுயிர் தாங்கும்
புயல்துளி மாறிய போக்கரும் வெஞ்சுரம்;

பிரகாசமான வளையல்களை அணிந்த பெண்ணே! என்னுடனே நீ அந்தக் காட்டுவழி வருகிறதானால், மென்மைத் தன்மையுள்ள உனது சிறிய பாதங்கள் அங்குள்ள கல்லின் மேல் நடக்கப்பொறுக்குமோ? தாமரை மலரின் உள்ளிருக்கும் மிகச்சிறிய இதழ்கள் அரக்கைச் சேர்ந்தால் கறுகுவது போல உனது அடிகளும் கறுக்குமல்லவா?

அழகும் ஒளியும் பெற்ற நெற்றியை உடைய பெண்ணே! என்னுடனே நீ அந்தக் காட்டுவழி வருகிறதானால், சிங்கக்கால்மேல் தைத்த தூங்கு கட்டிலில் மாட்சிமைப்பட்ட அன்னத்தூவியால் உண்டாக்கிய மெத்தையில் தூங்குகிற நீ உண்மையான சிங்கத்தின் குரலைக்கேட்டால் அச்சம் கொள்வாயல்லவா?

கிளிபோன்ற பேச்சையுடைய பெண்ணே! என்னுடனே நீ அந்தக் காட்டுவழி வருகிறதானால், மேகங்கள் பெய்து, அதனால் தளிர்த்த இலைகள் போன்ற உனது உடம்பு அழகு, அழலுடன் சேர்ந்த காற்றடித்தால் வாடும் அல்லவா?" என்கிறாரல்லவா தலைவர்.

---

10. எல்வளை எம்மொடு நீ வரின் யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆயிதழ் அரக்குத் தோய்ந்தவை போலக்
கல்லுறின் அவ்வடி கறுக்குந அல்லவோ;

14. நலம்பெறு சுடர்நுதால் எம்மொடு நீ வரின்
இலங்குமாண் அவிர்தூவி அன்னமென் சேக்கையுள்
துலங்கு மான்மேல் ஊர்தித் துயில்எற்பாய் மற்றுஆண்டை
விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை அல்லையோ;

18. கிளிபுரை கிளவியாய் எம்மொடு நீ வரின்
தளிபொழி தளிர்அன்ன எழின்மேனி கவின்வாட
முளியரில் பொத்திய முழங்குஅழல் இடைபோழ்ந்த
வளிஉறின் அவ்வெழில் வாடுவை அல்லையோ;

என ஆங்கு,

ஆதலினால் காரியத்திற்காகப் பிரிவார் என்று மிகவும் நெஞ்சழியாதே. காட்டின் கடுமையை அவரே கூறினார். அவர் போவதற்கு நாம் உடம்படமாட்டோம் என்று அவருக்குத் தெரியும். இதை அவர் உணர்வார். ஆகையால் மனதைத் திரிவுறுத்திப் போகமாட்டார். இதை நம்பு. ஏன் இப்படிக் கூறுகின்றேன் என்றால், வளைந்த காதணியை உடையவளே! கடுமையும் அருமையும் உடையது காடு என்று பேசுகிறதைத் தவிர உன்னைத் துறந்து போக மாட்டார். அவர் உன்னை விட்டுப்பிரிய முடியாதவர். உனது உடம்பு நடுக்கத்தைக் காண்பதற்காக ஒரு விளையாட்டாகப் பிரிகிற வார்த்தையைக் கூறினார். அவ்வளவு தான்— என்றாள் தோழி.

---

23. அணையவை காதலர் கூறலின் வினைவயின்
பிரிகுவர் எனப்பெரிது அழியாதி திரிபுஉறீஇக்
கடுங்குரை அருமைய காடெனின் அல்லது
கொடுங் குழாய் துறக்குநர் அல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே.

[ செரு = போர்; சிவந்து = கோபித்து; புலம் = நிலம்; வாய் புகுவ = உணவு-இரை; பொறிய = புள்ளிகளையுடைய; திரிமருப்பு = திரிந்துவளர்ந்தகொம்பு; ஏறு = இங்கேஆண்மான்; தேர்அல்தேர் = பொய்த்தேர்; கயம் = நீர்நிலை; தளி = மழைத்துளி. ]

# 13. உறுப்பின் சிறப்புகள்.

[ பிரிவை உணர்த்தினான் தலைவன். தோழி கேட்டுக் கொண்டிருந்தாள். "முன்பு எங்களைப் பாராட்டியன வெல்லாம் எங்கள் மேலுள்ள வெறுப்பு என்று இப்போது தெரிந்து கொண்டோம். இந்தப்பிரிவு உனக்கு எந்த வகையில் வந்தது" என்று கேட்டாள் தோழி. பிரிவைத் தடுக்கும் தோழி பேச்சைக் கேளுங்கள். ]

"தோள்கள் மெல்லியன; பெருமையுடையன; அழகிய மூங்கிலை ஒத்தன; இனிமையாகத் துயில் கொள்வதற்கு அணையாக உதவுவன.

கண்கள் மையுண்டவை; இரண்டு மலர் போன்றவை; அழகுடையவை; நீலமலர் போன்றவை; எழுச்சி யுடையவை; விசாலமானவை.

பற்கள் மணத்தையுடைய வண்ண மல்லிகைப் பூ மொட்டை ஒத்தவை; வண்டுகள் விரும்பியவை; நேரான ஒழுங்குள்ளவை; மிகவெண்மையானவை.

நுதல் (நெற்றி) நல்ல மணமுடையது; நல்ல தன்மை யில் அமைந்துள்ளது.

கூந்தல் மேகங்கள் போன்ற கருமையுடையது.
கொங்கைகள் மார்பிலே படர்ந்து பெரியன.
இருப்புறுப்பு அகன்றவை.

---

## பாலைக்கலி 13-ம் பாட்டு.

1. அணை மருள் இன்துயில் அம்பணைத் தடமென் தோள்;
துணை மலர் எழில் நீலத்து ஏந்தெழில் மலர் உண்கண்;
மண மௌவல் முகையன்ன மாவீழ் வான்நிரை வெண்பல்;
மண நாறு நறு நுதல்; மாரி வீழ் இருங் கூந்தல்;
அலர் முலை ஆகத்து; அகன்ற அல்குல்;

வளையல்கள் வெள்ளை நிறமுடையவை; சிலவாக வரிசை யுடையவை; இப்படி அழகுடைய நேர்மையான வளே!" —என்று இளமைக் காலத்துப் பல பல பாராட்டி, இனிமையான வார்த்தைகளைச் சொல்லி, பிரிவுத் துன்பத்திலே தள்ளுவது எம்மிடம் வெறுப்பைக் காட்டும் செய்கையாகும். அதை இப்பொழுது அறிந்துவிட்டேன்.

"பொருளில்லார் மதிக்கப்படார்; பொருளைக் காட்டிலும் மேலான சிறந்தபொருள் உலகத்தில்லை" என்று உனது மயக்கங் கொண்ட, அறியாமையை யுடைய அறிவு நினைத்ததோ? அதனால் அன்பை மறந்தாயோ?

கையில் பொருள் இல்லாத மற்றவர்களுக்குக் காதலார் என்ன காரியம் செய்து விடுவார்கள்" —என்று அயலார் கூறும் சொல்லைப் பொருளாக மதித்தாயோ?

நேர்மையிலிருந்து விலகிப் பொருள் தேடியவருக்கு அப் பொருளானது இம்மையிலும் மறுமையிலும் அவருக்கே பகையாவதை அறியாயோ?

---

6. சில நிரை வால்வளைச் செய்யாயோ! எனப்
பல பல கட்டுரை பண்டையிற் பாராட்டி
இனிய சொல்லி இன்னுங்குப் பெயர்ப்பது
இனி அறிந்தேன், அது துனியாகுதலே;

10. பொருளல்லால் பொருளும் உண்டோ என யாழநின்
மருளிகொள் மடநோக்கம் மயக்கப்பட்டு அயர்த்தாயோ;

12. காதலார் எவன் செய்ப பொருள் இல்லாதார்க்கு என
ஏதிலார் கூறும்சொல் பொருளாக மதித்தாயோ;

பொருளின் தன்மை இப்படி யாகையினாலே, அப் பொருளேயன்றி எம்மையும் பொருளாக மதிப்பாயாக. நம்முள் தழுவிய கையை விட்டுப் பிரிந்து பெறும் பொருளிடத்தில் ஆசைப்படுவதைக் கைவிடுவாயாக. அப்படிக் கைவிட்டு எம்முடன் கூடி இருப்பதே நிலையுள்ள பொருள்" என்று அறிவாயாக என்றாள் தோழி.

---

14. செம்மையின் இகந்து ஒரீஇப் பொருள் செய்வார்க்கு அப் [பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ;

அதனால்,

17. எம்மையும் பொருளாக மதித்தீத்தை நம்முள் நாம்
கவவுக்கை விடப்பெறும் பொருள்திறத்து
அவவுக் கைவிடுதல் அதுமனும் பொருளே.

[ அணை = தலையணை-மெத்தை; மருள் = போல; (உவம உருபு) பணை = மூங்கில்; தடம் = பெருமை; எழில் = அழகு; மௌவல் = வனமல்லிகை; முகை = மொட்டு; மா = வண்டு; வீழ் = விரும்பு; நிரை = வரிசை; வால் = வெள்ளை; பொருள் = பணம், தலைமை, உண்மை; ஏதிலார் = அயலார்; செம்மை = நேர்மை; இகந்து = கடந்து; ஒரீஇ = நீங்கி; அவவு = ஆசை; இனி = இப்பொழுது. ]

THE MADURA TAMIL SANGAM

# 14. இளமையை மீட்கலாமா?

[ " இந்த உலகில் பல வகை வறுமைகள் இருக்கின்றன. அந்த வறுமைகளில் எல்லாம் கொடிய வறுமை எது? அறிவு வறுமையாய் இருப்பது. இல்லாமை எல்லாவற்றைக் காட்டிலும் கொடிய இல்லாமை எது? அறிவில்லாமை. மற்ற இல்லாமையை உலகம் இல்லாமையாகக் கருதாது. அறிவுடையார் எல்லாம் உடையார். அறிவில்லாதவர் என்ன உடையரா யிருந்தாலும் ஒன்று மில்லாதவராகக் கருதப்படுவார். ஆகையால் வேறு நாடு சென்றாயினும் பேறு பெற்ற கல்வியைக் கற்கவேண்டும். இதில் காலம் கடத்தல் கூடாது" —இது தலைவன் எண்ணம். கருத்தைத் தோழியிடம் வெளியிட்டான். பிரிந்தால், ஆற்றாத் துயருடன் இருப்பாள் அருமைத் தலைவி என்ற நிலைமையை விளக்கினாள் தோழி. தக்க பருவத்தை மிக்க உவகையுடன் அனுபவியாத மடமையைத் தெளிவாக்கினாள்; இளமையது அருமையை அறிவித்தாள்; பிரிந்து செய்வதைத் தெரிந்து செய்ய வேண்டும் என்று வேண்டினாள்; கருதியதை உறுதியுடன் எக்காலத்திலும் செய்யலாம் என்று எடுத்துக் காட்டினாள். மேலும் கூறுவதை அவள் வாக்குமூலத்தில் பாருங்கள். ]

கடுங் காட்டில் கடுஞ்சின மறவர்கள் திரிகின்றனர். கோபத்தை வெளிக் கக்கும் பார்வையை உடையவர்; போரில் புறமுதுகு காட்டி ஓடாதவர். இருபுறமும் வளைக்கும் இடுகிப்படை, அரசனோடு வந்து வளைத்தாலும், அதைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்வார்கள். கணையாலா? அன்று. அன்பாலா? அன்று. அருளாலா? அன்று. பின்பு எதனால்? நாணின் நாதத்தால்! எப்படிஐயா! அது?

அழகிய சிலை என்னும் மரத்தால் வலிமையான வில் செய்கிறார்கள். அதில் முறுக்குதலையுடைய நாண் கட்டுகிறார்கள். அதை ஏற்றி நாதம் செய்கிறார்கள். அது சிங்கத்தைப் போல் கர்ச்சிக்கிறது. அந்தக் கர்ச்சனை அரசர்களைக் கலக்கிப் புறமுதுகு காட்டி ஓடச்செய்கிறது. இப்படி அரசர்களை ஓட்டுவார்களே தவிர வில்லெடுத்து அம்பு பூட்டி விரட்ட வெட்கம் அடைவார்கள் மறவர். அவர்கள் தவமுனிவர்கள் போல் தாடி வைத்திருக்கிறார்கள். தாடியின் அழகைப் பாருங்கள். கம்பீரமான பார்வையுடைய—வலிமையான கழுத்தையுடைய—கலைமானின் கொம்புகளைப் போல, நேராகப் போகாமல் திருகி முறுக்குக் கொண்டு கீழ் நோக்கிப்போன தாடி. தாடி இருக்கிறதே தவிர தவமுனிவர் தன்மை இருக்கிறதா? அது தான் முற்றும் விரோதம். அன்பு அவர்களிடமில்லை. அருள் அறவே இல்லை. பின் என்ன தான் உண்டு? கைம்மாறு உண்டு. என்ன கைம்மாறு? வழிப்போவாரிடம் பொருளை வாங்கிக்கொண்டு புண்ணைக் கொடுத்தனுப்புதல். அது தான் அவர்களது கைம்மாறு. இங்ஙனம் மறவர் திரியும் அரிய காட்டிடத்தே;

---

## பாலைக்கலி 14-ம் பாட்டு.

1. அரிமான் இடித்தன்ன அம்சிலை வல்வில்
புரிநாண் புடையில் புறங் காண்டல் அல்லால்
இணைப்படைத்தானை அரசோடு உறினும்
கணைத்தொடை நாணும் கடுந்துடி ஆர்ப்பின்
எருத்து வலிய எறுழ்நோக்கு இரலை
மருப்பில் திரிந்து மறிந்து வீழ்தாடி
உருத்த கடுஞ்சினத்து ஓடா மறவர்
பொருள் கொண்டு புண் செயின் அல்லதை அன்போடு
அருள் புறம் மாறிய ஆரிடை அத்தம்;

தலைவ! நீ அகப்பொருளை விட்டுப் புறத்திலே மாறி, பொருளைத் திரட்ட ஆசைகொண்டு, போக எண்ணுகிறாய். அசோகின் தளிரை ஒத்தது இவள் அழகு நிறம். அந் நிறம் நீ பிரிந்தால் பசலை நிறத்தாலே விழுங்கப்பட்டு, பழைய நிலைமை போய்விடும். புதிதாகத் திரட்டிய பெரிய செல்வத்தால் போன அந்த அழகை மீட்கமுடியுமா?

கற்றும் கேட்டும் நிறைந்த அறிவுடைய பெரியோரிடம் சென்று குற்றமற்ற விரதங்களிருந்து பல நூல்களைக் கற்க விரும்புகிறாய். இவள் முகம் இனிய கிரணங்களை யுடைய சந்திரனை ஒத்தது. அந்த முகம், நீ பிரிந்தால், பாம்பால் விழுங்கப்பட்ட சந்திரனைப் போல, பசப்பால் விழுங்கப்பட்டுப் பாழ்படும். நீ கற்ற கல்வியால் அந்த அழகிய முகத்தை மீட்கமுடியுமா?

பின்னிய சுற்றத்தார்களது தொடர்பை நீக்கி, பிறர் நாட்டிலே புகுந்து, பழகி, அங்கு நிலைத்த நட்பை ஆக்கி நீ திளைக்க விரும்புகிறாய். முறுக்கு அவிழ்ந்த நல்ல நீல மலரைப் போன்றன இவள் மையுண்ட கண்கள். நீ பிரிந்தால், இவள் ஓயாது அழுவாள். கண்களிலிருந்து

10. புரிபுநீ புறமாறிப் போக்கு எண்ணிப் புதிது ஈண்டிப்
பெருகிய செல்வத்தால் பெயர்த்தரல் ஒல்வதோ
செயலைஅம் தளிர் ஏய்க்கும் எழில் நலம்; அந்நலம்
பசலையால் உணப்பட்டுப் பண்டைநீர் ஒழிந்தக்கால்;

14. பொய்யற்ற கேள்வியால் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தால் மறுத்தரல் ஒல்வதோ
தீங்கதிர் மதிஏய்க்கும் திருமுகம்; அம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலைந்தக்கால்;

18. பின்னிய தொடர்நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்து நீ
மன்னிய புணர்ச்சியால் மறுத்தரல் ஒல்வதோ

கண்ணீர் பெருகும். அது குளிர்ந்த நீராய் இருந்தாலும், எரிகின்ற திரி கக்கும் நெய் போல் இருக்கும். உனது பிற நாட்டுப் பழக்கத்தால் இந்த அழுகையையும் கண்ணீரையும் நிறுத்தி அழகை மீட்க முடியுமா?

இவற்றையும் பாதுகாத்து இனி நடக்க வேண்டிய வற்றையும் ஆராய்ந்து முடிவுசெய்க. வளமையோ தினந் தோறும் இங்கிருந்தே செய்து கொள்ளமுடியும். முளையை ஒத்த பல்வரிசையை யுடைய முறுவல் மகளிருள்ளே உயர்ந்த ஆராய்ச்சியால் தேர்ந்தெடுத்தது இவள் இளமை. அந்த இளமை கழிந்ததானால் மீட்டும் தரமுடியுமா?

---

புரிஅவிழ் நறுநீலம் புரை உண்கண் கலுழ்பு ஆனாத்
திரி உமிழ் நெய்யேபோல் தெண்பனி உறைக்குங்கால்;

எனவாங்கு,

23. அனையவை போற்றி நினைஇயன நாடிக்காண்;
வளமையோ வைகலும் செயலாகும்; மற்றுஇவண்
முளைநிரை முறுவலார் ஆயத்துள் எடுத்து ஆய்ந்த
இளைமையும் தருவதோ இறந்த பின்னே.

[ அரிமான் = சிங்கம்; சிலை = ஒருமரம்; புரி = முறுக்கிய; புடையில் = சப்தத்தால்; இணைப்படை = இடுக்கிப்படை; எருத்து = கழுத்து; எறுழ்நோக்கு = கம்பீரமான பார்வை; இரலை = கலைமான்; மருப்பு = கொம்பு; உருத்தல் = கோபத்துடன் பார்த்தல்; ஓடா = புறமுதுகுகாட்டி ஓடாத; அத்தம் = காடு; புரிபு = அன்பு; செயலை = அசோகு; எழில் = அழகு; ஏய்க்கும் = ஒக்கும்; புரையோர் = அறிஞர்; தொடர் = இங்கே சுற்றம்; படர்ந்து = போய்; மன்னிய = நிலைத்த; புரை = ஒத்த; ஆயம் = கூட்டம்; ஆய்ந்து = ஆராய்ச்சிசெய்து; இறந்த பின் = கழிந்தபின்பு. ]

# 15. தெய்வம் தொழுதலும் குற்றம்.

[ தலைவன் பொருளைத் தேடப் போய்விட்டான். காதலி காட்டின் கடுமையை நினைக்கிறாள். ஆற்றாத தன்மை அவளை ஆட்கொள்ளுகிறது. "அவர் பொருட்டுத் தெய்வங்களைத் தொழுதலும் குற்றமாகுமா? நம் கற்புக்குப் பொருந்துமா?" என்று தோழியைச் சந்தேகம் கேட்கிறாள். தோழியின் பதிலைப் பாட்டில் பாருங்கள். ]

"தூக்கமில்லாமல் கண்கள் பசந்துபோயின. அது மாத்திரமா? துன்பம் கொண்டு கண்ணீர் வடிக்கின்றன. இதன் காரணமாக, நிறம் வாடி அழகுகள் கெட்டுப் போகின்றன. இதனால், வளையல்கள் முன் கையை விட்டுக் கழலுகின்றன. துன்பத்தை மாற்றி இன்பத்தைக் கொடுக்கும் வெற்றியை யுடைய அழகின் அழிவுக்கு அஞ்சாது பொருள் கொண்டுவரப் பிரிந்து போனவர் காதலர். அவருக்காக இப்பொழுது செய்வதாக நினைப்ப தொரு காரியம் உண்டு. ஆலோசித்தால் அதுவும் தான் :-

இயற்கை அழகு கெட்டுப்போக இவ்விடத்தே இருந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம் நாம். பொருள் மேல் ஆசைபொங்கி, நம்மேல் அன்பு துறந்து, நம்மை நினையா ராய்க் கானகத்தில் போய்க் கொண்டிருக்கிறார் காதலர்.

---

## பாலைக்கலி 15-ம் பாட்டு.

பாடுஇன்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்பு ஓடி வணங்கு இறை வளையூர
ஆடுஎழில் அழிவு அஞ்சாது அகன்றவர் திறத்துஇனி
நாடுங்கால் நினைப்பதொன் றுடையேன் மன் அதுவும் தான் :-
தொல்நலம் தொலைபு ஈங்குயாம் துயருழப்பத் துறந்துள்ளார்
துன்னிநம் காதலர் துறந்து ஏகும் ஆரிடைக்

அவர் போகும் அரிய வழியில், கல்லிலே இருந்து வரும் வெப்பம் மாற, 'அதிகத் துளியை அன்புடன் சிதறு' என்று இனிமையான ஓசையையுடைய மேகத்தை இரந்துகேட்பது நம் கற்பிற்குப் பொருந்துமா? பொருந்தா தல்லவா?

புனைந்த ஆபரணத்தை யுடைய தோழியே! தனிமை யால் இவ்விடத்தே தவித்து நின்று கொண்டிருக்கிறோம் நாம். பொருளை விரும்பிப் பகைநிலம் என்றும் பாராராய்ப் போய்க் கொண்டிருக்கிறார் காதலர். அவர் போகும் அரிய வழியில், மரக் கொம்புகள் கருகும்படி கதிரால் சுடும் சிறப்பை யுடைய சூரியனை, 'நின் கோபம் தணிக' என்று வேண்டிக் கொள்ளுதலும் நம் கற்பிற்குப் பொருந்துமா? பொருந்தா தல்லவா?

ஒளியுள்ள ஆபரணமுடைய தோழி! அவர் அருளைச் செய்யாததால் இவ்விடத்தே துயர்ப்பட்டுக் கொண்டிருக் கிறோம் நாம். பொருளைக் குவிக்கப் போய்க் கொண்டிருக்கிறார் காதலர். அவர் போகும் அரிய வழியில், உலர்ந்த சிறு தூறுகளிலே தங்கிவரும் வெப்பம் மாற 'அருளுடன் அவர் மேல் செல்க' என்று காற்றைத் தரும்

---

கல்மிசை உருப்பு இற 'கனைதுளிசிதறு' என
இன்னிசை எழிலியை இரப்பவும் இயைவதோ?

9. புனையிழாய்! ஈங்கு நாம் புலம்பு உறப் பொருள் வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய ஆற்றிடைச்
சினைகெடச் 'சிறக்கும் நின்சினம் தணிந்தீகு' எனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ?

13. ஒளியிழாய்! ஈங்குநாம் துயர்கூரப் பொருள்வயின்
அளிஒரீஇக் காதலர் அகன்று ஏகும் ஆரிடை
முளிமுதல் மூழ்கிய 'வெம்மை தீர்ந்து உறுகு' என
வளிதரும் செல்வனை வாழ்த்தலும் இயைவதோ?

வாயுவை வாழ்த்துதலும் நம் கற்பிற்குப் பொருந்துமா? பொருந்ாதல்லவா" —என்பது தலைவியின் கேள்வி.

தேன்போன்ற மொழியை யுடைய தலைவியே! வருந்தாதே. தேடும் பொருளால் வரும் சிறப்பை எண்ணிச் செல்கின்றவரிடத்து மனங் கலங்காதே. தாம் தெய்வமாயிருக்க நாம் வேறு தெய்வத்தை மனத்தால் நினைக்கவும் வழி செய்த அந்தத் தலைவரிடத்து மனம் சுழலாதே. நாடு பஞ்சத்தால் நலிந்தது; கூடும் மழை வேண்டும்; மழையை அழைக்கும் கற்புடையாள் நீ. உன் தலைவன் பிரிவால் உன் நிறம் கெட்டுப் பசப்புப் படர்ந்திருக்கிறது. கவலை கொண்டிருக்கிறாய் நீ. இந்தக் காலத்தில் மழையை அழைக்க மற்று ஒருவரைக் காணாத அறக்கடவுள் விரைந்து சென்று உன் தலைவன் பிரிவை விலக்கிற்று. இனிக் கவலை கொள்ள வேண்டாம் —என்பது தோழியின் ஆறுதல்.

---

எனவாங்கு,

18\. செய்பொருள் சிறப்பு எண்ணிச் செல்வர்மாட்டு இனையன
தெய்வத்துத் திறன்நோக்கித் தெருமரல் தேமொழி!
வறன் ஓடில் வையகத்து வான்தரும் கற்பினாள்
நிறன் ஓடிப் பசப்பு ஊர்தல் உண்டு என
அறன் ஓடிவிலக்கின்று அவர் ஆள்வினைத் திறத்தே.

[ பாடு = படுதல், இங்கே தாக்கம்; பைதல = துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன; ஆடு = வெற்றிகொண்ட; இனி = இப்பொழுது; நாடுங்கால் = ஆலோசித்தால்; மன் = அசை; உருப்பு = வெப்பம்; இற = நீங்க; எழிலி = மேகம்; புலம்பு = தனிமை; முனை = பகைவர்நிலம்; கனலி = சூரியன்; வளி = காற்று; தெருமரல் = கலங்காதே; வறன் = பஞ்சம்; வான் = மழை; நிறன் = நிறம்; ஓடி = கெட்டு; அறன் = அறக்கடவுள். ]

# 16. மருத்துவன் ஊட்டிய மருந்து.

[ தலைவன் பிரிவான் என்று தலைவி வருந்தினாள். காரணம் விசாரித் தறிந்த தோழி தலைவினிடம் சென்று பிரிவை நிறுத்தினாள். நிறுத்திய தோழி தலைவியிடம் வந்து தனது திறமையைக் கூறுகிறாள். ]

"நல்ல நெற்றி யழகுள்ள தலைவியே! படைக் கலங்களைப் புதியனவாகச் செய்து தலைவன் பழகவும், சிறந்த மெத்தையின் ஒரு புறத்தே தலைவன் கிடக்கவும், 'நாம் பிரிந்தால் இவள் எப்படி ஆற்றியிருப்பாள்' என்று நினைத்துத் தலைவன் பெருமூச்சு விடவும் செய்ய, இச்செயல் களைக் கண்டு தலைவன் மனதில் ஒரு எண்ணம் உண்டு என்று கொண்டாய். அது எத்தன்மையது என்று கருதினாய். தனது பிரிவால் நீ எவ்வளவு துன்பம் கொள்வாய் என்று அளந்து உணர்ந்து பெருமூச்சு விட்ட தலைவன் சொல் வழியே ஒழுகுதல் செய்யாதவளாய் மிகவும் ஏங்கி நடுங்கினாய். வருந்தி நடுங்காதே" என்றாள் தோழி.

"இவள் இயற்கை யழகு கெட்டுத் துன்பத்தில் அழுந்த, நீ பிரிந்து பகைவர் தந்த பொருளைப் பாதுகாத்து வலிய பல வினைகளால் அவர் நாட்டை விளக்குதலைத் துணிந்தாய். அப்படித் துணியும் போது, நீண்ட கதிரையும்

---

## பாலைக்கலி 16-ம் பாட்டு.

1. படைபண்ணிப் புனையவும், பாமாண்ட பயில்அணைப்
புடைபெயர்ந்து ஒடுங்கவும், புறம்சேர உயிர்ப்பவும்,
உடையதை எவன்கொல் என்று ஊறளந்தவர் வயின்
நடைசெல்லாய் நனியேங்கி நடுங்கல்காண் நறுநுதால்;

பிரகாசத்தையும் உடைய பூரணச்சந்திரன் தேய்பிறையில் தேய்ந்து வருதல் போல, இவள் அழகும் நிலையாமல் நாள்தோறும் தேய்ந்துவருமே! இவள் அழகு இவளுடன் நிலைபெறுமோ?

பிரிவுத்துன்பம் இவளைப் பெரிதும் வருத்த, அதனால் அழகு கெட, நீ பிரிந்து, வந்துகுவிந்த பகைவர் நாட்டு விளக்கம் பெற்ற பொருளைப் பாதுகாத்து, மேலும் தேடுதற்கு முயற்சி செய்வாய். அப்படி முயற்சிக்கும் போது வாசனையும் குளிர்ச்சியும் நிறைந்த பொய்கையில் தாமரை இலைமேல் முதிர்ந்த மொட்டுத் தங்கியிருக்க, அந்த முதிர்ந்த மொட்டிற்கு மலர்ச்சியே யமனாயிருப்பது போல உன்பிரிவே இந்தத் தலைவிக்கு யமனாகுமோ? அல்லது இவள் வாழ் நாள் நிலைபெறுமோ?

கூறுபட்ட இவள் உறுப்பழகு வேறுபட்டுப் போக, கண்டார் கவர்ச்சியுறும் இவள் தோற்றப் பொலிவு திண்டாடித் தேய்ந்து கெட்டுப்போக, மலையைக் கடந்து சென்று, தொலையிலுள்ள பகைவர் நாட்டுப் பயன்தரும் வினைகளைப் பகையிறுதற்கு முயற்சி செய்வாய். அப்படி

---

5. தொல்எழில் தொலைபு இவள் துயர் உழப்பத் துறந்துநீ
வல்வினை வயக்குதல் வலித்திமன்; வலிப்பளவை
நீள்கதிர் அவிர்மதி நிறைவுபோல் நிலையாது
நாளினும் நெகிழ்போடு நலனுடன் நிலையுமோ?

9. ஆற்றல்நோய்அட இவள்அணிவாட அகன்று நீ
தோற்றம் சால் தொகுபொருள் முயறிமன்; முயல்வளவை
நாற்றம் சால் நளிபொய்கை அடைமுதிர் முகையிற்குக்
கூற்றம்போல் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ?

13. வகைஎழில் வனப்புஎஞ்ச வரைபோக வலித்து நீ
பகையறு பயவினை முயறிமன்; முயல்வளவைத்

முயற்சிக்கும் போது, அழகுள்ள வண்டு தம் தேனை உண்ண வேண்டு மென்று காத்திருக்கும் பூக்களின் மொட்டுகள் அதிகம் வாய்க்கப்பெற்ற தடாகத்தின் தண்ணீர் தினந் தோறும் குறைந்து வருவது போல, இவள் இளமையும் குறைந்து வருமே! இவள் இளமை இவளுடன் நிலை பெறுமோ?" என்று இங்ஙனம்,

பெரும்புகழ் மீளியாகிய தலைவனை அடுத்து, அவன் விரும்பிய பொருளைப் பற்றிப் புகழ்ந்து அறத்தையும் அழுத்தமாகக் கூறினேன். அந்த நேர்மையான சொல் அவன் மனதை மகிழ்வித்தது. திருத்தமுள்ள உடம்பிலே மருத்துவன் ஊட்டிய மருந்து போல் அச்சொல் பயன்பட்டு அவன் செல்லுகையை நிறுத்தியது. அவனும் மகிழ்ந்து போக்கைத் தவிர்ந்தான்.

---

தகைவண்டு புதிதுஉண்ணத் தாதுஅவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ?

எனவாங்கு,

18. பொருந்தியான் தான்வேட்ட பொருள் வயினினைந்த சொல்
திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்தாகி மனன் உவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே.

[ உயிர்த்தல் = பெருமூச்சுவிடுதல்; துயர்உழப்ப = துன்பத்தில் அழுந்த; வயக்குதல் = விளக்குதல்; வலித்தி = துணிந்தாய்; தொகு பொருள் = வந்துகுவிந்தபொருள்; அடை = இலை; கூற்றம் = யமன்; வனப்பு = தோற்றப்பொலிவு; வரை = மலை; தடம் = தடாகம்; கொல் = ஐயம். ]

# 17. இல்வாழ்க்கைச் சிறப்பு

[“ஐய! தேடற்கரிய சிறப்புள்ள பொருள்மேல் ஆசை கொண்டு உனது மனம் தூண்டி நிற்கிறது. ஆனால் இவளை விட்டு நீ பிரிய நினையாதே. தலைவி தோளில் தக்க முறையில் அழகு நிறைய ஆசை கொண்டு தொய்யில் எழுதினாய். இவள் மனம் உன்னையே நினைத்து உறுதி கொண்டது. அந்தத் தொய்யில் அழகையும் இந்த மார்பின் சுணங்கின் அழகையும் கைவிட்டுப் பிரிந்து நீ காலம் கடத்த முடியுமா? என்று ஆலோசித்துப்பார்” என்றாள் தோழி தலைவனிடம்.]

“நீ நினைக்கிறபடி, போனவுடன் பொருளை அள்ளிக் கொண்டு வந்துவிட முடியாது. நீ போற்றிப் புகழும் பொருளைச் சென்றவர்கள் சிறிது காலம் தங்கித் தத்தம் தகுதிக் கேற்ப வருந்தி முயற்சி செய்து தேடவேண்டும். அப்படி யில்லாமல் ஒரு இடத்திலே ‘சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது’. வேறு தேசம் சென்று பொருள் தேடாதவரெல்லாம் பட்டினி கிடந்து செத்தாரில்லையே! இளமையும், இருவரும் ஒத்த காதலும் உடையவர்கள் வேறு

---

**பாலைக்கலி 17-ம் பாட்டு.**

1. அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்பப்
பிரிந்துறை சூழாதி ஐய; விரும்பி நீ
என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பில் சுணங்கும் நினைத்துக்காண்;
சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது;
ஒழிந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்;
இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்

வளமையைத் தம் உடைமையாக்க விரும்புவ துண்டோ? இளமைச் செல்வமும் இருவரும் ஒத்தகாதற் செல்வமும் மற்றைச் செல்வங்க ளெல்லாவற்றையுமே தந்து நிற்கும்" என்றாள் தோழி தலைவனைப் பார்த்து.

"வெள்ளம் போன்ற காதலோடு ஒரு கையால் தழுவி, மற்றொரு கையால் இருவருக்கும் இருக்கும் ஒரே ஆடையை உடுத்திக் கொண்டு பிரியாது தம் வாழ்நாள் முழுதும் வாழ்பவர் வாழ்க்கையே வாழ்க்கை. அது தான் இல் வாழ்க்கை. கழிந்துபோன இளமை மீண்டும் தருவதற்கு ஆகாது" என்று தோழி மேலும் கூறினாள்.

இங்ஙனம் இல்வாழ்க்கைச் சிறப்பைத் தோழி எடுத்துக் கூறும் தன்மை எவராலும் புகழாது இருக்க முடியாது. 'பிரிவேன்' என்ற தலைவனுக்குக் கொடுக்கும் சூடு இது.

---

வளமை விழைதக்கது உண்டோ; உளநாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன் கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை; அரிதரோ
சென்ற இளமை தரற்கு.

[வேட்கை = ஆசை; துரப்ப = தாண்ட; உறை = தங்குதல்; சூழாதி = நினையாதே; 'என்தோள்' என்றாள் தலைவியும் தானும் ஒருவர் எனக்கருதி; தொய்யில் = தொழில் எழுதும் சித்திரம்; நினைத்துக் காண் = ஆலோசித்துப்பார்; விழைதக்கது = விரும்பத்தக்கது; உள நாள் = ஒருவருக்கு ஏற்பட்ட வாழ்நாள்; ஒன்றினார் = பிரியாது ஒன்றாய் வாழ்ந்தார்.]

# 18. பேதைப் பெண்ணானேன்.

[ தலைவன் பிரிவான் என்று அறிந்தாள் தோழி. இனிய சொல்லி விலக்க முயற்சித்தாள். ஒத்துக் கொள்ளாத நிலையைத் தலைவன் முகம் காட்டிற்று. அதன் பின் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கலிப்பாக் கண்ணாடியில் கண்டு களியுங்கள். ]

“ வஞ்சனையில்லாத இனிமையான வார்த்தைகளைக் களவுக் காலத்தில் சொல்லித் தழுவிய ஐயனே! அவ் வார்த்தைகள் இப்பொழுது பொய்யாகப் போகின்றனவே. பேதைப் பெண்ணாகையால் உனது சூதை அறிய முடியாத வளானேன். அச்செய்தியை யான் எங்ஙனம் அறிவேன்? பெரிய வீட்டிலுள்ளார் பலரால் அடக்க முடியாத அலரை எங்களுக்குத் தந்து, சூரியன் கோபித்துச் சுடும் காட்டிடைப் போக நீ நினைத்தலை இப்போது அறிந்தேன். நல்ல மகனான தன்மை இப்பொழுது உன்னிடம் இல்லை என்பது தெளிவாகி விட்டது.” —இப்படியாகத் தோழியின் நெஞ்சுகுமுறி, வார்த்தைகள் வாயினின்றும் புறப்பட்டன. இன்னும் கேளுங்கள்.

---

## பாலைக்கலி 18-ம் பாட்டு.

1. செவ்விய தீவிய சொல்லி அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான்று அவையெல்லாம்
பொய்யாதல் யான் யாங்கு அறிகோ மற்று ஐய!
அகனகர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்
மகன் அல்லை மன்ற இனி;

"இனி நீ நினைத்த காரியத்திற்குச் செல்லுக. தாமதியாமல் செல்லுக. அங்கு உனது காரியத்தைப் பூர்த்தி செய்க. "அன்பு நீங்க, மனம் மாறி யான் வந்துவிட்டேன்; அவள் என்னை நினைத்து வருந்துவாள்; அவள் நிலைமையையும் செய்தியையும் அறிவீர்களா?" என்று இங்கிருந்து வருவாரை நீ விசாரியாதே. விசாரித்தால் தலைவி இறந்துபோன செய்தியை அவர்கள் இயம்பவும் கூடும். அது கேட்டால் உனக்கு ஒரு அவலம் உண்டாதலும் உண்டு. சூரியன் போல விளங்குகின்ற உனது தலைமை கெடுதலும் ஆகும். கெடுதற்கு அரிய நீ செய்யும் காரியம் முடியாமல் போதலும் கூடும். அது ஒரு இழுக்கும் ஆகும்." என்று சொன்னாள் தோழி.

---

7. செல் இனிச் சென்று நீ செய்யும் வினைமுற்றி
"அன்பு அற மாறி யாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ" என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல். வினவில்,
பகலின் விளங்கும் நின் செம்மல் சிதையத்
தவலரும் செய்வினை முற்றாமல் ஆண்டு ஓர்
அவலம் படுதலும் உண்டு.

[ செவ்விய = வஞ்சனையில்லாத; தீவிய = இனிமையான; அஞ்ஞான்று = களவுக்காலம்; அகனகர் = பெரியவீடு; கொள்ளா = அடக்கமுடியாத; பகல் = சூரியன்; முனி = கோபிக்கிற; வெஞ்சுரம் = வெப்பம் மிகுந்தகாடு; உள்ளல் = போகநினைத்தல்; மன்ற = நிச்சயமாக; இனி = இப்பொழுது; வினை = காரியம்; என்திறம் = எமது நிலைமை; வினவல் = விசாரியாதே; செம்மல் = தலைமை; தவலரும் = கெடாத; ஆண்டு = அங்கு. ]

# 19. பலவளம் கூறும் நிலம்.

[ தலைவியிடம் தன் பிரிவைத் தலைவன் சொன்னான். 'உம்முடன் வருவேன்' என்றாள் தலைவி. அவன் காட்டின் கடுமையும் தலைவியது மென்மையும் கூறினான். தலைவி வாழ் நாளது சுருக்கமும் இளமையது அருமையும் கூறித் தன்னை யும் உடன் அழைத்துச் செல்ல வேண்டினாள். ]

'நெல்லோ நெல்லு' என்று கூறும் நிலங்கள். இவ்விதமாகப் பல தானியங்களையும் பலர் அறியக் கூறி, 'எடுத்துக் கொண்டு செல்க; வேண்டிய மட்டும் கொண்டு செல்க; திருப்பித் தர வேண்டாம்' என்று கூறும் பலவளங்கள் நிறைந்த—பயனுள்ள நிலங்கள். அவை கதிரவன் கொடுமையால் ஈரமறக் காய்கின்றன. குற்றம் நிறைந்த கோபத்துடன் சூரியன், செல்லும் தனது கதிர்களைச் சொரிகிறான், பூமியில். தணியாத அந்தக் கொடிய கோடைக் காலத்தில், வருத்தத்தினை யுடைய பெரிய யானைகளின் கூட்டம் குளிர்ச்சியை விரும்பி, பசி நோயுடன் திரியும். அந்தக் கூட்டத்திற்கு, மணிகள் திகழும், வெற்றியைக் கொடுக்கும் பெரிய மலைகள் நிழல் கொடுத்துத் தாங்கும். நிழல் கொடுக்கும் மலைகளும் வெம்ப, பூமி 'படீர்' என்று வெடித்துப் பிளக்க, தெளிந்த தண்ணீரையுடைய நீர்நிலைகள்

---

## பாலைக்கலி 19-ம் பாட்டு.

1. பல்வளம் பகர்பு ஊட்டும் பயன்நிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினம் சொரிதலின்
தணிவில் வெங்கோடைக்குத் தண்நயந்து அணிகொள்ளும்
பிணிதெறல் உயக்கத்த பெருங்களிற்று இனம் தாங்கும்
மணிதிகழ் விறன்மலை வெம்ப மண்பகத்
துணிகயம் துகள்பட்ட தாங்கு அழல் வெஞ்சுரம்;

குருவி குடிக்கத் தண்ணீர் இல்லாமல் ஈரமற்றுத் தூசிகிளம்ப அழல் தூங்குகிற வெப்ப மிக்க காடு அது.

“கிளி மொழியாய்! உனது அடிகளுக்கு அக்காடு பொருந்துமா? மழைத் துளிகளைக் கண்டறியாத காடா யிற்றே” என்று கூறுகின்றவரே! ஒரு இடத்தில் நிலையாத காற்றைக் காட்டிலும் வேகமாகச் செல்வது நிலையில்லாத வாழ்நாள். உமது மனத்தின் அளித்துளியையே தினமும் எதிர்பார்த்து வாழ்கிறேன். நீர் பிரிந்தால், அவலத்தைக் கொண்டு நெஞ்சழிவேனோ? இறந்துபடுவேனே.

“அமிழ்தம் ஊறும் எயிற்றாய்! உண்ணும் தண்ணீர் நீ விரும்பினால் அங்குக் கிடையாதே” என்று அறத்தைக் கருதிக்கூறுகின்றவரே! யாற்றில் தண்ணீர் போவதுபோலத் திரும்பிவராமல் கழியக் கூடியது இளமை. உமது மனத்தின் தெளிந்த பண்பை நம்பி வாழ்கிறேன். நீர் பிரிந்தால், இங்குச் சுழன்று நெஞ்சழிவேனோ? இறந்து படுவேனே.

“மாட்சிமைப் பட்ட அழகையும் மூங்கிலை வென்ற தோளையும் உடையவளே! அந்தக் காட்டுவழி வந்தால் உனது இளைப்பைத் தணிக்கும் நிழலையுடைய மரம் அங்கு

---

7. “கிளிபுரை கிளவியாய்! நின்அடிக்கு எளியவோ?
தளிஉறுபு அறியாவே காடு” எனக் கூறுவீர்!
வளியினும் வரைநில்லா வாழும்நாள் நும் ஆகத்து
அளிஎன உடையேன் யான் அவலம் கொண்டு அழிவலோ?

11. “ஊறுநீர் அமிழ்தேய்க்கும் எயிற்றாய்! நீ உணல் வேட்பின்
ஆறுநீர்இல” என அறன்நோக்கிக் கூறுவீர்!
யாறுநீர் கழிந்தன்ன இளமை நும் நெஞ்சு என்னும்
தேறுநீருடையேன் யான் தெருமந்து ஈங்கு ஒழிவலோ?

15. “மாண்எழில் வேய்வென்ற தோளாய்! நீ வரிற்றாங்கு
மாண்நிழல் இல ஆண்டை மரம்” என்க் கூறுவீர்!

இல்லையே" என்று கூறுகின்றவரே! நீண்டகாலம் நிழலில் இருக்கும் தளிர் வெளுத்துப் போவதை அறிவேன். நீர் பிரிந்தால், உமது திருவடி நிழலைக் கைவிட்டு யான் இங்கே இருத்தலைச் சூழ்வேனோ? இறந்து படுவேனே.

"நெருங்க முடியாத வெப்பம் மிகுந்தது காடு" என்று கூறுகின்றவரே! அம்பு செல்ல முடியாத நெருக்க முள்ள கற்காட்டு வழியில் பெருமையையுடைய கழுத்தை யும் அழகையும் உடைய ஏறு திரிகின்றன. அவற்றின் பின்னால் இணைபிரியாப் பிணையும் நீங்காமல் திரிவதைக் காணீரோ? அவை பிரியுமோ? நீர் அறியப் பிரியாவே; ஆதலால், என்னையும் உடன் கொண்டு செல்லும்.

---

நீள்நிழல் தளிர்போல நிறன் ஊழ்த்தல் அறிவேன் நும்
தாள்நிழல் கைவிட்டு யான் தவிர்தலைச் சூழ்வலோ?

எனவாங்கு,

20. "அணையரும் வெம்மைய காடு" எனக் கூறுவீர்!
கணைகழிகல்லாத கல் பிறங்கு ஆரிடைப்
பணைஎருத்து எழில் ஏற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ பிரியுமோ அவையே.

[பைதற = ஈரம்கெட; செல்கதிர் = செல்லும் கிரணங்கள்; தண்நயந்து = குளிர்ச்சியைவிரும்பி; பிணி = இங்கே பசிப்பிணி; தெற = வாட்ட; உயக்கத்த = வருத்தத்தினையுடைய; இனம் = கூட்டம்; மண்பக = பூமிவெடிக்க; கயம் = நீர்நிலை; துகள் = தூசி; தாங்குஅழல் = நிலைத்துத் தங்கும் அழல்; வளி = காற்று; ஆகம் = மார்பு; அளி = கிருபை; எயிறு = பல்; உணல் = உண்ண; வேட்பின் = விரும்பினால்; பணை = பெருமை.]

## 20. அவற்றுள் எது உண்மை?

[ பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைவனிடம் வலியச் சென்றாள். களவுக் காலத்தில் அவன் கூறிய ஆசைவார்த்தைகளை அவன் காதுக்கு ஓசை செய்தாள். இப்பொழுது கூறும் இனிமையற்ற அவன் வார்த்தைகளையும் எடுத்துக் காட்டினாள். பொருளின் தன்மையை இது வெனக் காட்டினாள். தலைவியது ஆற்றாமையை அருளுடன் கவனிக்கும்படி வேண்டினாள். ]

பால் போன்ற வெள்ளை நிறமுள்ள மருப்பையும் (கொம்பு), உரல் போன்ற பாதங்களையும், ஈரமான நல்ல வாசனையையுடைய மதநீரையும் உடையது யானை. கூட்டத்தைப்பிரிந்த அந்த ஆண் யானை, பாலைவழியில் காவல் செய்வது போலப் படுத்திருக்கும். அவ் வழியாக வேறுநாடு சென்று "பொருளைத் தேடுதற்காக இவளைப் பிரிந்திருக்கவும் என் நெஞ்சு விரும்புகிறது" என்று அருளில்லாத சொல்லையும் இப்போது நீர் சொன்னீர்.

நன்மையையும் வாசனையையும் உடைய தலைவியின் நெற்றியை விருப்பத்துடன் தடவி "உன்னைவிட்டுப் பிரியேன்; பயத்தைப் போக்குவாயாக" என்று நன்மை தரும் சொல்லையும் நீரே முன்பு சொன்னீர்.

---

### பாலைக்கலி 20-ம் பாட்டு.

1. பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி
ஈர்நறும் கமழ்கடாஅத்து இனம்பிரி ஒருத்தல்
ஆறு கடிகொள்ளும் வேறுபுலம் படர்ந்து
"பொருள்வயிற் பிரிதல் வேண்டும்" என்னும்
அருளில் சொல்லும் நீ சொல்லினையே;
நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி
"நின்னில் பிரியலென் அஞ்சல் ஓம்பு" என்னும்
நன்னர் மொழியும் நீ மொழிந்தனையே;

அவற்றுள், எது உண்மை? மயக்கத்தை யுடைய மகனே! சொல்வீராக.

பொருள் தான் 'உரிமையுடையவர் இவர் தான் நமக்கு' என்று பாராது பழவினைப்படி நல்வினை செய்தாரிடத்துத் திரும்பித்திரும்பிச் சென்று தங்கும். ஆகவே ஒரு வழி நில்லாதது பொருள் என்று நாம் உணர்ந்தோம். அப்படிப் பட்ட பொருளைத் தேடப் 'போகிறேன்' என்கின்றவரே! பிரிந்துபோம். ஆனால் ஒன்றை மறந்துவிடும். யார் உம்மை விட்டுக் கண் இமைக்கிற காலம்கூட வாழமாட்டாத தன்மையையும் மடப்பத்தையும் உடையவளோ, அவளுடைய மூங்கில் போன்ற அழகிய தோள்கள் இரண்டையும் மறந்து விடும். அப்படி மறந்து விட்டுப்பிரியும்.

நீர் பிரிந்தால் உயிர்விடுவாள் தலைவி. நல்வினை நீர் செய்திருந்தால் பொருள் தானே உம்மை வந்து சேரும். ஆகையால் இல்லறம் நடத்தி இங்கேயே இன்பத்துடன் இரும். பிரிந்து துயரம் அடையவேண்டாம்" என்றாள்.

---

அவற்றுள், யாவோ வாயின? மாஅன் மகனே!
கிழவர் இன்னோர் என்னாது பொருள் தான்
பழவினை மருங்கில் பெயர்பு பெயர்பு உறையும்
அன்ன பொருள் வயின் பிரிவோய் நின்னின்று
இமைப்பு வரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோள் இணை மறந்தே.

[ மருள் = போன்ற; மருப்பு = கொம்பு; புரை = போன்ற; ஈர் = ஈரமான; கடாஅம் = மதநீர்; ஒருத்தல் = ஆண்யானை; நன்னர் = நன்மை; நீவி = தடவி; வாயின = உண்மையாயின; மான்மகனே = மயக்கத்தையுடைய மகனே; கிழவோர் = உரிமை உடையோர்; அமை = மூங்கில். ]

# 21. கடன் வாங்குதலும் கொடுத்தலும்

["போகிறேன் பிரிந்து பொருளை நாடி" என்றான் தலைவன். "ஆகாது அச்செயல் ஐயா!" என்றாள் தோழி. "பிரியாது இங்கேயே இருந்து இல்லறம் பேணி ஒழுகு" என்று மேலும் வற்புறுத்தினாள்.]

அறிவு நிறைந்த உலகத்தீரே! ஒரு மனிதன் தன் வாழ்க்கைச் செலவுக்காக மற்றொருவரிடம் கடன் கேட்டு வாங்கும்போது, அவரைத் துதிசெய்து தன் முகத்தை இனிமையாக வைத்துக் கொள்ளுகிறான். அதே மனிதன் அந்தக்கடனைத் திருப்பிக் கொடுக்கும்போது, அந்த மனிதரை மறைவாகக் கடிந்து, முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொள்ளுகிறான். வட்டியைத் தள்ளவேண்டுமென்று வாதாடுகிறான். சிறிது பணத்தை விட்டுவிட வேண்டுமென்று கெஞ்சுகிறான். இப்படிப் பலவிதமாகக் கேட்டுப்பார்த்து முகத்தைச் சுண்டவைத்துக் கொள்கிறான். இது இந்தநாள் வழக்க மாத்திரம் இல்லை. இது "பண்டும் இவ்வுலகத்து இயற்கை. இன்று புதுவது அன்று."

"அதுபோல, களவுக் காலத்தில் நீ எங்களைப் புகழ்ந்தாய்; தலைவியின் பல்லைப் பாராட்டினாய்; ஐவகைக் கூந்தலை மெய் வகையாய்ப் புகழ்ந்தாய்; இளங் கொங்கையை இன்பந் தரும் பொக்கிசம் என்று துதித்தாய். ஆனால், இக்கற்புக் காலத்திலோ பல்லின் வரிசையைப் பார்க்கக் கண் மறுக்கிறது; கூந்தலின் செய்வினையைக் காண மனம் கூசுகிறது; தளர் கொங்கையைப் புகழ வாய் உளறுகிறது."

---

## பாலைக்கலி 21-ம் பாட்டு.

1. உண்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும் தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்
பண்டும் இவ்வுலகத்து இயற்கை, அஃது இன்றும்
புதுவது அன்றே புலனுடை மாந்திர்!;

காதல் என்னும் உயிரையும் விரும்பிப் புகுத்திவிட்ட பாவை போன்றவர் நலனுடைய பெண்கள். அவர் மொழியைக் களவுக் காலத்தில் கடவார் தலைவர். பாவையர் நலத்தைத் தலைவர், தேனைத்தேடும் வண்டுபோல் தேடி அலைந்து உண்டு, அதனை அவர் விரும்பிய கற்புக்காலத்து அவர்களுக்குக் கொடாது, கேடு செய்து ஓடுங்கால் புறத்தார் கூறுவது எவனோ? "நீ பொருளைத் தேடப்போவதும் நான் மறுப்பதும் அப்படி இருக்கிறது" என்று தலைவனைப் பார்த்துத் தோழி கூறினாள்.

ஐய, நல்ல முல்லை மலரின் மொட்டையொத்த வரிசையான நெருங்கிய எமது பல்லை முன்பு பாராட்டினாய்; இப்போது அவற்றின் நிலைத் தளர்வைப் பாராட்டினையோ? இல்லையே.

ஐய, நீலமணிபோலப் பிரகாசிக்கும் எமது கூந்தலை நெய்தடவி ஐவகையாகச் செய்ததை முன்பு பாராட்டினாய்; இப்போது அவற்றின் செய்வினையைப் பாராட்டினையோ? இல்லையே.

---

5. தாயுயிர் பெய்த பாவை போல
நலனுடையார் மொழிக்கண் தாவார்தாம் தந்நலம்
தாதுதேர் பறவையின் அருந்து இறல் கொடுக்குங்கால்
ஏதிலார் கூறுவது எவனோ நின் பொருள்வேட்கை;

9. நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டினாய் மற்றுஎம் பல்லின்
பறிமுறை பாராட்டினையோ? ஐய;

12. நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
ஐவகை பாராட்டினாய் மற்றுஎம் கூந்தல்
செய்வினை பாராட்டினையோ? ஐய;

ஐய, குளத்துக்கு அழகுகொடுக்கும் தாமரை அரும்பு போன்ற இளங் கொங்கையை முன்பு பாராட்டினாய்; இப் போது எம்மார்பில் அமிழ்தம் சுரக்கும் தளர் கொங் கையைப் பாராட்டினையோ? இல்லையே.

தகடாகிய பொன்னின் விளக்கத்தைப் போன்றது தலைவியின் சுணங்கு. சூரியன் காயும் கானகத்திலே போக வேண்டு மென்கிறாய் நீ. நீ பிரிந்தால் சுணங்கு கெடும். போகின்ற உன்னை எங்களது துக்கத்தைச் சொல்லி விலக் கக்கூடிய நல்வினையும் எங்களுக்கு உண்டோ? அதுதான் இல்லை. பின்பு எதுதான் எங்களைக்கூடி நிற்கிறது? உன்னைப் பேணிப் பிணிப்புகள் அதிகமாகிய பின்பு இல்லறத்தை அனுபவிக்க முடியாத தீவினைதான் எங்கள் தீராத வினை யாகக்கூடி நிற்கிறது” என்று எடுத்துக் காட்டினாள்.

---

15. குளன்அணி தாமரைப்பாசு அரும்பு ஏய்க்கும்
இளமுலை பாராட்டினாய்மற்றுஎம் மார்பின்
தளர்முலை பாராட்டினையோ? ஐய;

எனவாங்கு,

19. அடர்பொன் அவிரேய்க்கும் அவ்வரி வாடச்
சுடர்காய் சுரம்போகும் நும்மையாம் எங்கள்
படர்கூற நின்றதும் உண்டோ? தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை.

[உண்கடன் = வாழ்க்கைக்குக்கடன்; வழிமொழிந்து = துதி செய்து; இரக்குங்கால் = யாசிக்கும் பொழுது; புலனுடை = அறிவு நிறைந்த; மாந்திர் = மக்கள்; தாயுயிர் = தாவிஉயிர்; தாவி = விரும்பி; தாவார் = கடவார்; தாது = பூந்தாது; இறல் = கேடு; அடர் = தகடு; சுடர் = சூரியன்; படர் = துன்பம்; தொடர் = பிணிப்பு; துவ்வாமை = அனுபவியாமை.]

## 22. “இனி உண்ணேன்; வாழேன்.”

[தலைவியிடமே உணர்த்திவிட்டான் பிரிவை. தாங்க முடியாத துக்கத்தால் வாடினாள் தலைவி. தன்னை உடன் அழைத்துச் செல்லும்படி தலைவனை வேண்டினாள். அவன் மறுத்தான். அப்போது தலைவி கூறுகிறாள். கேட்டுப்பாருங்கள் அவள் நியாயத்தை.]

விளங்குகின்ற ஒளி யுடைய கொம்புகளை யானைகள் கொண்டுள்ளன. அந்த யானைகளைக் காட்டில் உழப்புகிறார்கள் (அலைக்கிறார்கள்) ஒரு நிலத்தார். அந்த நிலத்தைவிட்டு அடித்துத் தூரத்த ஆசைப்படுகிறார்கள். கவணை என்னும் கருவியால் போக்குகிறார்கள். குறி தப்பிய கவணைக்கல் மரக் கொம்புகளிலுள்ள பூக்களை உதிர்க்கிறது; மாடுபோல வழி மறைத்துப் படுத்திருக்கின்றன மலைகள். அவை வெம்பிப் போயிருக்கின்றன. அப்படிப்பட்ட கானகத்திலே—போக முடியாத கானகத்திலே—கொடிய வெப்பம் மிகுந்த கானகத்திலே தனியாக நீர் போக, உம்மைவிட்டு நான் இங்கே தனியே இருக்கமுடியுமா? புத்தியில்லாத் தன்மையைக் கொண்டதால் இரக்கத்தைக் கொள்ளவேண்டிய இந்த ஊருக்குச் சிரித்தற்குரிய காரியமாகும் நான் தனியாயிருத்தல். நீர் பிரிந்தால் உண்ணவேண்டியவற்றை உண்ணவும்

---

### பாலைக்கலி 22-ம் பாட்டு.

1. இலங்குஒளி மருப்பின் கைம்மா உளம்புநர்
புலம்கடி கவணையின் பூஞ்சினை உதிர்க்கும்
விலங்குமலை வெம்பிய போக்கு அரும் வெஞ்சுரம்
தனியே இறப்ப, யான் ஒழிந்திருத்தல்
நகுதற்கு ஒன்றுஇவ் அழுங்கல் ஊர்க்கே;

இனியான்

மாட்டேன். உமக்காக வாழவேண்டிய உயிரைக்கொண்டு வாழவும் மாட்டேன் —என்கிறுள் தலைவி.

தண்ணீர் வேட்கை. பனை ஓலையைப் பறித்துக் குடை (பட்டை) செய்து, அதில் தண்ணீர் குடிப்பார்கள். தண்ணீர் குடித்து, எச்சிலானதால் பட்டையை எறிந்து விடுவார்கள். அப்படி எறிந்த குடையைப் போன்றவர், தோள் நலத்தை உண்டபின் கணவரால் துறக்கப்பட்ட மகளிர்.

பரம்பரையாக அந்த ஊரில் குடியிருந்தவர்கள். செழிப்பமாக வாழ்ந்தவர்கள். அவர்களால் அந்த ஊருக்குச்சிறப்புண்டு. அவர்களும் அந்த ஊரைவிட்டுப் போய் விட்டார்கள். மற்றைக் குடியினரும் அந்த ஊரைவிட்டுப் போய்விட்டார்கள். பாழ் அடைந்த ஊராய்ப் போய்விட்ட அதனைப் (பாழூரைப்) போன்றவர், மனம் விரும்பி அருள் செய்து நலத்தையுண்டபின் கணவரால் கைவிடப்பட்ட மகளிர்.

நல்ல வாசனையுடைய பூ. மனம் மகிழ்விக்கும் பூ. ஆனந்தத்தை அள்ளிக்கொடுக்கும் பூ. அழகை அளிக்கும் பூ. அந்தப்பூவை விருப்பத்துடன் அணிந்து கொள்வார்கள். சிறிது நேரம் கழித்து அதை எடுத்து வீசிவிடுவார்கள்.

---

உண்ணலும் உண்ணேன் வாழலும் வாழேன்;

8. தோள்நலம் உண்டு துறக்கப்பட்டோர்
வேள்நீர் உண்ட குடையோர் அன்னர்;

10. நல்குநர் புரிந்து நலன் உணப்பட்டோர்
அல்குநர் போகிய ஊரோர் அன்னர்;

12. கூடினர் புரிந்து குணன் உணப்பட்டோர்
சூடினர் இட்ட பூவோர் அன்னர்;

அந்தப் பூவைப்போன்றவர், மனம் விரும்பிக்கூடிக் குணத்தையுண்டபின் கணவரால் களிக்கப்பட்ட மகளிர்.

யானும் உம்மிடத்தில் அப்பொருள்களைப் போன்றவள். கொலைத் தொழிலைச் செய்யக் கடுமையான கொள்கையோடு நாய் ஓடுகிறது. ஓடி மானைப் பிடித்து விடுகிறது; தனக்கு உரித்தென்று அகப்படுத்திக் கொள்கிறது. ஆனால் அதற்கு உரித்தாகவில்லை. அந்த நாயுடன் வந்த—நாயை அனுப்பிய வலைவர்க்கு அந்த மான் உரித்தாகிறது. அது போல என் நெஞ்சு எனக்கு உரித்தாகும் என்று நான் அகப்படுத்தியும், என்னிடம் நில்லாமல் உம்முடன் வருகிறது. வலைவர்கள் மடமானை அமர்த்தியதுபோல என் நெஞ்சினையும் உமக்கு உரித்தாக்கிக் கொண்டு பாதுகாத்துக் கொள்ளும்—என்று கல்லுருகக் கணவனிடம் சொன்னாள்.

---

எனவாங்கு,

15. யானும் நின்னகத்து அனையேன்: ஆனது
கொலைவெங் கொள்கையொடு நாய் அகப்படுப்ப
வலைவர்க்கு அமர்ந்த மடமான்போல
நின்னுங்கு வரூஉம்என் நெஞ்சினை
என்னுங்கு வாராது ஓம்பினை கொண்மே.

[கைம்மா = யானை. கையையுடைய மிருகம் என்பது பொருள்; உளம்புநர் = கலைப்பவர்கள் (அலைப்பவர்கள்) கவணை = ஒரு கருவி; சினை = கொம்பு; விலங்குமலை = தடுத்துநிறுத்தும்மலை; இறப்ப = போக; அழுங்கல்ஊர் = இரக்கப்படவேண்டியஊர்; (ஊருக்குப்புத்தி இல்லையாதலின்.) அல்குநர் = தங்கியிருந்தோர். ]

# 23. கனவில் புலம்பல்.

[ தோழியிடம் கூறும் தலைவி கூற்றைக் கேளுங்கள். ]

முன் கசப்பாய்ப் பின் காரியத்தில் இனிப்பாய் இருக்கும் பேச்சையும், கேட்ட காலத்திலேயே இனிப்பாய் இருக்கும் பேச்சையும் பேசும் தோழியே! 'நெஞ்சு நடுக்கம் கொள்ளும்படி பலமுறை கேட்டும், கேட்ட அது உண்மையோ பொய்யோ என்று சந்தேகம் கொண்டும் அஞ்சிய காரியம் உண்மையாகிப் பின்பு வருத்தமாகும்' என்னும் பழமொழி நிச்சயமாக உண்மையாகி விட்டது.

உனக்கு உறவானவர் புதிது புதிதாகப் பலநாளும் என்னைப் பாராட்டி வந்தார். இந்தப் பாராட்டுதல் ஒரு பிரிவை உடைத்தாயிருக்கும் என்று எண்ணினேன். எண்ணி அதை ஆராய்ந்தேன். குற்றமற்ற படுக்கையிலே இருவரும் ஒருமனப்பட்டுப் படுத்து உறங்கினோம். நான் விழித்துக் கொண்டேன். எனது தோளிலே தலைவைத்துத் தூங்கினார் தலைவர். கனாக்கண்டு புலம்பினார் :-

" ஆராய்ந்த கோல் தொழிலையுடைய செறிந்த தொடி என்னும் ஆபரணத்தை அணிந்த முன் கையினை யுடையாள் கையாறு கொள்வாளே! உயிர்ப்பு இன்றி வினை ஒழிந்து ஆராய்ந்து இருப்பாளே! செய்வது இன்னதென்று அறியாது கல்லுப் போல் இருப்பாளே! சிறப்புமிக்க

---

## பாலைக்கலி 23-ம் பாட்டு.

1. நெஞ்சு நடுக்குறக் கேட்டும் கடுத்தும் தாம்
அஞ்சியது ஆங்கே அணங்காகும் என்னுஞ் சொல்
இன் தீங் கிளவியாய்! வாய்மன்ற : நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட, யானும்
இது ஒன்று உடைத்து என எண்ணி, அதுதேர
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்
பாயல் கொண்டு என்தோள் கனவுவார் : 'ஆய்கோல்
தொடிநிரை முன் கையாள் கையாறு கொள்ளாள்

இல்லறம் காத்து வளர்க்க வல்லவள் ஆவாளா? நான் பணத்தைத் தேடித் திரும்பி வரும்வரை இவள் ஆற்றி இருப்பாளா? குத்தும் கொம்புடைய யானைகள் கானல் நீருக்கு ஓடும் நெடிய மலைகள் நிறைந்த கொடிய வெப்பம் மிகுந்த காட்டைக் கடந்துபோய் நேர்மை நிலையில் பொருளைச் சம்பாதித்துத் திரும்பி வரும்வரை இவள் கையாறு கொள்ளாது இல்லறம்காத்து இனிதிருக்க வல்லவளா?" என்று தலைவர் கனவில் புலம்பினார்.

ஆராய்ந்த ஆபரணம் அணிந்த தோழியே! அவர் நினைத்தது பொருளிடம் பிரிதல் என்றால், அவர் இல்லாமல், அவரைப் பிரிந்து நாம் உயிர் வாழும் சக்தியற்றவர்கள் ஆவோம். அப்படிச் சக்தி யற்றவர்களானால், "அவள் மார்பில் எழுதும் தொய்யிலைத் துறந்து பிரிந்துபோய் விட்டார் அவர்" என்று மகளிர் கூறும்பழி அவரிடத்தே நிற்கும். அவர் பிரிந்தால் எனது உயிர் அவருடனே கூடப் போய்விடும் என்று அவரிடம் சொல்லிவிடு என்றாள் தலைவி.

---

9. கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடு மருப்பு யானை இலங்கு தேர்க்கு ஓடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருள் முற்றும் அளவு' என்றார், ஆயிழாய்!
தாமிடை கொண்டது அதுவாயின் தம்மின்றி
யாம் உயிர் வாழும் மதுகை இலேமாயின்,
"தொய்யில் துறந்தார் அவர்" எனத் தம்வயின்
ஒய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல் என் உயிர்.

[ நின்கேள் = நினது உறவினர்; புதுவது = புதிதுபுதிதாக; இது ஒன்று உடைத்து = இது ஒரு பிரிவை உடைத்தாயிருக்கிறது; அதுதேர = அதை ஆலோசிக்க; சேக்கை = படுக்கை; விடுமருப்பு = குத்தும்கொம்பு; இலங்குதேர் = பேய்த்தேர்; மதுகை = சக்தி. ]

# 24. வீமசேனனும் யானையும்.

[ " தலைவரே ! நீர் பொருள்தேடப் பிரிந்தால் உம்மைத் தூற்றும் பொருள்கள் சில தலைவியிடம் உண்டு. அவற்றை நீர் நன்கு அறிவீர். ஆகையால் நீர் பிரியாமல் இரும்" என்றாள் தோழி. அவள் பாரதக்கதையை நிகழும் நிகழ்ச்சியுடன் பொருத்திக்காட்டும் சித்திரத்தைக் கவனியுங்கள். ]

வயக்குறும் மண்டிலம் (கண்ணாடி) போன்ற முகத்தையுடையவன் திருதராஷ்டிரன். 'திருதராஷ்டிரன்' என்னும் பெயர் வடமொழிப் பெயர். அவன் அஸ்தினாபுரி அரசன். அவனுக்கு நூறு புத்திரர்கள். அவர்களில் மூத்தவன் துரியோதனன். துரியோதனன் ஒரு சூழ்ச்சி செய்தான். பார் புகழும் பஞ்ச பாண்டவர்களைச் சூழ்ச்சியால் அரக்கு மாளிகையில் இருக்கும்படி செய்தான் துரியோதனன். அழகு நிறையப் புனையப் பட்டது அரக்கு மாளிகை. பாண்டவர் மாண்டுபோக வேண்டுமென்று நினைத்து அதற்கு நெருப்பு வைக்கச் செய்தான் துரியோதனன். பாண்டவர் தூங்கிக் கொண்டிருக்கும் சமயம் நெருப்புப் பிடித்துச் சுற்றிக் கொண்டது. பாண்டவரில் வீமசேனன் விழித்தெழுந்தான். தாயையும் தமயனையும் தம்பியரையும் தன்கையில் எடுத்துக் கொண்டு, நெருப்பைக் கடந்து காட்டில் புகுந்தான். இது பாரதக்கதை.

---

## பாலைக்கலி 24-ம் பாட்டு.

1. வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவர் என்று உலகு ஏத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை அரக்கு இல்லைக் கதழ் எரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களிறு அகத்தவா
முளிகழை உயர்மலை முற்றிய முழங்கு அழல்

உலர்ந்த மூங்கிலை யுடைய உயர்ந்த மலைகள். மூங்கிலும் மூங்கிலும் மோதுவதால் நெருப்புண்டாய் விட்டது. நெருப்புச் சுற்றிக்கொண்டது. நடுவிலே யானைக் கூட்டம். களிப்பு விளங்குகின்ற மத நீரையுடைய கடிய ஆண்யானைகள் உள்ளே அகப்பட்டுக் கொண்டன, பாண்டவரைப் போல. தம் இனத்தைக் காக்கும் அழகுள்ள யானை ஒன்று. தண்டாயுதம் போன்ற துதிக்கையாகிய தடக்கையை உடைத்தாயிருந்தது. புகையும் அழலும் பரந்து சூழ்ந்து கிடக்கும் காட்டில் நெறியல்லா நெறிமேல் பாதை யுண்டாக்கிக்கொண்டு, தனது கூட்டத்தையும் கூட்டிக்கொண்டு, வீறிட்டுக்கொண்டு தப்பிப் போய்விட்டது, வீமன் போல. இப்படி, குன்றுகள் எல்லாம் அழலைக் கக்கும் கொடிய காட்டில் இவளை விட்டுப் பிரிந்து போவீரானல், ஐயனே! இவள் நிலைமையைக் கேட்பீராக.

பக்கத்திலே இருந்து சிறப்புச் செய்து அவர் புகழைப் பேசிவிட்டு, அவர் எழுந்து போனவுடன் அவர் பழியைத் தூற்றும் கீழ்மக்கள் தொடர்பு போல, நீர் கூடியிருக்கும் போது அழகைக் காட்டியிருந்து, நீர் பிரிந்தவுடன் உமது பழியைத் தூற்றி அழும் கண் என்னும் பகை தலைவியிடம் உண்டல்லவா?

---

7. ஒள்உரு அரக்கு இல்லை வளிமகன் உடைத்துத் தன்
உள்ளத்துக் கிளைகளோடு உயப்போகுவான் போல
எழுஉறழ் தடக்கையின் இனம் காக்கும் எழில்வேழம்
அழுவம்சூழ் புகை அழல் அதர்பட மிதித்துத்தம்
குழுவொடு புணர்ந்துபோம்; குன்று அழல் வெஞ்சுரம்
இறத்திரால் ஐய! மற்று இவள் நிலைமை கேட்டீமின்;

13. மணக்குங்கால் மலர்அன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்கால் கலுழ்பு ஆனுக் கண் எனவும் உள அன்றே

ஒருவன் செல்வத்துடன் இருக்கும்போது அவனுடன் சேர்ந்திருந்து, அச்செல்வ வளமை எல்லாம் அனுபவித்து, செல்வம் சுருங்கியபோது உதவி செய்யாது, கைவிட்டுப் பிரிந்து செல்லும் உணர்வில்லாதவர் தொடர்பு போல, நீர் இவ்விடத்திலே இருந்து அருள் செய்யும் காலத்தில் முன்கையில் அழகு பெற்றிருந்து, ஒரு நாள் நீர் நீங்கினால், அன்று முன்கையிலிருந்து கழன்று ஓடும் வளை என்னும் பகை தலைவியிடம் உண்டல்லவா ?

ஒருவருடன் நட்புப் பூண்டு, அவருடைய மறைவான செய்திகளை அறிந்து, அவரைவிட்டுப் பிரிந்த போது அந்த மறைவான செய்திகளை யெல்லாம் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறும் பெருந்தன்மை இல்லாதவர் தொடர்பு போல, நீர் ஒரு நாள் அளி செய்யும்போது ஒளியுடன் இருந்து, ஒரு நாள் நீர் பாராட்டா விட்டால் உமது குணத்தைப் பிறருக்கு அறிவித்துப் பழி தூற்றிப் பசந்து காட்டும் நுதல் என்னும் பகை தலைவியிடம் உண்டல்லவா?

---

சிறப்புச்செய்து உழையராப் புகழ்போற்றி மற்றவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்பு போல்;

17. ஈங்குநீர் அளிக்குங்கால் இறை சிறந்து ஒருநாள் நீர்
நீங்குங்கால் நெகிழ்போகும் வளை எனவும் உள அன்றே
செல்வத்துள் சேர்ந்து அவர் வளன் உண்டு மற்றவர்
ஒல்கிடத்து உலப்பிலா உணர்விலார் தொடர்பு போல்;

21. ஒருநாள்நீர் அளிக்குங்கால் ஒளி சிறந்து ஒருநாள்நீர்
பாராட்டாக்கால் பசக்கும் நுதல் எனவும் உள அன்றே
பொருந்திய கேண்மையின் மறைஉணர்ந்து அம்மறை
பிரிந்தக்கால் பிறர்க்கு உறைக்கும் பீடிலார் தொடர்புபோல்;

யான் உமக்குக் கூறும் வார்த்தைகள் இனி என்ன இருக்கின்றன. என்னைக் காட்டிலும் அவற்றின் தன்மையை நீர் நன்கு அறிந்திருக்கிறீர். நெடுந்தகையீர்! இன்னும் கேளும். மழையின் துளி பெறாத இம்மாநிலம் போல் உமது அளியின் துளி பெறாத இவள் அழகு பாழ்படும்.

---

எனவாங்கு,

26. யாம்நிற் கூறுவது எவன் உண்டு; எம்மினும்
நீநன்கு அறிந்தனை நெடுந்தகை! வானம்
துளிமாறு பொழுதின் இவ்வுலகம் போலும் நின்
அளிமாறு பொழுதின் இவ்ஆயிழை கவினே.

[ முதியவன் = மூத்தவன்; புணர்ப்பினால் = சூழ்ச்சியால்; அகத்தரா = உள்ளே இருக்க; அரக்குஇல் = அரக்குமாளிகை; முளி = உலர்ந்த; கழை = மூங்கில்; வளிமகன் = வீமன்; எழு = தண்டாயுதம்; அதர் = பாதை; தணக்குங்கால் = பிரிந்தால்; உழையர் = பக்கத்தார்; புறக்கொடை = எழுந்துபோதல்; இறை = முன்கை; ஒல்கிடத்து = சுருங்கிய இடத்து; மறை = இரகசியம்; துளி = மழைத்துளி; கவின் = அழகு. ]

# 25. நாடுகாத்தல்.

[இளவேனில் காலத்திலே தலைவன் பிரிந்து போனான். தன் நாட்டு அரசன் அடங்காத ஒரு அரசனை அடக்கி அவன் நாட்டை முறையுடன் காக்கத் தலைவனை அனுப்பியிருந்தான். தலைவன் போன இளவேனில் காலம் மறுபடியும் வந்தது. தலைவி ஆற்றாளாய் அந்தப்பருவத்தில் தான் தலைவன் தன்னைப்பிரிந்தான் என்று தோழியிடம்கூறி வருந்தினாள். தோழி தேற்றி, " இந்தப்பருவம் அவர் திரும்பி வருவதற்குத் தூது வந்ததுபோல் வந்திருக்கிறது. அவர் கட்டாயம் வந்துவிடுவார், வருந்தாதே" என்று கூறினாள்.]

" ஒருகுழையணிந்த நம்பி மூத்தபிரான்போல வெண்கடம்பு மரமும், சூரியன்போல அரும்பு அலர்ந்த செருந்தி மரமும், காமனைப்போல வண்டுகள் மொய்க்கும் காஞ்சி மரமும், சாமனைப்போல நிறம்விளங்கிய பூக்கள் நெருங்கின ஞாழல் மரமும், இடபக்கொடியுடைய இறைவனைப்போலப் பூக்கள் காலத்தை எதிர்கொண்ட இலவ மரமும், (குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய ஐவர்கள் நிறத்தின் தன்மைபோல) நிலைபெற்றிருந்தன. அவைகள் மற்ற மரங்களைப்போலப் பூக்களை விரித்துக் கரைகளிலே அழகுபெற இருந்தன. மேன்மையுடன் இளவேனில் காலம் வந்தது. அது பிரிந்தார்க்குத் துன்பம் தரும் காலம்.

---

## பாலைக்கலி 25-ம் பாட்டு.

1. ஒருகுழை ஒருவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்,
பருதியம் செல்வன்போல் நனை ஊழ்த்த செருந்தியும்,
மீனேற்றுக் கொடியோன்போல் மிஞிறு ஆர்க்கும் காஞ்சி [யும்,
ஏனோன்போல் நிறம்கிளர்பு கஞலிய ஞாழலும்,
ஆனேற்றுக் கொடியோன்போல் எதிரிய இலவமும், ஆங்கு
தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோலப் [அத்

பலவரிகளையுடைய இனவண்டுகள் புதிய தேனை உண்ணும். அந்தப்பருவம் இளவேனில் பருவம். இயற்கை அழகுகெட்ட எனது தோளை இப்பருவத்தில் நினைப்பாரா? முன்பு அந்நாட்டை ஆண்ட அரசன் மக்களைத் துன்பப் படுத்தினன். மக்கள் துன்பப்பட்டார்கள். துன்பப்பட்டு, பின்பு அவரை அடைக்கலமாக வந்து அடைந்தனர். அவர்கள் நெஞ்சு வருந்தா வண்ணம் அவர் நாட்டாட்சி நடத்த வேண்டும். பகைவர் மறுபடியும் படையெடுத்து வந்து விடாதபடி பார்க்கவேண்டும். பகைவரை வென்ற புகழை உலகத்தார் புகழ, புதுமையுடைய நாட்டில் இருக்கிறார் தலைவர். அவர் நினைப்பாரா ?

திசைதோறும் திசைதோறும் சென்று தேனை எடுக்க வண்டு திரியும் வளம்பொருந்தியது திருமருதமுன்துறை. அது வையையாற்றில் இருக்கிறது. அதில் மருதமரங்கள் அதிகம். அதில் விரிந்த மலர்கள் நிறைந்த சோலை உண்டு. அது மகிழ்வூட்டும் துறை. நீர் விளையாட்டு, பொழில் விளையாட்டு, மணல்விளையாட்டு முதலிய இன்பவிளையாட்டு களுக்கு மிகவும் பொருந்திய இடம். அந்த இடத்தில், குற்றம்தீர்ந்த எனது அழகு வாடுவதினின்று காக்க அவர்

---

போதுஅவிழ் மரத்தோடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றால் இளவேனில் மேதக;

9. பல்வரி இனவண்டு புதிது உண்ணும் பருவத்துத்
தொல்கவின் தொலைந்தஎன் தடமென்தோள் உள்ளுவார்,
ஒல்குபு நிழல்சேர்ந்தார்க்கு உலையாது காத்து ஓம்பி
வெல்புகழ் உலகுஏத்த விருந்துநாட்டு உறைபவர்;

13. திசைதிசை தேன்ஆர்க்கும் திருமருத முன்துறை
வசைதீர்ந்த என்நலம் வாடுவது அருளுவார்,

அருள் செய்வாரா? "நம்மைப் பாதுகாத்தலுக்கு உரிய அரசன் இவன்தான்; இவன் குடைக்கீழ் நாம் வாழவேண்டும்" என்று ஆசைகொண்டு அவர் நிழல் வந்து அடைந்த அந்த நாட்டுக் குடிமக்களை அவர் பாதுகாக்கவேண்டும். அதுமாத்திரமா, அவர்களை ஒரு பாரமாகக் கருதக்கூடாது. அவர்களை நல்லவிதமாகப் பாதுகாத்தால் புகழ் நாடுமுழுவதும் பரவும், உலகத்தார் புகழ்வர். இதற்காகத் தமக்குச் சொந்தமல்லாத அயல்நாட்டில் தங்கி இருக்கின்றார் தலைவர். அவர் அருள் செய்வாரா?

நீர் இல்லாமல் நீரோட்டம் சுருங்கும் இளவேனில் காலத்தில், எனது அழகிய நுதல் பசந்துபோகும். வலிமையமைந்த பெரிய அழகும் கெட்டுப்போகும். ஆகையால் அக்காலத்திலே அவற்றைக்காக்க அருள் செய்வாரா? அந் நாட்டு மன்னன் முன்பு கொடுங்கோல் செய்து வரிப் பணத்தைப் பிடுங்கினான்; அநியாயத் தண்டங்கள் விதித்தான்; அவற்றைப் பொறுக்கமுடியாமல் ஓடிவந்து அடைக்கலம் புகுந்த மக்களைப் பாதுகாக்கவேண்டும்; அவர்கள் துன்பம் போக்கி அவர்கள் இன்பம் நுகர ஆளவேண்டும்; முறைதவறிப் பொருளை ஆசைப்பட்டு அந் நாட்டிலிருந்தும் ஓடிப்போன அரசன் திரும்பவும் வந்து துன்புறுத்தாமல் காக்கவேண்டும். அதற்காக அந்த நாட்டிலே தங்கி இருக்கிறார் தலைவர். அவர் அருள் செய்வாரா?"

---

நசைகொண்டு தன்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
இசைபரந்து உலகுஏத்த ஏதில்நாட்டு உறைபவர்;

17. அறல்சாஅய் பொழுதோடு எம்அணிநுதல் வேறுகித்
திறல்சான்ற பெருவனப்பு இழப்பதை அருளுவார்,
ஊறுஅஞ்சி நிறல்சேர்ந்தார்க்கு உலையாது காத்துஓம்பி
ஆறுஇன்றிப் பொருள்வெஃகி அகன்றநாட்டு உறைபவர்.

என்று கூறி மனம் சுழலாதே. நமது காதலர் சண்டை செய்யும் உரத்தையுடைய யானைப்படையுடையவர். சண்டையில் வென்று மேம்படுபவர். நீ முன்பு கூறிய நாடுகளை வெற்றிகொண்டவர். "அவர் வருவார் என்று சொல்லிக்கொண்டு, அவர் சொல்லியனுப்பிய தூது (இளவேனிற் காலம்) வந்துவிட்டது. இனி நீ இனிது வாழ்க" என்று தோழி சமாதானப் படுத்தினாள்.

---

என நீ,

22. தெருமரல்; வாழிதோழி; நம் காதலர்
பொருமுரண் யானையர்; போர்மலைந்து எழுந்தவர்;
செருமேம்பட்ட வென்றியர்;
"வரும்"என வந்தன்று அவர்வாய் மொழித்தூதே.

[குழை = காதணி; இணர் = பூங்கொத்து; மராஅம் = வெண்கடம்பு; மீனேற்றுக்கொடியோன் = காமன்; மிஞிறு = வண்டு; ஏனோன் = சாமன்; கஞலிய = நெருங்கிய; ஆன் = காளை; ஆனேற்றுக்கொடியோன் = சிவன்; மேதக = மேன்மைதக; ஒல்குபு = கலக்கமுற்று; நிழல் = அரசன் குடைநிழல்; விருந்து = புதிய; வசை = குற்றம்; நசை = ஆசை; இசை = புகழ்; ஏதில்நாட்டு = அந்நிய நாட்டில்; அறல் = தண்ணீர்; சாஅய் = மாறி; திறல்சான்ற = வலிமையமைந்த ஊறு = துன்பம்; ஆறு = முறைமை; தெருமரல் = சுழலாதே.]

# 26. மதுரையையும் மறந்தாரோ?

[ "இளவேனில் காலத்தில் திரும்பிவருவேன்" என்று சொல்லிச்சென்ற தலைவன், இளவேனில் பருவம் வந்தும் வரவில்லை. "என்னைத்தான் மறந்து போகட்டும். பரத்தையருடன் இந்நகரில் விளையாடும் விளையாட்டையும் மறந்து விட்டாரா? மறவாதிருந்தால் திரும்பி வந்திருப்பாரே" என்று சொல்லித் துன்பப் பட்டாள் தலைவி. தலைவன் வந்ததை உணர்ந்தாள் தோழி. தலைவியிடம் போனாள். மகிழ்ச்சி தாங்கமாட்டாமல் கூறினாள். கேளுங்கள் அவள் பேச்சை. ]

கொடைத்தொழிலைக் கையாண்டவன், கொடுத்தலில் பொருட்குறை காட்டாதவன், அறம் அறிந்து நடப்பவன், குற்றமில்லாதவன் ஒருவன். அவனிடம் உள்ள செல்வம் தினந்தோறும் குறைந்துகொண்டே வருமா? வராது. வளர்ந்துகொண்டே வரும். அதுபோல, இனிமையான தண்ணீரையுடைய ஆற்றங்கரையில் உள்ள மரங்கள் செழித்து வளர்ந்துகொண்டு வருகின்றன.

மயக்கத்தைக் கொடுக்கும் பேச்சு; மான்பிணையின் மருண்டது பார்வை. அழகும் காதலும் உண்டு அவரிடம். அம்மகளிரது எயிறுபோல மணத்தையுடைய • மௌவல் மலரின் மொட்டுகள் அலருகின்றன.

---

## பாலைக்கலி 26-ம் பாட்டு.

1\. ஈதலில் குறைகாட்டாது அறன்அறிந்து ஒழுகிய
தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம் நந்தப்
பேதுறு மடமொழிப் பிணைஎழின் மான்நோக்கின்
மாதரார் முறுவல்போல் மணமௌவல் முகை ஊழ்ப்பக்

காதலரைச் சேர்ந்த மங்கையர்களின் தலைமயிரைப் போல, அறுதியையுடைய குளிர்ந்த மணல் கழன்று வீழ்ந்த தாதாலும் தளிராலும் அழகுபெற்று இருக்கின்றன.

அறிவில்லாத அமைச்சன் காரியத்தைச்செய்ய முற் படுகிறன். காரியத்தை எல்லோரும் அறிய வெளிப்படுத்தி விடுகிறன், வேண்டாதபோது. அவன் அரசனே படை வலியற்றவன். அவன் நாட்டில் பகையரசன் பள்ளம்கண்ட நீர்போலப் பாய்ந்து படையுடன் வருகிறன்.

மரங்கள் தழைக்க, மௌவல் மொட்டு அலர, மணல் அழகுபெற, இளவேனில் பருவம் வந்து தங்கிற்று, பகை யரசன் படையுடன் வருவதுபோல.

“நிலம் பொலிவுபெற மரங்களைப் பூக்கிறது. மரங் களின்மேல் குயில்கள் நிற்கின்றன. குயில்கள் காலம்கண்டு ஏக்கழுத்தம் செய்கின்றன. ஆரவாரிக்கும் குயில்கள் என்னை ஏளனம் செய்து இகழுகின்றன, தலைவன் பிரிவைக் கண்டு. அழகுகளைப்பூத்த நமது நிறம் கெட்டுப்போகும் படியாக நம்மைத்தான் அவர் மறக்கட்டும். ஆனல்; அணி கின்ற கலன்கள் பரத்தையர் உடலில் பூக்க, அந்த அழகு அவரை மகிழ்செய்ய, அதனல் அவர் அறிவு பொலிவுபெறக்

---

காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போல் கழல்குபு
தாதுஒடும் தளிர்ஒடும் தண்அறல் தகைபெறப்
பேதையோன் வினைவாங்கப் பீடுஇலா அரசன்நாட்டு
ஏதிலான் படைபோல இறுத்தந்தது இளவேனில்;

9. நிலம்பூத்த மரமிசை நிமிர்பு ஆலும்குயில் எள்ள
நலம்பூத்த நிறம்சாய நம்மையோ மறந்தைக்க

காரணமான உயர்ந்த கருத்து வளமுள்ள புகழ் நிறைந்த மதுரையையும் நினையாரோ? நினைத்தால் வருவாரே.

மலைமேல் மயில்கள் ஆட, ஊரிலுள்ளார் ஆரவாரித்து அலர்தூற்ற, நமது இயற்கை அழகு மிகவும்கெட, நம்மைத் தான் அவர் மறக்கட்டும். ஆனால், பகைவரை மாயஞ் செய்து கொல்லாமல் போர் செய்து கொல்லும் கொள்கை யுடைய முருகன், பரந்த நீரையுடைய கடலிடத்தில் மாமர மாகத்தோன்றிய சூரபன்மனை வெற்றியுடைய வேலாயுதத் தால் கொன்று வீழ்த்தினனல்லவா? அம் முருகனுடைய திருப்பரங்குன்றிலே பரத்தையருடன் விளையாடும் விளையாட் டையும் விரும்பாரோ? விரும்பினால் வருவாரே.

கருத்த அழகிய நீலமலர் போன்ற மையுண்ட கண் களும் (மருவுதல் செய்தலால்) மனமும் மகிழ்ச்சிகொள்ள, பொய்யாக அருள்செய்த நம்மைத்தான் அவர் மறக்கட்டும். அலங்கரித்துக்கொள்ளும் பரத்தையர்களுடன் சேர்ந்து மனம் பொருந்தி வையை யாற்றின் உயர்ந்த மணலிலே விளையாடி அனுபவிக்கும் மகிழ்ச்சியையும் மறந்தாரோ? மறவாதிருப்பின் வருவாரே."

---

கலம்பூத்த அணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்புஆனுக் கூடலும் உள்ளார்கொல்;

13. கல்மிசை மயில்ஆலக் கறங்கிஊர் அலர்தூற்றத்
தொல்நலம் நனிசாய நம்மையோ மறந்தைக்க
ஒன்னுதார்க் கடந்துஅடூஉம் உரவுநீர் மா கொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும்விரும்பார்கொல்;

17. மைஎழில் மலர்உண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினால் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க
தைஇய மகளிர்தம் ஆயமோடு அமர்ந்து ஆடும்
வையைவார் உயர் எக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல்;

என்றுகூறி, நோய் நிறைந்த நெஞ்சத்தோடு வருந்தாதே தோழி! "நாமில்லாத தனிமை யிருந்தால், அவளுக்கு நடுக்கம் செய்யும் இளவேனில் பொழுது வந்தால், மன்மதனுக்குக் கொண்டாடும் திருவிழா நடந்தால் அவள் மிகவும் கலங்குவாள்" என்று நினைத்துப் பகைவர்கள் மயக்கம் அடையும்படியான—கடுமையான—திண்மையான—தேரை மிக வேகமாக ஓட்டிக்கொண்டுவந்து நமக்குத் துணையாகிவிட்டார். அவரே நாம் விரும்பி ஒப்புக்கொண்ட காதலர்.

---

எனவாங்கு,

22. நோய்மலி நெஞ்சமோடு இனையல் தோழி!
"நாம்இல்லாப் புலம்பாயின், நடுக்கம்செய் பொழுதாயின்,
காமவேள் விழவாயின் கலங்குவள் பெரிது" என
ஏமுறு கடும் திண்தேர் கடவி
நாம்அமர் காதலர் துணைதந்தார் விரைந்தே.

[அறன் = தர்மம்; தீங்கரை = இனிய தண்ணீரையுடைய ஆற்றின்கரை; நந்த = தழைக்க, செழிக்க; பேதுறும் = மயக்கம் அடையும்; பிணை = பெண்மான்; முகை = மொட்டு; ஊழ்ப்ப = விரிய; கதுப்பு = மகளிர் கூந்தல்; அறல் = மணல்; தகை = அழகு; பீடு இலா = பெருமையில்லாத; ஏதிலான் = பகைவன்; எள்ள = இகழ; மறந்தைக்க = மறக்கட்டும்; கலம் = ஆபரணம்; காரிகை = அழகு; புலம் = அறிவு; புகழ்புஆனு = மிகப்புகழ் நிறைந்த; கூடல் = மதுரை; கல்மிசை = மலைமேல்; கறங்கி = ஆரவாரித்து; எக்கர் = மணல்; புரிவுண்ட = அருள் செய்த; இனையல் = வருந்தாதே; புலம்பு = தனிமை; ஏமுறு = மயக்கம் செய்யும்; கடவி = செலுத்தி; மா = மாமரம்—சூரன்.]

# 27. தூதுவிட வேண்டாம்.

[ இளவேனில் பருவம் வந்தது. அதைக் கண்டு தலைவி ஆற்றாதவள் ஆனாள். பிரிந்திருக்கும் தலைவனிடம் தூது விடவும் கருதினாள். இது தெரிந்த தோழி கூறினாள்: "நம்மைவிட்டு அவர் பிரிந்திருக்கிறார் என்று நாம் வருந்துகிறோம். நம்மைப் பிரிந்து அவர் இருப்பது, அவரால் தாங்க முடியாது. நம்மைக் காட்டிலும் அவர் வருந்துவார். ஆகையால் விரைந்து வருவார். தூதுவிட வேண்டாம்" என்று தோழி வற்புறுத்தினாள். ]

மாக்கொம்புகளிலும் மலைச்சுனைகளிலும் உள்ள பூக்கள் பாடுதற் சிறப்படைந்தவை. அவற்றை ஆராய்ந்து கொய்ய வேண்டாம். அவையே "கொடுப்போம்" என்று விரும்பிக் கொடுக்கும். அவைபோல, வாசனை கமழும் விரிகின்ற இதழ்களால் கண்ணி தொடுத்துச் சூடிக்கொள்ளும் மகளிருக்குத் திரட்சியுறத் தாழ்ந்த பூக்களை மரங்கள் கொடுக்கும். இப்படித் துறைதோறும் துறைதோறும் மரங்கள் தாழ்ந்து மகளிருக்குப் பூக்களைக் கொடுத்து அழகு பெற அமைந்து நிற்கின்றன. வையையாற்றில் ஒழுகுகின்ற —விளக்கமுடைய அறலானது சிவந்த தலைக்கோலம் தங்கின மயிர் போன்ற சிவந்த மணலை நடுவே பிளந்து கொண்டு செல்கிறது. இக்காட்சி செய்யவளின் மார்பில் முத்தாரம் தவழ்வதுபோல இருக்கிறது. இப்படியான இளவேனில் காலத்திலே,

## பாலைக்கலி 27-ம் பாட்டு.

1. பாடல்சால் சிறப்பில் சினையவும் சுனையவும்
நாடினர் கொயல் வேண்டா நயந்து தாம் கொடுப்ப போல்
தோடுஅவிழ் கமழ் கண்ணி தையுபு புனைவார்கண்
தோடுறத் தாழ்ந்து துறைதுறை கவின்பெறச்

விரிந்து அமையாத மலரானால், தம் பெட்டையை அழைத்துக் குயில்கள் கூவுமானால், நம் தலைவர் நம்மைப் பிரிந்து நினையாரானால், மயக்கம் உண்டாகும் இளவேனில் பருவம் இதுவானால், "பொறுக்க முடியாத துன்பத்தை யுடைய அவல நோயாகிய காமநோயைத் தாங்கிப் பொறுத்துக் கொண்டிருப்பாளோ" என்று நினையாது இந்நோய் எனக்கு மிகுமானால், வளைந்த முன் கையை யுடைய தோழியே! அவர் செய்யும் அருள் என்ன பயனைத் தரும்?

மலர்கள் புதரிலே இருப்பதானால், வண்டுகள் சோலையிலே இருப்பதானால், அலரை அயலார் தூற்றுவதானால், நம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறார் அவரானால், "பற்றில்லாத நெஞ்சுடனே ஊக்கமும் இல்லாதவள்" என்று நினையாது பசப்பு என் நெற்றியில் பரக்குமானால், அசைகின்ற முன் கையை யுடைய தோழியே! அவர் செய்யும் அருள் என்ன பயனைத் தரும்?

---

செய்யவள் அணி அகலத்து ஆரமொடு அணிகொள்பு
தொய்யகம் தாழ்ந்த கதுப்புப் போல் துவர்மணல்
வையைவார் அவிர்அறல் இடைபோழும் பொழுதினான்;

8. விரிந்துஆனு மலராயின், விளித்துஆலும் குயிலாயின்,
பிரிந்துள்ளார் அவராயின், பேதுறூஉம் பொழுதாயின்,
"அரும்படர் அவல நோய் ஆற்றுவள்" என்னாது
வருந்தநோய் மிகுமாயின், வணங்கிறை! அளி என்னோ?

12. புதலவை மலராயின், பொங்கரின் வண்டாயின்,
அயலதை அலர் ஆயின், அகன்றுள்ளார் அவராயின்,
"மதலைஇல் நெஞ்சொடு மதன் இலள்" என்னாது
நுதல் ஊரும் பசப்பாயின், நுணங்கிறை! அளிஎன்னோ?

நீர் மணலிலே தோய்ந்து விடுமானால், கிளையின் பூக்களில் வண்டு ஆரவாரிக்குமானால், தளிர்கள் மாமரங்களிடத்தில் இருக்குமானால், நம்மைப் பிரிந்து மறந்திருப்பது அவரானால், "பூப் போன்ற அழகை இழந்த கண்கள் தனிமைகொண்டு உறக்கம் கொள்ளாதே" என்று நினையாது பாயல்நோய் என்னைப் பிடித்து வருத்துமானால், அழகிய வளையல் அணிந்தவளே! அவர்செய்யும் அருள் என்ன பயனைத் தரும்?"

என்று, ஆராய்ந்த அணியினை யுடையாய்! அப்படிப் பயனில்லாத வார்த்தைகளைப் பேசாதே. தூர நாட்டில் இருக்கின்றவருக்கு நம் வருத்தத்தைச் சொல்லித் தூது அனுப்ப வேண்டாம். நம்மைக் காட்டிலும் இந்தக் காலத்தில் பிரிந்திருத்தலை அவர் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. பிரிந்தார் என்று வருந்தி என்ன காரியம் செய்கின்றாய். சீக்கிரமாக வந்துவிடுவார். வருந்தாதே.

---

16. தோயின அறலாயின், சுரும்பார்க்கும் சினையாயின்,
மாவின தளிராயின், மறந்துள்ளார் அவராயின்,
"பூ எழில் இழந்தகண் புலம்பு கொண்டு அமையாது"
பாயல்நோய் மிகுமாயின், பைந்தொடி! அளிஎன்னோ?

எனவாங்கு,

21. ஆயிழாய்! ஆங்கனம் உறையாதி; சேயார்க்கு
நாம்தூது மொழிந்தனம் விடல்வேண்டா: நம்மினும்
தாம் பிரிந்து உறைதல் ஆற்றலர்:
பரிந்து எவன் செய்தி: வருகுவர் விரைந்தே.

[ தோடு = இதழ்; தையுபு = கட்டி; தோடுற = திரட்சியாக; ஆலும் = கூப்பிடும்; பேதுறும் = மயக்கம்கொடுக்கும்; மதலை = பற்றுக்கோடு; மதன் = ஊக்கம். ]

# 28. பிரிந்தவர் பரிந்து வந்தார்

[இளவேனில் பருவம்வந்தது. தலைவி மிகவும் சங்கடப் பட்டாள். தோழி தேற்றிப் பொறுத்திருக்கவேண்டும் என்று வற்புறுத்தினாள். ஏது சொல்லி என்ன? பிரிவுத் துன்பம் அவளைப்பேதுறுத்திற்று. அவன் திரும்பிவருவதை உணர்ந்தாள் தோழி. மகிழ்ச்சி மட்டற்றதாயிற்று. தலைவி யிடம் இச்செய்தியைக்கூறும் தன்மையைப் பாருங்கள்.]

அழகெல்லாம் திரண்டு உருவெடுத்ததுபோல ஒரு கட்டழகி. அவள் மணந்து கருத்தரித்தாள். வேட்கைநோய் பிறந்தது. அது இளமைக்காலத்து அழகைக் கெடுக்கும் அளவன்றி அதிகம் கெடுத்தது. அது கண்டு வருந்தினர் சுற்றத்தார். கண்டார் பயந்து நடுங்கும்படி உடல் வருத்தம் கொண்டு ஒரு புதல்வனை ஈன்றெடுத்தாள். அப்புதல்வனைக் கொண்டு அக்குடியை எல்லாம் பாதுகாத்து மகிழ்ச்சியில் ஆழ்த்திப் புகழ்ச்சியைப்பரப்பி வாழ்ந்திருந்தாள். அது போல, இளவேனில் பருவநிலம் இருந்தது.

நிலத்திலே பயிரை உண்டாக்கினார்கள் உழவர்கள். இடையிலே பயிருக்குப்பலவித இன்னல் நோய்கள் பரவின. உழவர்கள் மிகவும் வருந்தினார்கள். பருவ மழைகளும் பருவக்காற்றும் நோய்களைப்பாழ்படுத்தின. பயிர் விளைந்து பலன் தந்தது. உழவர்கள் மகிழ்ந்தார்கள். உணவுகளைக் கொண்டுபோகக் குடிமக்களைக் கூவி அழைத்தார்கள்.

கட்டழகி கருத்தரித்து இளமை அழகுகெட இருந் தாள்.. நிலம் பயிராகிய கருத்தரித்துச் சேறும் நீருமாய் அழகுகெட இருந்தது. கட்டழகிக்கு வேட்கைநோய் வருத் தக்கண்டு வருந்தி இருந்தார்கள் சுற்றத்தார். நிலத்தில் பயிருக்குப் பலநோய்கண்டு வருந்தி இருந்தார்கள் உழவர் கள். கட்டழகி ஆண்மகனைப் பெற்றெடுத்தாள். நிலம்

விளைந்து பலன் தந்தது. புதல்வனைக்கண்டு சுற்றத்தார் மகிழ்ந்தார்கள். நிலம் விளைந்ததைக் கண்டு உழவர்களும் குடிமக்களும் மகிழ்ந்தார்கள்.

தன்குடியை விளக்கக் குழவியை ஈன்று அழகை இழந்தவள் புனிறு (ஈன்றபருவம்) தீர்ந்து புது அழகு பெறுகின்ற நிலைமைபோல, குடிமக்களுக்கு உணவுப் பொருள்களை விளைந்து கொடுத்து, தனது பசுமை நிறம் நிலை குலைந்த நிலம், இளவேனில் பருவத்தில் தனது புனிறுதீர்ந்து புது அழகு பெற்று விளங்கிற்று.

வளையலை அணிந்த இளைய மகளிர் மணலில் சிறு வீடு கட்டி விளையாடினார்கள். அவ்வீட்டில் ஒரு பொம்மை அமைத்து அதற்கு மாலை போட்டதுபோல் மணலிலே அமைத்து மகிழ்ந்தார்கள். அதுபோல, வார்ந்த மணலில் பூக்கள் உதிர்ந்து கிடந்தன. அதனால் அடையாளம் ஏற்பட்டது. மணல் அந்த அடையாளத்தைத் தாங்கிக் கிடந்தது.

இளைய மகளிர் கூந்தல் மயிர்போல், குவிந்த பெரிய மணலை ஊடே அறுக்கும் தண்ணீர் ஒழுகியது.

---

## பாலைக்கலி 28-ம் பாட்டு.

1. தொல்எழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்
அல்லாந்தார் அலவுற ஈன்றவள் கிடக்கைபோல்
பல்பயம் உதவிய பசுமைநீர் அகன் ஞாலம்
புல்லிய புனிறு ஒரீஇப் புதுநலம் ஏர்தர,
வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள,
இளையவர் ஐம்பால்போல் எக்கர் போழ்ந்து அறல்வார,
மாஈன்ற தளிர்மிசை மாயவள் திதலைபோல்
ஆயிதழ்ப் பன்மலர் ஐயகொங்குறைத்தர,
மேதக இளவேனில் இறுத்தந்த பொழுதின்கண்;

மாமைநிறம் கொண்டவள் தேமல்போல, மாமரம் ஈன்று கொடுத்த சிறிது முற்றின தளிர் இருந்தது. அதன் மேல் அழகிய இதழ்களையுடைய பல மலர்களின் வியக்கத் தக்க பூந்தாதுகள் உதிர்ந்தன.

நிலத்தில் அழகு தோன்ற, மணல் அடையாளத்தைத் தன்னிடத்தே கொள்ள, நீர் ஒழுக, பூந்தாதுகள் உதிர, பெருமையுடன் இளவேனில் பருவம் வந்துவிட்ட பொழுதிலே!

சில சொல்லும் தோழியே! தூரத்திலிருக்கும் தலைவரிடத்தில் சென்ற எனது நெஞ்சினை, நீ கூறும் அளவன்றி அதிகம் ஆற்றிப் பாதுகாப்பேன். அதனால் என்ன பயன்? வாய் விரிந்து, பனியை ஏற்றுக் கலந்த பல மலரைத் தொட்டு, 'காதலரைப் பிரிந்தார்க்கு வருத்தம் செய்வேன்' என்று கங்கணம் கட்டிக்கொண்டு வாடைக்காற்று என்னைத் துன்புறுத்துகிறதே.

பிரகாசமான ஆபரணத்தையுடைய தோழியே! இளவேனில் பருவத்தையும் நினையாது, நம்மைத் துறந்தாரிடத்து மனம்விரும்ப, அதனால் என்மேனிவாடும் செய்கையைப் பிறர் அறியலாகாது என்று நினைத்து, அப்பொழுதே மறைப்பேன். அதனால் என்ன பயன்? மாலைச்சூரியன்

---

10. சேயார்கண் சென்ற என்நெஞ்சினைச் சின்மொழி!
நீகூறும் வரைத்தன்றி நிறுப்பென்மன்; நிறைநீவி
வாய்விரிபு பனியேற்ற விரவுப் பன்மலர் தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந்து அலைத்தரூஉம்;

14. போழ்து உள்ளார் துறந்தார்கண் புரிவாடும் கொள்கையைச்
சூழ்புஆங்கே சுடரிழாய்! கரப்பென்மன்; கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணும் இருந்தும்பி
யாழ்கொண்ட இமிழிசை இயன்மாலை அலைத்தரூஉம்;

அலர்த்திய பூவிலிருந்து புதியதேனைக் கரிய வண்டு உண்டு, யாழ்போல இசை செய்யும் மாலைக்காலம், யான் மறைக்க முடியாதபடி துன்புறுத்துகிறதே.

குற்றம் நீங்கிய மொழியையுடைய தோழியே! வளையல்கழல வழிசெய்த காதலரிடத்து எனது அரியஉயிர் சென்று தங்கும். அது அவரிடம் சென்று செறியாமல் காக்கத் துணிவேன். அதனால் என்ன பயன்? அப்படித் துணிகின்ற என்னை, நெடிய நிலாக்கதிர், வாசனையுள்ள மலரை அலர்த்த, அதன் இதழ்களைத் திறந்து வண்டுகள் தேனை உண்ண, நல்லமணம் நாற்புறத்தும் வீச, கங்குல் (இராக்காலம்) வந்து துன்புறுத்துகிறதே"

என்று சொல்லி, வருந்தினாய். தங்கியநின் வளையல்கள் கழல, தூரநாட்டில் உன் துன்பம் கருதாது, போய்த்தங்கிய தலைவர் திரும்புவார். தேடும் பொருளை நினைத்துச்சென்ற தலைவர், திருந்திய பற்கள் விளங்கப் பேசும் உனது அமிழ்த மொழிகளை நினைந்து, நமது அருந்துயர் களைய வந்தார். இனி நீ வருந்தாதே என்றாள் தோழி.

---

18. தொடிநிலை நெகிழ்த்தார்கண் தோயும் என்ஆருயிர்
வடுநீங்கு கிளவியாய்! வலிப்பென்மன்; வலிப்பவும்
நெடுநிலாத் திறந்து உண்ணநிறை இதழ்வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றம் கங்குல் வந்து அலைத்தரூஉம்.

எனவாங்கு,

23. வருந்தினை; வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்நோக்காதுஏகி நம்
அருந்துயர் களைஞர் வந்தனர்
திருந்து எயிறு இலங்கு நின்தேமொழி படர்ந்தே.

## 29. பகைவரினும் நடுங்கினள்

[ இளவேனில் பருவம் வந்தது. பண்டைய நினைவுகள் எல்லாம் தலைவியின் மனதில் ஒன்றின்பின் ஒன்றாக ஓடி வந்தன. தலைவருக்கு "இந்தக் காலத்தை ஞாபகப்படுத்துவார் யாராவது இருந்தால் நல்லது" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். அவற்றைத் தலைவி பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த பாணன் தலைவனைக்கண்டு வணங்கிக் கூறினான்.]

அருமையான தவம் செய்தவர்கள் அனுபவிப்பது போல வண்டுகள் புதுத்தேனை உண்டன. அழகு விளங்க அரும்புகள் விரிந்து அமையாத மரக்கிளைகள் தோறும் தேனை உண்டு கிடந்து வண்டுகள் இசை செய்தன. அவற்றுடனே கருந்தும்பிகளும் வருத்தம் தீர்ந்து எல்லா இடங்களிலும் இரை கொள்ளும்படி மரங்கள் அவற்றை எதிர்கொண்டு அழைத்தன. இப்படி இளவேனில் காலம் வந்தது.

"சூரிய ஒளியைக் கண்டறியாத, விரிந்த மலர்களையுடைய, குளிர்ந்த பொழிலில் குயில் கூவும் காலம் இது என்று தலைவருக்குக் கூறுவார் உண்டானால் நல்லதாகும்.

### பாலைக்கலி 29-ம் பாட்டு.

1. அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல் அணிகொள
விரிந்து ஆனச்சினைதொறூஉம் வேண்டும்தாது அமர்ந்துஆடிப்
புரிந்து ஆர்க்கும் வண்டொடு புலம்பு தீர்ந்து எவ்வாயும்
இருந்தும்பி இரைகொள எதிரிய வேனிலான்;

5. துயிலின்றி யாநீந்தத், தொழுவை அம்புனலாடி
மயிலியார் மருவுண்டு மறந்து அமைகுவான் மன்னோ;

(பாலைக்கலி 28-ம் பாட்டின் பதவுரை.)

[ வயவுநோய் = பிள்ளையைப் பெறும்போது உண்டாகும் நோய்; புனிறு = ஈன்றணிமைப்பருவம்; வடு = அடையாளம்; எக்கர் = மணல் மேடு; திதலை = தேமல்; கரப்பென் = மறைப்பேன்; கைநீவி = கை கடந்து; வடு = குற்றம். ]

தூக்கமில்லாமல் துன்பக்கடலில் நான்நீந்த, மயில் போன்ற சாயலையுடைய பரத்தையர் மருவுதலை உண்டு, அவருடனே அழகிய நீரையுடைய மடுவிலே விளையாடி, என்னையும் மறந்து களித்திருப்பாரே! அதற்காகவாவது வருவாரே! இந்தப் பருவத்தை எடுத்துரைப்பார் எவரும் இல்லையே!"

"தாங்கமுடியாத புகழையுடைய மதுரையிலே அரும்பு அவிழ்ந்த நறுமுல்லையிலே வண்டுகள் ஆரவாரிக்கும் காலம் இது என்று தலைவருக்குத் தெளியக் கூறுவார் உண்டானால் நல்லதாகும். பாதி நாளாகிய இரவில் நான் பிரிவுத் துன்பத்தை அனுபவிக்க, மூங்கிலின் அழகுடைய அணைபோன்ற தோளையும் மான்போன்ற நோக்கையும் உடைய பரத்தையருடன் கூடி என்னை மறந்து களித்திருப்பாரே! அதற்காகவாவது வருவாரே! இந்தப் பருவத்தை எடுத்துரைப்பார் எவரும் இல்லையே!"

"பெறுதற்கரிய இளவேனில் காலத்தில் பெருமையுடைய பூங்கொத்துக்களைக்கொண்ட துருத்தியைச்சூழ்ந்து அறல் உண்டாகும்படி வையை ஒழுகும் என்று தலைவருக்குக் கூறுவார் உண்டானால் நல்லதாகும். தலைவனைச் சேருதற்குரிய யான் ஒளிகெட, மன்மதனுக்கு நடத்தும் திருவிழாவில் பரத்தையருடனே விளையாடிக் களித்திருப்பாரே!

---

வெயில் ஒளி அறியாத விரிமலர்த் தண்காவில்
குயில் ஆலும் பொழுது எனக் கூறுநர் உளராயின்;

9. பாஅள்யாம் படர்கூரப், பணை எழில் அணை மென்தோள்
மான்நோக்கின் அவரோடு மறந்து அமைகுவான் மன்னோ;
ஆனாச்சீர்க் கூடலுள் அரும்பு அவிழ் நறுமுல்லைத்
தேன் ஆர்க்கும் பொழுது எனத் தெளிக்குநர் உளராயின்;

3. உறலியாம் ஒளிவாட, உயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடுவான் மன்னோ;
பெறல்அரும் பொழுதோடு பிறங்கு இணர்த்துருத்தி சூழ்ந்து
அறல்வாரும் வையை என்று அறையுநர் உளராயின்;

அதற்காகவாவது வருவாரே! இந்தப் பருவத்தை எடுத் துரைப்பார் எவரும் இல்லையே!" என்று சொல்லிக்கொண் டிருக்கிறாள் தலைவி.

"தணியாத காமநோய் கொண்டு தவித்துச் சாந்தி அடையாதவளாய்த் தலைவி இருக்கிறாள். அவள் உடல் அழகுபெறத் தேரைச் செலுத்தி நீ செல்க. அழகு விளங்கும் பெரிய திண்ணிய தேரைச் செலுத்துவாயாக. உனது அழகிய கழலடியைப் பணிந்து, உன்னுடன் நட்புச் செய்து கொள்ளாத அச்சம் நிறைந்த பகைவரைக் காட்டிலும் உனது பிரிவுக்காகத் தலைவி நடுங்கிக் கொண் டிருக்கிறாள். ஆகையால் விரைவில் செல்க" என்று பாணன் தலைவனை வேண்டினான்.

---

எனவாங்கு,

18. தணியாநோய் உழந்து ஆனாத் தகையவள் தகைபெற
அணிகிளர் நெடும் திண்தேர் அயர்மதி பணிபுநின்
காமர் கழல்அடி சேரா
நாமம்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே.

[புரிந்து = விரும்பி; புலம்பு = துன்பம்; எவ்வாயும் = எல்லா இடங்களிலும்; இருந்தும்பி = கருவண்டு; தொழுவை = மடு; மயிலி யார் = மயில்போன்ற பரத்தையர்; ஆலும் = கூவும்; பானாள் = இரவு; படர் = பிரிவுத்துன்பம்; பணை = மூங்கில்; சீர் = புகழ்; தேன் = வண்டு; ஒளிவாட = அழகுகெட; உயர்ந்தவன் = மன்மதன்; விறல் இழை = வெற்றியை யுடைய ஆபரணத்தை அணிந்த பரத்தையர்; அறைதல் = சொல்லுதல்; தணியாநோய் = காமநோய்; தகைபெற = அழகுபெற; காமர் = அழகிய; நாமம் = அச்சம்; தெவ்வர் = பகைவர்.]

# 30 அவர் அழகைக் காண அவை விடுமா?

[ பகையரசன்மேல் படையெடுத்துச் சென்றிருந்தான் தலைவன். "இளவேனில் பருவ காலத்தில் திரும்பி வருவேன், அதுவரை ஆற்றியிரு" என்று சொல்லிப்போனான். குறித்த காலமும் வந்தது. தலைவன் வரவைக் காணவில்லை. ஆற்றாத தலைவியை ஆற்றியிருக்கும்படி தோழி வற்புறுத்தினாள். தலைவன் வரவை உணர்ந்தாள் தோழி. தலைவியிடம் அதை நயமாகக் கூறுகிறாள்.

ஆற்றினுடைய அதிகமான தண்ணீர் கால்களாகப் பிரிந்து கலங்கல் தெளிந்து அழகுபெற, பெரிய குளத்தின் பக்கத்தில் பக்கத்தில் நுண் மணல் தோன்ற, அம்மணலின் கருமை மறையும்படி அழகு செய்வனபோல ஈங்கையின் வாடற்பூ காம்பு கழன்று மேலே விழ, காதலனைப் பிரிந்தவர் நெற்றிபோலப் பீர்க்கம்பூ விழ, காதலனைச் சேர்ந்தவர் முகம்போலத் தாமரையின் புதிய பூக்களைப் பொய்கை பூக்க, உடம்பை நடுக்கும் பனியும் வாடையும் கையாறு கடைக்கூட்டக் கலக்கம் கொள்ளும் பொழுது இது. முன் பனியும் பின்பனியும் கழிந்த இளவேனிற் காலம் ஆயிற்றே இது. "பொய்யாமல் நான் வருவேன்" என்று தலைவர் கூறிய பருவம் இதுதானே? ஆராய்ந்த ஆபரணங்கள் அணிந்த தோழியே சொல்வாயாக.

---

## பாலைக்கலி 30-ம் பாட்டு.

1. கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற,
நெடுங்கயத்து அயல்அயல் அயிர்தோன்ற, அம்மணல்
வடுத்தார வரிப்பபோல் ஈங்கைவாடு உதிர்பு உகப்,
பிரிந்தவர் நுதல்போலப் பீர்வீயக், காதலர்ப்
புணர்ந்தவர் முகம்போலப் பொய்கை பூப்புதிதுஈன,
மெய்கூர்ந்த பனியொடு மேல்நின்ற வாடையால்
கையாறு கடைக்கூட்டக் கலக்குறாஉம் பொழுதமன்
"பொய்யேம்" என்று ஆயிழாய்! புணர்ந்தவர் உரைத்ததை;

உலகத்திற்கு உணவுகளை விளைக்கும் சந்திர கிரணங்கள் பல பால்போல இருக்கும் இந்த இரவிலே பிரகாசமான அணிகள் குளிரும்படி வந்த வாடைக்காற்று தலைவன் அழகைக்காண விடுமா? உயிரைக் கொண்டுபோகாமல் விடுமா? இருபடையும் பொருதிய போரிலே எதிரியைக் கொன்று, அவன் நாட்டைக் கைக்கொண்டு, யானைமேல் வருபவருடைய வீர அழகைக்காண, அசைகின்ற வாடைக் காற்று விடுமா?

நீண்ட கரும்பின் உயர்ந்த பூ நிறம் கெடும்படி தூற்றி, தோள்கள் நடுங்கி மார்பைச் சேரும்படிக் குளிரைக் கொடுத்துப் பெய்கின்ற இந்தச் சிலவாகிய மழை தலைவன் அழகைக் காண விடுமா? உயிரைக் கொண்டுபோகாமல் விடுமா? முயற்சியாலே வெற்றியுண்டாகும்படி வென்று, அழகிய நல்ல குதிரையின்மேல் வருபவருடைய வீர அழகைப் பருக மழை விடுமா?

புகையென்னும்படி புதரிலே சூழ்ந்துகிடக்கும் பூவைப் போலவும், அழகிய கள்ளை அடக்கிக்கொள்ளாத மொட்டுக்களைப்போலவும் இருக்கும் வெண்மையான பற்களின் நுனிகளை ஒன்றோடொன்று அடிக்கச்செய்து, நடுக்கும் முற்றிய இக் கடும் பனி தலைவர் அழகைக் காணவிடுமா?

---

9. மயங்கு அமர் மாறுஅட்டு மண்வௌவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேல் தகைகாண விடுவதோ?
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதொடு
வயங்கிழை தண்என வந்தஇவ் அசைவாடை;

13. தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பார விடுவதோ?
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோள்அதிர்பு அகம்சேரத் துவற்றும் இச்சின்மழை;

17. பகைவென்று திறைகொண்ட பாய்திண்தேர் மிசைஅவர்
வகைகொண்ட செம்மல்நாம் வனப்பார விடுவதோ?

உயிரைக் கொண்டுபோகாமல் விடுமா? பகைவரை வென்று, திறைப்பணம் கொண்டு, வேகமாக ஓடும் உறுதியான தேரிலே வருபவருடைய தலைமையான வீர அழகை நுகரப் பணிவிடுமா? என்று பயனற்ற வார்த்தைகளைப் பகராதே.

விளங்கிய ஆபரணம் அணிந்தவளே! நாள் குறித்தது பொய்யன்றி, "வருந்துவாள் இவள்" என்று அக்குறித்த காலத்தில் வலிமையான வேலாயுதத்தை யுடைய சேனையின் தலைவர் வந்துவிட்டார். அவர் வருகையை விளக்கப் புகழ் வளர்கின்ற உயர்ந்த கூடலிலே நீண்ட வெற்றிக் கொடிகள் எழுகின்றன பார்" என்று தோழி சொன்னாள்.

தலைவன் வெற்றி யழகைக் காண விழைந்தாள் தலைவி என்னும்போது ஆடவர் வெற்றி யுள்ளத்துக்கும் மடவார் பெண்மை யுள்ளத்துக்கும் தொடர்பு உண்டு என்று தெரிகிறது. ஆகவேதான் பல மொழி இலக்கியங்களும் வீரத்தை யும் காதலையும் மேம்பட்டனவாக விளம்புகின்றன.

---

புகையெனப் புதல்சூழ்ந்து பூஅம் கள் பொதிசெய்யா
முகைவெண்பல் நுதிபொர முற்றிய கடும்பனி;

எனவாங்கு,

22\. வாளாதி: வயங்கிழாய்! "வருந்துவள் இவள்" என
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்யன்றி
மீளிவேல் தானையர் புகுதந்தார்
நீள்உயர் கூடல் நெடுங்கொடி எழவே.

[ கலுழ்தேறி = கலங்கல்தெளிந்த; அயிர் = மணல்; கூர்ந்த = நடுங்க; கையாறு = செயல்ஒழிந்திருத்தல்; மயங்குஅமர் = மூண்ட போர்; அட்டு = கொன்று; பயம் = பலன்; தாள் = முயற்சி; வலம் = வெற்றி; மா = குதிரை; ஆர் = பருக; கழை = கரும்பு; அகம் = மார்பு துவற்றும் = தூற்றும்; செம்மல் = தலைமை; நுதி = நுனி; பொர = சண்டைபோட, அடித்துகொள்ள.]

# 31. இளவேனிலுக்கு விருந்து செய்வோம்.

[ இளவேனில் பருவம் வந்துவிட்டது என்று ஆற்ருதவள் ஆனுள் தலைவி. "நம் காதலர் வரக்கூடிய செய்தி செப்பும் தூது இது; அதற்கு விருந்துசெய்வோம்" என்று தோழி தலைவிக்குச் சொல்கிறுள். ]

மணல், கத்திரி கொண்டு கத்திரித்த மகளிரது கூந்தல் போலக் கிடந்தது. மகளிர் தம் கூந்தலில் ஆபரணமும் பொன்மாலையும் அணிந்திருப்பது போல, மணல்மேலே பல நிறத்தையுடைய பூக்களும் வேங்கைப் பூக்களும் ஒழுங்கு கொண்டு கிடந்தன.

தெளிந்தநீர், நல்ல மதியையுடைய நாள், புதல்வனைப் பெற்றவள் தேமல் போன்ற மாந்தளிர், அறிவால் நிரம்பியவர் தம் காரியம் முடித்தற்குக் காலம் வரும் வரை அமைதியாய் இருப்பது போலக் காலம் வரும்வரையும் மலர்தலில்லாத அரும்புகளைக் கொண்ட கிளைகள், வாசிக்க வல்லவர் வாசிக்கும் யாழ் இசைபோல வண்டுகள் இசை செய்யும் புதர்கள், நல்ல மகளிர் கூத்துக் கண்டார்க்கு விருப்பம் செய்வது போல விருப்பம் உண்டாக்கும் பூங்

---

## பாலைக்கலி 31-ம் பாட்டு.

1\. எஃகு இடைதொட்ட கார்க்கவின்பெற்ற ஐம்பால் போல்
மையற விளங்கிய துவர் மணல் அதுஅது
ஐதாக நெறித்தன்ன அறல் அவிர் நீள் ஐம்பால்
அணிநகை இடையிட்ட ஈகை அம் கண்ணிபோல்
பிணி நெகிழ் அலர்வேங்கை விரிந்தபூ நெறிகொளத்,
துணிநீரால், தூய்மதி நாளால், அணிபெற
ஈன்றவள் திதலைபோல் ஈர்பெய்யும் தளிர் ஒடும்,
ஆன்றவர் அடக்கம் போல் அலர்ச் செல்லாச் சினையொடும்,
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடும்,
நல்லவர் நுடக்கம் போல் நயம் வந்த கொம்பொடும்,

கொம்புகள், நிலையாமையை உணர்ந்தவர் கொடை போலக் கொத்துகள் விரிந்து எல்லோருக்கும் பயன்படும் மரம், அன்பால் கூடினவருடைய தழுவுதலைப் போலச் சுற்றிய கொடி ஆகிய இவற்றால் பொழில்கள் அழகுபெற வந்த இளவேனிலே! எம்மைப் போல விரும்பியவர்களுக்கு நல்லை யாவாயோ? (இதுவரை இளவேனிலைப் பார்த்துக் கூறினாள். இனித் தலைவியை நோக்கிக் கூறுகிறாள் தோழி.)

"தோழி! இளவேனில் காலம் கூறுகிறது பார். குளிர்ந்த அருவியின் பக்கத்தில் மகளிர் பல்லைப் போல இருக்கும் நல்ல முல்லை மலரை வேண்டிய மட்டும் பறித்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறது பார். பறித்து, கமழ்கின்ற கொத்தாகிய தலைமயிருக்குச் 'சூடுக' என்று கூறுகிறது பார். அது மட்டுமா, தலைவனைப் பிரிந்து, பசந்து, துன்பந்தரும் காமநோய் கொண்டு வருந்தும் மகளிருக்கு மருந்தாகி வந்தது பார். மகளிர் நோய்க்குப் பகையாகி வந்தது பார். பகையை ஒடுக்கி நம் இன்னுயிர் தளிர்க்க வந்தது பார். காதலர் அனுப்பிய தூதுபோல் வந்தது பார். துன்ப வார்த்தையைப் போக்குவோம். அந்த இளவேனிலுக்கு இன்பந்தரும் விருந்து செய்வோம்" என்று கூறி உற்சாக மூட்டினாள் தலைவிக்கு.

---

உணர்ந்தவர் ஈகைபோல் இணர் ஊழ்த்த மரத்தொடும்,
புணர்ந்தவர் முயக்கம்போல் புரிவுற்ற கொடியொடும்
நயந்தார்க்கோ நல்லைமன் இளவேனில் எம்போல;
14. பசந்தவர் பைதல் நோய் பகையெனத் தணித்து நம்
இன்னுயிர் செய்யும் மருந்தாகிப் பின்னிய
காதலர் எயிறு எய்க்கும் தண் அருவி நறுமுல்லைப்
போதாரக் கொள்ளும் கமழ் குரற்கு என்னும்
தூதுவந் தன்றே தோழி!
துயர் அறு கிளவியோடு அயர்ந்து ஈகம் விருந்தே.

# 32. “துணை தந்தார்”

[ தலைவன் திரும்பி வருவதைத் தோழி உணர்ந்தாள். தலைவி—தோழி உரையாடலைக் கேளுங்கள். ]

“எந்தநாட்டைக் காட்டிலும் பொன்னும் பொருளும் விளையும் நாடு இந்த நாடு. இந்த நாட்டின் பரந்த அழகைக் காண ஆசைப்பட்ட யாறுகள் கண்களை விழித்துக் கண்டது போல, பக்கத்திலுள்ள குளங்கள் நீர் நிறைந்து நின்றன. குளங்களில் பூக்கள் நிறைந்து பொலிந்தன. அந்த அழகு பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை;

பளிங்கு மணியை ஒத்திருக்கிற கண்ணாடியினுள் பவழம் அழுத்தப்பட்டவை போல அரும்பு விரிகின்ற முருக்கம்பூ இதழ்கள் அழகையுடைய குளங்களிலே காம்பி னின்றும் கழன்று உதிர்ந்தன;

தெளிந்த நீரையுடைய குளங்களிலேயுள்ள பூக்களில் தேன் எடுக்கும் வண்டுகளின் நிழல் தெரிந்தன. தாமும் பூவும் தண்ணீரில் தெரிவதால், அவற்றைப் பார்த்து, மேலும்மேலும் தேன் எடுக்க வண்டுகள் விழைந்தன. அதற் காக நெருங்கிய வண்டுகள் ஆர்த்தன.

---

## பாலைக்கலி 32-ம் பாட்டு.

1. வீறு சால் ஞாலத்து வியல் அணி காணிய
யாறு கண் விழித்தபோல் கயம்நந்திக் கவின்பெற,
மணிபுரை வயங்கலுள் துப்பு எறிந்தவை போலப்
பிணிவிடு முருக்கு இதழ் அணிகயத்து உதிர்ந்து உகத்,
துணிகயம் நிழல் நோக்கித் துதைபு உடன் வண்டு ஆர்ப்ப,

---

(பாலைக்கலி 31-ம் பாட்டின் பதவுரை.)

[ துணிநீர் = தெளிந்தநீர்; ஈர் = ஈர்க்குமரம்; புரிவு = சுற்று தல்; நயந்தார்க்கு = விரும்பியவர்களுக்கு; பைதல்நோய் = துன்பந் தரும் காமநோய்; எயிறு = பல்; ஏய்க்கும் = ஒக்கும்; போதார = வேண்டியமட்டும்; குரல் = கூந்தல். ]

கரையிலுள்ள மரங்கள் எல்லாம் அரும்புகளை விரித்து மணிகளைச் சூடினால் போலப் பூக்களை விட்டன;

காதலர்களைச் சேர்ந்தவர்களின் தழுவிய கை நெகிழ்ந்து விடாதபடி, தாதை உதிர்த்து இளவேனில் வந்தது. பூவின் அழகுள்ள—கண்டாரைக் கவரும் கண்கள் வருந்த நம்மைத் துறந்து சென்றவர் இன்னும் வரவில்லை.

நெருப்பு உருவைப்போல இலவம் பூத்தது; பொரியின் உருவைப் போலப் புன்குகள் பூக்களை உதிர்த்தன; புதிய மலரையுடைய கோங்கம் பொன்னெனத் தாதை ஊழ்த்தன; இக்காட்சி, காதலரைப் பிரிந்து தனித்திருப்பாரைப் புறத்தே தள்ளி அவமதித்து, வெறுத்து, ஆக்கிரமிப்புச் செய்து ஆரவாரம் செய்வது போன்றிருந்தது. பொழுது பார்த்திருக்கும் பசப்பு, அச்சமயத்தை உபயோகித்துக் கொண்டு எனது அழகைப் போர்த்திவிடப் பார்க்கிறது.

---

மணிபோல அரும்பு ஊழ்த்து மரம் எல்லாம் அலர்வேயக்,
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது
தாதுஅவிழ் வேனிலோ வந்தன்று; வாரார் நம்
போது எழில் உண்கண் புலம்ப நீத்தவர்;

எரிஉரு உறழ இலவம் மலரப்,
பொரிஉரு உறழப் புன்குபூ வுதிரப்,
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாது ஊழ்ப்ப,
தமியார்ப் புறத்து எறிந்து எள்ளி முனிய வந்து
ஆர்ப்பதுபோலும்; பொழுது எண்ணி அந்நலம்
போர்ப்பது போலும் பசப்பு;

காதலனைப் பிரிந்த மகளிரை இகழ்ந்து சிரிக்கக் காலம் வரவில்லையே என்று நொந்திருந்து, அதுவந்ததும் சிரித்தல் போலப் பூக்களைப் பூத்தன கிளைகள்; அது கண்டு, காதலனை நினைத்து வருந்தி அழிவதுபோல இருக்கிறது என் நெஞ்சு; இகழ்ந்து, கூட்டம் சேர்ந்து ஆடுவனபோல இருக்கின்றன மயில்கள்; கையிலிருந்து கழலுவனபோல இருக்கின்றன வளையல்கள்; என் கண்களிலிருந்து ஒழுகும் கண்ணீர் போல அறல் ஒழுகும் பருவத்தும் அவர் வரவில்லை. அதனால், இக்காமநோய் இன்னும் அதிகமாவது போல இருக்கிறது.

நரம்பின் இனிய குரலைத் தானத்திலே நிறுத்தும் இசைக் குழலைப் போல, ஒலிக்கும் ஓசையை யுடைய வண் டுடனே தும்பியும் தாதுகளை ஊதுகின்றன. நமக்கு நோவு உண்டாகக் கரிய குயில்கள் கூவுகின்றன. இப்படி இருக்க வும் தலைவர் தம் வரவிற்குத் தூது ஒன்றும் விடவில்லை. நம்மைத் துறப்பாரோ? துறவாமல் மறவாது வருவாரோ? தோழியே கூறாய்" என்று தலைவி கேட்டதற்குத் தோழி,

16. நொந்து, நகுவனபோல் நந்தின கொம்பு; நைந்து உள்ளி
உகுவதுபோலும் என் நெஞ்சு; எள்ளித்
தொகுபுடன் ஆடுவபோலும் மயில்; கையில்
உகுவன போலும் வளை; என்கண் போல்
இகுபுஅறல் வாரும் பருவத்தும் வாரார்
மிகுவதுபோலும் இந்நோய்;

22. நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல்போல்
இரங்கு இசை மிஞிறொடு தும்பி தாது ஊதத்
தூதுஅவர் விடுதரார்: துறப்பார் கொல்? நோதக
இருங்குயில் ஆலும் அரோ;

"நீலமலர் போலும் கவர்ச்சியான கண்ணையுடையாய்! நம்மை இகழும் குயிலையும் நம்மைப் பிரிந்த தலைவரையும் புலவாதே. அவர் குறித்த நாள் பொய்யாதிருக்கத் தேரில் வந்தார். மாலைதொங்கிய அகன்ற மார்பையுடைய தலைவர் காற்றைப் போன்ற கடும் வேகமுடைய திண்ணிய தேரை விரைவாகச் செலுத்தி வந்தார். அதனால் நாம், நமது பின்னிய கூந்தலின் பின்னல் உலைய, அவரைக் காண ஓடும்படி செய்தார்" என்று பதில் கூறினாள்.

---

எனவாங்கு,

27. புரிந்துநீ எள்ளும் குயிலையும் அவரையும் புலவாதி:
நீல்இதழ் உண்கணாய்! நெறி கூந்தல் பிணிவிட
நாள்வரை நிறுத்துத் தாம் சொல்லிய பொய்யன்றி
மாலைதாழ் வியன் மார்பர் துனைதந்தார்
கால்உறழ் கடும் திண்தேர் கடவினர் விரைந்தே.

[ வீறு = செல்வப்பெருமை; சால் = நிறைந்த; ஞாலம் = பூமி; வியல் = அகன்ற; காணிய = காணும்பொருட்டு; கயம் = குளம்; புரை = போல; வயங்கல் = கண்ணாடி; துப்பு = பவழம்; எறிந்தவை = பதித்தவை; பிணி = பிடிப்பு; முருக்கிதழ் = முருக்கின்பூஇதழ்; துணிகயம் = தெளிந்தநீருடையகுளம்; துதைபு = நெருங்கி; போது = பூ; உண்கண் = கண்டார் மனதைக்கவரும்கண்; புலம்ப = வருந்த; உறழ = போல; எள்ளி = அவமதித்து; முனிய = வெறுக்க; நகுவன = சிரிப்பன; நைந்து = வருந்தி; உகுவன = கழலுவன; கால் = காற்று; துனைதந்தார் = ஓடும்படிவேகம்செய்தார். ]

# 33. நன்றியுள்ள மரம்

[இளவேனில் பருவத்தைப்பார்த்து வருத்தப்பட்டாள் தலைவி. ஆற்றியிருக்கவேண்டும் என்று அதிகாரம் செய்தாள் தோழி. ஆற்ருத்தன்மை அதிகமாயிற்று. தலைவன் திரும்பிவரும் செய்தி தெரிந்தது தோழிக்கு. ஓடி, உவகை பொங்க, உற்சாகம் மீறத் தலைவியைத் தட்டிக்கொடுத்துச் செய்தி தெரிவிக்கும் பாங்கைப் பாருங்கள்.]

பெருமை பொருந்திய உயிர்கள் வாழ, அகன்ற உலகைக் காப்பாற்றக் கால்வாய்களில் அதிகத் தண்ணீரைப் போக்கி, நிலங்கள் எல்லாவற்றையும் தண்ணீரால் ஊட்டி, அவ்வாறு செய்தபின் கொஞ்ச நீரால் அந்தக் கால்வாய்களில் அறல் ஒழுக்கும் யாறுகள் அழகு பெறுகின்றன!

முதலில் ஒருவர் ஒரு உதவி செய்கிருர். அந்த உதவியைப் பெறுகிருர் மற்ருெருவர். முதலில் உதவி செய்தவருக்கு ஒரு கெடுதல் வருகிறது. உதவி பெற்றவர் அந்தக் கெடுதலைத் தடுத்து நிறுத்துகிருர்; அது மட்டுமா, கெடுதலைக் கெடுத்து அழித்து விடுகிருர். ஒரு உதவியும் செய்கிருர். அச் செய்கை நன்றி மறவாத தன்மையைக் காட்டுகிறது. அவரைப் பெருமையுடைய தொழிலைச் செய்தவர் என்று அழைக்கிருேம். ("பீடுடையாளர்" என்று கலித்தொகை ஒலிக்கிறது!)

---

## பாலைக்கலி 33-ம் பாட்டு.

1. மன்னுயிர் ஏமுற மலர்ஞாலம் புரவுஈன்று
பன்னீரால் கால்புனல் பரந்துஊட்டி இறந்தபின்
சின்னீரால் அறல்வார அகல்யாறு கவின்பெற,
முன்ஒன்று தமக்குஆற்றி முயன்றவர் இறுதிக்கண்
பின்ஒன்று பெயர்த்து ஆற்றும் பீடுடையாளர்போல்

சுரும்புகள் விரும்பி ஒலிக்க, வண்டுகள் வாய்விட்டு ஆர்ப்ப, அவைகளைக் கவனியாது, தாளால், ஆற்றின் தண்ணீரை உண்டு நன்றிகாட்டத் தலையால் தம் மலரை ஆற்றில் உதிர்க்கின்றன மரங்கள், பீடுடையாளரைப்போல. இப்படி இளவேனில் எழுந்தருளுகிறது!

"விரிந்த காஞ்சி மலரின் பூந்தாதில் புரண்டு, கரிய குயில் கூவும் சமயத்திலும், காதலியைப் பிரியக்கருதிய கலங்காதவருடைய தீமையை மறைப்பேன். அப்படி மறைத்தாலும், "பொய்ச்சாட்சி சொல்லியவன்" போய்த் தங்கியிருந்த மரம் பொலிவிழப்பதுபோல, எனது அழகுகள் எல்லாம் பறக்க, காம எரியைப் பொத்திவைத்து என் நெஞ்சு சுடுமானால் யான் என்ன செய்வேன்?

"பாரம் தாங்கமுடியாமல் தத்தளித்து நிற்கும் கிளைகளின் மேல் வண்டின் கூட்டம் கொண்டாட்டம் போட்டுத் தங்குதல் செய்யும் சமயத்திலும், தன்னிலைமையைப் பேணிக் காக்கும் தலைவருடைய தீமையை மறைப்பேன்.

---

பன்மலர் சினையுகச் சுரும்பு இமிர்ந்து வண்டுஆர்ப்ப
இன்னமர் இளவேனில் இறுத்தந்த பொழுதினுன்;

8. விரிகாஞ்சித் தாதுஆடி இருங்குயில் விளிப்பவும்
பிரிவுஅஞ்சாதவர் தீமை மறைப்பென்மன்: மறைப்பவும்,
கரிபொய்த்தான் கீழ்இருந்த மரம்போலக் கவின்வாடி
எரிபொத்தி என்நெஞ்சம் சுடுமாயின் எவன்செய்கோ?

12. பொறைதளர் கொம்பின்மேல் சிதர்இனம் இறைகொள
நிறைதளராதவர் தீமை மறைப்பென்மன்: மறைப்பவும்,

அப்படி மறைத்தாலும், நீதிதவறி, மக்கள் நெஞ்சம் குமுற ஆண்ட மன்னவன் குடிகள் போலக் கலங்கிப் பொறுக்கமுடியாமல் நீரை ஒழுக்கும் கண்கள் என்னிடம் உண்டானல் யான் என்ன செய்வேன் ?

"கிளையிலுள்ள பூமொட்டுகளை அலர்த்தும் வண்டுகள் யாழ்போல வாய்விட்டு ஊதும் சமயத்திலும், கொள்கையில் கோணுத தலைவருடைய தீமையை மறைப்பேன். அப்படி மறைத்தாலும், உறவினர் பாழ்பட்டுப்போக எல்லாம் தனக்கே சொந்தம் என்று வாழ்பவன் செல்வம் குறைவது போல வளையல்கள் கழன்றுபோகும் தோள்கள் என்னிடம் உண்டானல் யான் என்ன செய்வேன்?" என்று சொல்லி, உன் நெஞ்சிலுள்ள நோயைக்கூறிக் கலங்காதே.

எல்லா ! நாம் எண்ணிக் கொண்டிருந்த நாள் கடந்து போகாமல் காதலர் வந்து விட்டார். அது எப்படி இருக்கிறது தெரியுமா? கண்கொண்ட துன்பத்தைக் கை நீக்கினல்போல இருக்கிறது. எப்படிவந்தார் தெரியுமா? குதிரை

---

முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாரும் கண்ணுயின் எவன்செய்கோ ?

16. தளைஅவிழ் பூஞ்சினைச் சுரும்பு யாழ்போல இசைப்பவும்
கொளை தளராதவர் தீமை மறைப்பென்மன்: மறைப்பவும்,
கிளையழிய வாழ்பவன் ஆக்கம்போல் புல்லென்று
வளைஆனெகிழ்பு ஓடும் தோளாயின் எவன்செய்கோ?

முன்னமே தேரில் பூட்டி ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. அந்தத்தேரில் ஏறி ஓடிவந்து விட்டார்.

---

எனவாங்கு,

21. நின்னுள்நோய் நீஉரைத்து அலமரல்: எல்லா! நாம்
எண்ணிய நாள்வரை இறவாது காதலர்
பண்ணிய மாவினர் புகுதந்தார்
கண்ணுறு பூசல் கை களைந்தாங்கே.

[ ஏமுற = உயிர்வாழ; மலர் = அகன்ற; ஞாலம் = பூமி; புரவு = கொடை; ஈன்று = கொடுத்து; கால் = கால்வாய்கள்; இறந்த பின் = அது கழிந்த பின்பு; அறல்வார = அறல்ஒழுக்க; கவின் = அழகு; இறுதிக்கண் = கேடுவந்த விடத்தில்; சுரும்பு = ஆண் வண்டு; இமிர்ந்து = ஆரவாரம் செய்து; இருங்குயில் = கரியகுயில்; கரி = சாட்சி; எரி = காமத்தீ; பொறை = பாரம்; சிதர் இனம் = வண்டுக் கூட்டம்; இறைகொள = தங்குதல் செய்ய; பொறை தளர்பு = பொறுக்கமுடியாமல்; கொளை = கொள்கை; ஆக்கம் = செல்வம்; அலமரல் = கலங்காதே; இறவாது = கடவாமல்; பண்ணியமாவினர் = ஆயத்தம்செய்த குதிரையையுடையவர்; பூசல் = துன்பம்; எல்லா = (இங்கே) தோழி! என்று கூப்பிடுவதுபோல.]

# 34 "எடுத்த காரியம் வெற்றி யடைக"

[தலைவியின் துன்பம் கண்டு வற்புறுத்துகிறாள் தோழி. 'இதுதானே அவர் திரும்பி வருவதாகச் சொன்ன பருவம்' என்று தலைவி கேட்கிறாள். "நீ வருந்தாதே. அவர் வந்தார்" என்கிறாள் தோழி.]

எல்லா! நீ கேள். சோம்பேறித்தனம் இல்லாதவன் செல்வம் வளர்வதுபோல மரங்களெல்லாம் பூக்கள் விட்டு வளர்கின்றன. அந்தச் செல்வத்தை மேன்மை கருதி மன மகிழ்ந்து ஏற்பாடு செய்யும் உணவுத் திட்டப்படி பெற்று அனுபவிக்கும் மகிழ்ச்சிபோலப் பலகிளைகளிலும் வண்டுகள் தேனை உண்டு ஆரவாரிக்கின்றன. கருநிறத்தாள் மேனி போலக் கிளைகள் தளிரை ஈனுகின்றன. அவள் மேனி மேலே ஏற்பட்ட தேமலைப்போல அந்தத் தளிர்மேலே பூந் தாதுகள் உதிர்கின்றன. மலர்பரந்த சோலையை நெருங்கிக் கலங்கல் இல்லாத தண்ணீருடைய குளங்கள் நிற்கின்றன. பூப்பரந்த துறைகளை நெருங்கி, நுண் மணலைக் கோலம் செய்து அறல் நீர் ஒழுகுகிறது. காதலரைப் பிரிந்தாரை

---

**பாலைக்கலி 34-ம் பாட்டு.**

1. மடியிலான் செல்வம்போல் மரன்நந்த, அச்செல்வம்
படி உண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞிறு ஆர்ப்ப,
மாயவள் மேனிபோல் தளிர்ஈன; அம்மேனித்
தாய சுணங்குபோல் தளிர்மிசைத் தாதுஉக,
மலர்தாய பொழில் நண்ணி மணிநீர்க் கயம்நிறப,
அலர்தாய துறைநண்ணி அயிர்வரித்து அறல் வார,
நனிஎள்ளும் குயில்நோக்கி இனைபுகு நெஞ்சத்தால்
துறந்துள்ளார் அவர்எனத் துனிகொள்ளல் எல்லாநீ;

மிகவும் இகழும் குயிலைப்பார்த்து, துன்பம் புகுந்த நெஞ்சத்தால் அவர் பிரிந்து மறந்தார்" என்று சொல்லித் துன்பம் கொள்ளாதே என்றாள் தோழி. அப்போது தலைவி சொல்கிறாள்.

விளங்கிய நெற்றியையுடைய தோழியே! கண்ணில் நீர் நில்லாவாகிப் பெருக்கெடுக்க, அன்பை மனதிலே கொண்டு அவரை வழியனுப்பினோம். அந்தச் சமயத்தில் அவர் திரும்பிவரும் காலத்தைச் சொன்னார். அது இன்பம் விஞ்சும் வையை யாற்றின் உயர்ந்த மணற் குன்றிலே, குளிர்ந்த அருவி நீராலே வளர்ந்த நறுமணமுள்ள முல்லையின் தாதைப் பொன்வண்டு ஆரவாரித்து உண்ணும் பொழுதல்லவா ?

பிரகாசமான அணியையுடைய தோழியே! "எடுத்த காரியம் வெற்றியடைவதாக" எனவாழ்த்தி வணங்கி அவரை வழியனுப்பினோம். அந்தச் சமயத்தில் அவர் திரும்பிவரும் காலத்தைச் சொன்னார். அது, செழித்த ஆற்றிடைக் குறையிலே மன்மதனுக்கு நடத்தும் திருவிழாவில் பரத்தையருடன்கூடி விளையாடும் இளவேனில் பொழுதல்லவா ?

---

9. வண்ணவண்டு இமிர்ந்து ஆனு வையை வார்உயர் எக்கர்த்
தண்அருவி நறுமுல்லைத்தாது உண்ணும் பொழுதுஅன்றோ?
கண்ணிலா நீர்மல்கக் கவவிநாம் விடுத்தக்கால்
ஒண்ணுதால்! நமக்குஅவர் வருதும் என்று உரைத்ததை;

13. மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதுஅன்றோ?
'வலனாகவினை' என்று வணங்கிநாம் விடுத்தக்கால்
ஒளியிழாய்! நமக்குஅவர் வருதும் என்று உரைத்ததை.

சுடர்விடும் நகையையுடைய தோழியே! பலவற்றையும் நினைக்கும் நெஞ்சையுடைய நாம், கடமைகருதி அன்புடன் அவரை வழியனுப்பினோம். அந்தச் சமயத்தில் அவர் திரும்பிவரும் காலத்தைச் சொன்னார். அது பூமியிலுள்ள மக்கள் நாவில் பல தடவையும் வழங்கிவரும் நீண்ட மாடங்களையுடைய மதுரையிலுள்ள அறிவு நிறைந்த சான்றோர் நாவில் பிறந்த கவிகளின் புதுமையைக் கொண்டாடும் இளவேனில் பொழுதல்லவா? இதைக்கேட்டுத் தோழி மறுமொழி கூறுகிறாள்.

நினைக்கும் தோறும் நெஞ்சு உடைந்து போகும்படி இருக்கிறாய். உனது காமநோய்க்காகப் பெருமூச்சுவிட்டு வருந்தி, நம்மை இகழாத காதலர் நம்முடன் சேரவந்தார். பறவைபோல் பறக்கும் அழகிய கடுமையான திண்ணிய தேரையுடைய, பொதிய மலையைத் தன் பொருளாகக் கொண்ட பாண்டியனின் உண்மையான பேச்சுப் போன்ற தப்பாத நல்ல நாள்பார்த்து, அந்தத் தினத்திலே தலைவர் வந்தார்—என்று மகிழ்ச்சிச் செய்தியைப் புகழ்ச்சியாகச் சொல்கிறாள் தோழி.

---

17. நிலன்நாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலன் நாவில் பிறந்தசொல் புதிதுஉண்ணும் பொழுதுஅன்
பலநாடும் நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால் [றோ?
சுடரிழாய்! நமக்குஅவர் வருதும் என்று உரைத்ததை.

எனவாங்கு,

22. உள்ளு தொறுடையும்நின் உயவுநோய்க்கு உயிர்ப்பாகி
எள்ளறு காதலர் இயைதந்தார் புள்ளியல்
காமர் கடுந்திண் தேர்ப் பொருப்பன்
வாய்மை யன்ன வைகலொடு புணர்ந்தே.

(பண்டு, புலவர்களின் அன்பு, அருள், அறிவு முதலியவற்றில் தோய்ந்தெழுந்த அழகிய செய்யுட்களிலும் அவற்றின் அரும்பொருள்களிலும் நயங்களிலும் தமிழ் மக்கள் மனஞ் செலுத்துவாராய் இருந்தனர். புலவர்களின் புதுப் புதுக் கருத்துக்களைத் தமிழ் மக்கள் அறிவிற்கு விருந்தாகுமென்று, அவற்றைக் கேட்பதை ஒரு கடமையாகவும் ஒரு இனிய பொழுது போக்காகவும் கொண்டிருந்தனர். அதற்காக, மதுரை முதலிய ஊர்களில் இளவேனிற் காலத்தில் தமிழ்த்திருநாள் நடத்துவதும் உண்டு.)

---

[ மடி = சோம்பேரித்தனம்; நந்த = வளர; படி = ஒருநாளைக்கு ஏற்படுத்திய உணவுப்படி; (படி—போடுல் என்பதுபோல்) நுகர்ச்சி = அனுபவிப்பு; பல்சினை = பலகிளைகள்; மிஞிறு = வண்டு; மாயவள் = கருநிறமேனியுடையவள்; சுணங்கு = தேமல்; மலர்தாய = மலர் பரந்த; மணிநீர் = தெளிந்த நீரையுடைய; இனை = துன்பம்; துனி = துன்பம்; வண்ணவண்டு = பொன்வண்டு; எக்கர் = மணல்திட்டு, கண்ணில்லாநீர்மல்க,என்க; மகிழ்துணை = மகிழ்வைக்கொடுக்கும் துணை போன்ற பரத்தையர்; வில்லவன் = மன்மதன்; "வலனாகவினை" = எடுத்தகாரியம் இனிதுமுடிவதாக; நிலன் = பூமியிலுள்ள மக்கள்; திரிதரூஉம் = பலதடவையும் வழங்கும்; புலன் = அறிவு; பரிந்து = அன்புடன்; உள்ளுதொறும் = நினைக்கும்தோறும்; உயவுநோய் = காமநோய்; உயிர்ப்பாகி = பெருமூச்செறிந்து; எள்ளறு = இகழ்ச்சியைக் கைவிட்ட; புள் = பறவை; காமர் = ஆசைப்படும்; பொருப்பன் = பொதிகை மலையை யுடையவன். ]

# 35. கவியின் இசையரங்கு.

[ இளவேனில் பருவத்தைப் பார்த்து ஆற்றாதவளாகிறாள் தலைவி. தோழி அவளைத் தேற்றக் கருதுகிறாள். அத்தோழிக்குத் தலைவி கூறுவதும் தலைவிக்குத் தோழி கூறுவதும் கீழே காண்க. ]

தோழி! கொடுமையும் வலிமையும் கொண்ட கலப்பைப்படை யுடைய பலராமன் கழுத்தில் அணிந்த துழாய் மாலைபோல, வெண்கடம்பு மரத்தின் உயர்ந்த இடத்திலே நின்று பச்சைமயில்கள் சிறுடன் ஆடுகின்றன.

(வெண்கடம்பு மரம் பலராமன் போலவும் பச்சைமயில்கள் அவன் மார்பின் துழாய்மாலை போலவும் இருக்கின்றன என்பது கவியின் கருத்து.)

ஆராய்ந்த நரம்புகள் ஒலிப்பன போல, ஆண்வண்டும் பெண்வண்டும் அந்த மரத்தில் ஆரவாரிக்கின்றன. வளையல் அணிந்த கையையுடைய பாடும் மகளின் இராகம் போல, தும்பிவந்து இசை செய்கின்றது. இனிமையான பல வாத்தியக் கருவிகளையும் மீட்டி ஓசை எழுப்பியது போல, எங்கும் 'இம்' என்னும் ஓசை உண்டாகக் குளங்கள் சூழ்ந்த சோலையில் வாசனை யுடைய மலர்களில் தேன் வண்டினங்கள் ஊதுகின்றன.

---

## பாலைக்கலி 35-ம் பாட்டு

1. கொடுமிடல் நாஞ்சிலான் தார்போ ல்மராத்து
நெடுமிசைச் சூழும் மயில் ஆலும் சீர,
வடிநரம்பு இசைப்பபோல் வண்டொடு சுரும்பு ஆர்ப்பத்
தொடிமகள் முரற்சிபோல் தும்பிவந்து இமிர்தர
இயன் எழீஇயவை போல எவ்வாயும் இம் எனக்
கயன் அணி பொதும்பருள் கடி மலர்த் தேன் ஊத,

(ஆண்வண்டையும் பெண்வண்டையும் யாழாகவும், தும்பியைப் பாடும் மகளாகவும், தேன் வண்டினங்களை மற்றைய வாத்தியக் கருவிகளாகவும் அமைத்துப் பாட்டுக் கச்சேரி ஒன்று இங்கே கவி நாட்டிவிட்டார்.)

பூ முடிப்பாரைத் தம்மிடத்திலே அழைப்பன போல, மரங்கள் மலர்களை ஆராய்ந்து அலர்த்துகின்றன. கருங் குயில்கள் கூவுகின்றன.

இந்தக் காட்சிகளுடனே பெரிய நீர்த்துறைகள் அழகு பெற, மன்மதனுக்கு நிகழ்த்தும் திருவிழாவை எதிர் கொள்ளும் இளவேனில் காலம் சீர்பெற்றுச் செவ்வியுடன் வந்தது. இங்ஙனம் இக்காலம் வந்தும் நம் காதலர் வரவில்லை.

ஆதலால் எனது நுதல் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பசந்துவந்து, பின்பு முழுமையும் பசந்தேவிட்டது! எனது தோள்கள் கொஞ்சம் கொஞ்சமாய் மெலிந்து வந்து, பின்பு மிகவும் மெலிந்தேவிட்டன!

---

மலராய்ந்து வயின்வயின்விளிப்பபோல் மரன் ஊழ்ப்ப,
இருங்குயில் ஆலப் பெருந்துறை கவின் பெறக்
குழவிவேனில் விழவு எதிர் கொள்ளும்
சீரார் செவ்வியும் வந்தன்று
வாரார் தோழி நம் காதலோரே;

12. பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்;

மிகவும் அறல் ஒழுகும் இளவேனில் காலம் இது என்று கண்டு, வெம்மை கலந்த கண்ணீரை எனது கண்கள் ஒழுக்குகின்றன.

மலைநடுவே போன காதலர் திரும்பிவருதலை ஆசைப் பட்டு என் நெஞ்சு காமநோயொடு கொழுந்துவிட்டு எரிகிறது.

நான் காதலிக்கிறவர் என்மேல் காதலில்லாது பிரிந்து விட்டாரோ? காதல் உள்ளவராயின் ஒரு தூது அனுப்பி யிருப்பாரே, அது மறந்தாரோ? நான் வருந்தியிருந்து காதலர் காதலைக் காண்பேனோ? அல்லது இறந்து போவேனோ? நான் இறவாமல் வருந்தி இங்கேயே இருக்க என்னைத் துறந்த காதலர் அங்கே அங்கே தங்கிவிடுவாரோ? எது நடக்குமோ?" —என்று தலைவி கவலை கொள்கிறாள். தலைவியது நிலைமையைக் கண்டு அவள் பேச்சைக்கேட்டுத் தோழி வருந்தும் வருத்தத்தைப் பாருங்கள்.

---

14. நனி அறல்வாரும் பொழுதென வெய்ய
பனியறல் வாரும் என்கண்;

16. மலையிடைப் போயினர் வரல் நசைஇ நோயொடு
முலையிடைக் கனலும் என் நெஞ்சு;

18. காதலிற் பிரிந்தார் கொல்லோ? வறிதுஓர்
தூதொடு மறந்தார் கொல்லோ? நோதகக்
காதலர் காதலும் காண்பாம் கொல்லோ?
துறந்தவர் ஆண்டுஆண்டு உறைகுவர் கொல்லோ? யாவது

கத்திரியால் நுனியைக் கத்திரித்து அழகுடன் விளங்கும் கூந்தலையுடையவளே ! காதலர் அயல் நாட்டிலே பிரிந்திருந்தாலும், அது உலகத்துக்குப் பொருந்தும். அவர் அங்ஙனம் தங்கி, அவர் குறித்த நாளில் திரும்பி வாரா விட்டால், அந்நாள் வந்து உன் அழகைச் சிதைத்தலும் கூடும் என்று கருதி நான் பயந்துகொண்டிருக்கிறேன். நல்ல நூல் கேள்வியையுடைய அந்தணர்கள் விருப்பத் துடனே நடத்தும் வேள்வியிடத்திலே உண்டாகும் புகை போல அதைநினைத்து எனக்குப் பெருமூச்சு உண்டா கிறது. இது தான் நான் அனுபவிக்கும் வருத்தம். ஆகையால் ஆற்றியிரு. 'இடும்பைக்கே கொள்கலம் போலும் குடும்பத்தைக் குற்றம் மறைப்பாள் உடம்பு' என்று சொல்லித் தேற்றினாள்.

---

22. "நீளிடைப் படுதலும் ஒல்லும் ; யாழநின்
வாள் இடைப் படுத்தவயங்கீர் ஓதி !
நாளணி சிதைத்தலும் உண்டு என, நயவந்து
கேள்வி அந்தணர் கடவும்
வேள்வி ஆவியின் உயிர்க்கும் என் நெஞ்சே.

[ மிடல் = வலிமை; நாஞ்சில் = கலப்பை; தார் = மாலை; மராத்து = வெண்கடம்புமரம்; வடிநரம்பு = வடித்தநரம்பு; தொடி மகள் = இங்கே பாடும்மகள்; முரற்சி = இசை; எவ்வாயும் = எல்லா இடங்களிலும்; பொதும்பர் = சோலை; தேன் = தேன்வண்டு; விளிப்பபோல் = அழைப்பபோல்; குழவிவேனில் = இளவேனில்; பாஅய்ப் பாஅய் = பசந்துபசந்து; சாஅய்ச் சாஅய் = மெலிந்து மெலிந்து; பனியறல் = இங்கே கண்ணீர்; ஆண்டு = அங்கே; நயவந்து = விரும்பி; வேள்வி = யாகம். ]